
கோகுலம்

GOKULAM | ஏப்ரல் 2000 | ரூ. 6/-




பிருந்தாவனம்



பத்து வித்தியாசங்களைக்
கண்டுபிடியுங்கள்!

விடை: 1. கூரை 2. கைத்தடி 3. மீசை 4. பனியன் 5. பாக்கெட் 6. ஷூ 7. மட்டை 8. பந்து 9. தொப்பி 10. பெண்ட்.




எந்த கார் விரைவில் எல்லையை அடையும்?

விடை : 3

புள்ளிகளை இணையுங்கள்!




வண்ணம்
தீட்டுங்கள்!



அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

ஏப்ரல் என்றாலே பரீட்சை நினைவுதான் வரும். ரொம்ப மும்முரமாக பரீட்சைக்குத் தயார் செய்து கொண்டிருப்பீர்கள். இருந்த போதிலும் கோகுலம் படிக்க நாள்தோறும் சில நிமிஷங்கள் ஒதுக்கிக் கொள்ளுங்கள். பாடங்கள் படித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு மாறுதலுக்காக இரண்டு பக்கம் கோகுலம் படித்துவிட்டு, மறுபடி பாடப் புத்தகத்துக்குச் சென்றால் அலுப்புத் தட்டாமல் இருக்கும்.

உங்களைவிட வயதிலும் அனுபவத்திலும் பெரியவன் என்ற முறையில் ஒரு விஷயம் சொல்கிறேன். பாடத்தைப் புரிந்து கொண்டு படியுங்கள். புரியாவிட்டால் கூச்சப்படாமல் தக்கவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உருப் போடுவதால் பரீட்சை பாஸாகி விடலாம்; ஆனால் வாழ்க்கைக்கு உதவாது. ஏன் என்று சொல்கிறேன்:




படிப்பு வராவிட்டால் உடலால் உழைத்துப் பிழைத்துக் கொள்ளலாம் என்ற நிலைமை நேற்றும் இன்றும் உள்ளது. ஆனால் எதிர்காலத்தில் இது சாத்தியப்படாது. உடலால் உழைப்பவர்கள் கூட சிந்திக்க வேண்டியது அத்தியாவசியமாகும். எப்படி? ஒரு விவசாயி, உழுது பயிரிட்டால் போதாது. எந்தப் பருவத்தில் என்ன பயிரிடலாம், நவீன விஞ்ஞான ஆய்வின்படி எப்படி அதைப் பயிர் செய்ய வேண்டும் என்ற நுணுக்கமான விவரங்களை அவர் கம்ப்யூட்டரைப் பயன்படுத்தித் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கும். அப்படி இல்லை என்றால் இவர் பின் தங்கிப் போவார்; மற்றவர்கள் முன்னேறி விடுவார்கள். அதே போல ஒரு பட்டுப் புடைவை நெசவாளி எந்த டிசைனுக்கு இன்று மவுசு உலகின் எந்தப் பகுதியில் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளவும் அந்த டிசைனைத் தறியில் கொண்டு வரும் நுணுக்கத்தை அறியவும் கம்ப்யூட்டரைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். இப்படியே ஒவ்வொரு துறையிலும் கம்ப்யூட்டர் இன்றியமையாததாகிவிடும். எனவே கம்ப்யூட்டரைப் பயன்படுத்தவும் அதை புரோகிராம் செய்யவும் கூட உழைப்பாளிகளும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற நிலை உருவாகப் போகிறது. அதாவது, யாராயிருந்தாலும் மூளைக்கு வேலை கொடுத்துத்தான் முன்னேற வேண்டும் என்ற கட்டாயம்.

இதற்காகத்தான் பாடங்களைப் புரிந்து கொண்டு படிக்க முயற்சி செய்யுங்கள் என்கிறேன். புரிந்து கொள்ள முயலும்போது மூளைக்குப் பயிற்சி ஏற்படுகிறது. எத்தனைக்கெத்தனை மூளைக்குப் பயிற்சி கொடுக்கிறோமோ அத்தனைக்கத்தனை சிந்தனாசக்தி பெருகும். புதிய கோணங்களில் சிந்தித்து, பலரையும் கவர்ந்து முன்னேற வாய்ப்புகள் உருவாகும். எதிர்கால வாழ்க்கை வளமானதாக அமையும். அப்படி அமைய இன்றே முயற்சி தொடங்குங்கள்.

வாழ்த்துகள்!

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்.



கோகுலம்

2000

ஏப்ரல்

மலர் : 18

இதழ் : 3

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.

கோகுலம்

* அன்புள்ள சிறுவர் சிறுமியரே – 1
* இந்த இதழில்... – 2
* கோகுலம் நியூஸ்! – 2
* பயமுறுத்திய பிரம்பு! (என் குழந்தைப் பருவம்!) – 4
* அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டி முடிவுகள்! – 8
* கறையான் தின்ற எடைக்கல்! (படக்கதை) – 9
* வாய்க்குள் புகுந்த பாம்பு! (நகைச்சுவைக் கதை) – 12
* விடுதலை கேட்கும் விழிகள்! (பாடல்) – 14
* குறுக்கெழுத்துப் புதிர் – 15
* கொசுவை விரட்டும் சட்டை! (பிருந்தாவனம்) – 16
* மானைத் துரத்திய புலி! – 20
* குறுக்கெழுத்துப் புதிர் விடை – 24
* உண்மை புரிந்தது! (படக்கதை) – 25
* நகரும் வீடு! – 28
* தங்கச் சிலை! (தொடர்கதை) – 32
* ஓவியப் போட்டி – 36
* நாள் முழுவதும் ரசிக்கலாம்! (எங்கள் ஊருக்கு வாருங்கள்) – 37
* ஆஹா, மாம்பழம்! – 40
* 100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு! – 42
* சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்! (படக்கதை) – 44
* ஓவியப் போட்டி முடிவுகள் – 48
* கோகுலம் க்விஸ் முடிவு – 50
* அதிசய நாய் ராஜாவின் சாகசங்கள்! (உங்கள் நூலகம்) – 50
* இனி ஒரு தொண்டு செய்வோம்! (முதல் பரிசுக் கதை) – 52
* ஆலமரம் (பாடல்) – 57
* ஒரு சாண் குட்டையில் ஒரு முழ வால் – அது என்ன? (விடுகதைப் பக்கம்) – 58
* எருமை பேசிய நீதி (புராணக்கதை) – 60
* வயிற்றுப் பகுதியை எவ்வாறு எக்ஸ்-ரே

கோகுலம் நியூஸ்

அதிசயச் சிறுவன்!

ஆறு வயதில் கல்லூரியில் படிக்க முடியுமா? முடியும் என்பதை நிரூபித்துள்ளான் ஜஸ்டின் சாப்மன் என்ற அமெரிக்கச் சிறுவன். அதுவும் மூன்று கல்லூரிகளில் வெவ்வேறு துறைகளில் பட்டப் படிப்பைத் தொடர்ந்து வருகிறான் என்றால் ஆச்சர்யமான விஷயம்தானே! இரண்டு வயது முதல் வீட்டிலேயே கல்வி கற்கத் தொடங்கிய ஜஸ்டின் கல்லூரிகளில் சேர்வதற்கு முன் அஞ்சல் வழிப் பள்ளியில் ஜூனியர் அந்தஸ்தைப் பெற்று இருக்கிறான்.

புதிய கண்டுபிடிப்பு

அரிசோனாவில் உள்ள வானியல் ஆராய்ச்சியாளர்கள் குறுங்கோள் ஒன்றை புதிதாகக் கண்டறிந்துள்ளனர். இது 300 முதல் 700 மீட்டர் அகலம் கொண்டது. பாறைகளால் ஆன குறுங்கோள் 2022 ஆம் ஆண்டு பூமிக்கு அருகில் வருகிறது. கோடியில் ஒரு அளவு பூமியில் மோதக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறுகின்றனர். எனவே நாம் பயப்படத் தேவையில்லை!

புதையல்!

தங்கப் புதையலைப் பற்றி பல கதைகளில் படித்திருப்பீர்கள். ஆனால் நாகர்கோவிலிலுள்ள ஒரு ஊரில் கால்வாய் வெட்டும் போது மண்பானை கிடைத்துள்ளது. இந்த மண்பானையை உடைத்துப் பார்த்தபோது தங்க உருண்டைகள் சிதறி விழுந்துள்ளன. ஒவ்வொரு உருண்டையும் 300 கிராம் எடையுடையது. புதையலில் கிடைத்த தங்க உருண்டைகள் பலரிடமும் பதுக்கப்பட்டது. காவல் துறையினர் மீட்டு வருகின்றனர்.

கலிலியோ ஆய்வுக்கலம்


1995 ஆம் ஆண்டு அமெரிக்கா, வியாழன் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக

ஏப்ரல் 2000 இந்த இதழில்...

எடுப்பது? (கேட்கட்டுமா டாக்டர்?) – 64

* அதிபுத்திசாலிகள்! (படக்கதை) – 66
* முட்டாள் கையில் பணம் தங்காது! (எங்கள் ஊரில் நடந்தது) – 68
* விசித்திர ராஜாவின் விபரீதப் போட்டி! – 70
* என் பெயர் மறந்து போனதே? – 72
* அறிவியல் அற்புதம்! (பாடல்) – 73
* யூரோ கரன்சி! – 74
* சனி நீராடு என்றால் என்ன? (எங்கள் பள்ளியில் நடந்தது) – 76
* புதிய கேப்டன்! – 78
* கோகுலம் க்விஸ்! – 79
* எங்களைப் போன்றே குறும்புக்காரர் (சார் தபால்!) – 80









கலிலியோ என்ற ஆய்வுக்கலத்தை அனுப்பியது. இந்த ஆய்வுக்கலத்தின் ஆயுட்காலம் இரண்டு ஆண்டுகள் என விஞ்ஞானிகள் முடிவு செய்திருந்தனர். ஆனால் இன்றளவும் இக்கலம் ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து வெற்றிகரமாக செய்து வருகிறது. மிகப் பெரிய கோளான வியாழனை 27வது முறையாக கலம் சுற்றும்போது வியாழனின் ஐ-ஓ என்ற சந்திரனுக்கு 200 கி.மீ அருகில் சென்றுவிட்டது கலம். அந்தச் சந்திரனில் குழம்பைக் கக்கிக் கொண்டிருக்கும் பல எரிமலைகள் உள்ளன. இதிலிருந்து வெளிப்படும் கதிரியக்கம் மிகவும் சக்தி வாய்ந்தது. இவ்வளவு ஆபத்துகளை நெருங்கியும்கூட சிறிதும் சேதமின்றி பத்திரமாகத் திரும்பியது குறித்து அமெரிக்க விஞ்ஞானிகள் வியப்பும் மகிழ்ச்சியும் வெளியிட்டுள்ளனர்.

குமுறும் எரிமலை

பிலிப்பைன்ஸ் நாட்டில் அல்பே மாகாணத்தில் உள்ள மேயோன் என்ற எரிமலை வெடிக்கத் தயாரான நிலையில் புகையும் குழம்பும் கக்கிக் கொண்டிருக்கிறது. இதனால் அருகில் வசிக்கும் கிராமத்து மக்களைக் காப்பாற்றும் நோக்கில் ராணுவ வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

அமைதியான ஆண்டு!

இரண்டாயிரமாவது ஆண்டை அமைதியான கலாசார ஆண்டாக யுனெஸ்கோ அறிவித்திருக்கிறது. இந்த ஆண்டில் உலக மக்களிடம் பொறுமை, ஒத்துழைப்பு போன்ற பண்புகளை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அது தெரிவித்துள்ளது.



பயமுறுத்திய

-சுகிசிவம்

மயிலாப்பூரில் உள்ள தாட்சி அருணாசலம் தெருவை ரொட்டிக்காரத் தெரு என்றுதான் சொல்வார்கள். அந்தப் பெயர் எப்படி வந்தது என்று தெரியவில்லை. என் சிறு வயதில் எங்கள் குடும்பம் அங்குதான் குடியிருந்தது. மயிலாப்பூரில் ப்ரவசனங்கள், கதாகாலட்சேபங்கள், ஹரிகதைகள் என்று ஆன்மீக நிகழ்ச்சிகளுக்குச் சற்றும் குறைவில்லை. அதுவும் குறிப்பாக ஆஸ்திக சமாஜத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு அப்பா தொடர்ந்து செல்வார். அதிலும் முக்கியமாக வாரியார் வருடத்திற்கொருமுறை ஒரு மாதம், ஒன்றரை மாதம் என்று கதாகாலட்சேபம் செய்யும் போது அப்பாவின் அட்டெண்டன்ஸ் கட்டாயம் உண்டு. அவர் போவது மட்டுமல்லாமல் என்னையும் என் அண்ணன்களையும் அழைத்துச் செல்வார். அப்பாவோடு போனால் வேர்க்கடலை உண்டாதலால் நாங்களும் போவோம்.

ஆனால் ஒரு சங்கடம் என்னவென்றால் வீட்டிலிருந்து இரண்டு கி.மீ. தூரமுள்ள ஆஸ்திக சமாஜத்துக்கு சட்டை போடாமல் மேல்துண்டால் போர்த்திக் கொண்டு புறப்படுவார் அப்பா. நாங்கள் அழுது ஆர்ப்பாட்டம் செய்து அவர் சட்டை போட்டுக் கொண்டுதான் வர வேண்டும் என்று அடம்பிடிப்போம். இப்படி வேர்க்கடலைக்காக வாரியார் கதாகாலட்சேபங்களுக்குச் செல்லத் துவங்கினாலும் நாளடைவில் எனக்கு அவரது பேச்சில் மிகுந்த ஈடுபாடு உண்டாயிற்று. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று அவர் எளிமையாக, குழந்தைகளுக்குப் புரியும்வண்ணம் சொல்லும் புராணக் கதைகள். அடுத்து ஒவ்வொரு நாள் உபந்யாசத்தின் முடிவிலும் சிறுவர்களிடம் கேள்விகள் கேட்டு பரிசுகள் கொடுப்பது. சரியாக பதில் சொன்ன சிறுவனுக்கு அவருக்குப் போட்ட பெரிய மாலையைப் போட்டு விடுவார். இது தவிர புத்தகங்களும் பரிசாகத் தருவார். அவர் பரிசாகக் கொடுக்கும் புத்தகத்தை அவர் எதிரில் உடனே திறந்து படித்தால் அவருக்குப் பிடிக்காது. 'வீட்டுக்குப் போய் படி' என்று சொல்லுவார். வாரியாரிடம் நான் நிறைய புத்தகங்கள் பரிசாகப் பெற்றிருக்கிறேன். சிறு வயதில் வாரியார், அனந்த ராம தீக்ஷிதர் ஆகியோரின் சொற்பொழிவுகள், உபந்யாசங்களைக் கேட்டது பசுமரத் தாணி போல் மனதில் பதிந்து விட்டதால்

தான் சமயசொற்பொழிவுகளை இப்போது என்னால் அதிக சிரமமில்லாமல் செய்ய முடிகிறது.

நான் பிறந்தது திருச்சியில். அப்பா சுகி. சுப்பிரமணியம் திருச்சி ஆல் இந்தியா ரேடியோவில் நிகழ்ச்சி தயாரிப்பாளர். நாடக எழுத்தாளர். அது என்ன 'சுகி' என்கிறீர்களா? அவரது பெயரின் முதல் எழுத்தையும் அமரர் 'கல்கி' மேல் கொண்ட பக்தியின் காரணமாக கிருஷ்ணமூர்த்தி என்ற அவரது பெயரின் முதல் எழுத்தையும் இணைத்து 'சுகி' என்று வைத்துக் கொண்டார் அப்பா. (இப்போது அதே காரணங்களுக்காக என் பெயருக்கு முன்னாலும் நான் போட்டுக் கொள்கிறேன்). அம்மா கோமதி சுப்பிரமணியம். என் பிறப்பின் போது நடந்த இரண்டு சிறப்பான நிகழ்ச்சிகளைச் சொல்ல வேண்டும். Child Jesus hospital என்று புதிதாகத் துவங்கிய மருத்துவமனையில் பிறந்த முதல் குழந்தை நான்தான். இது தவிர என்னை வயிற்றில் சுமந்து கொண்டிருந்தபோது எழுத்தாளரான என் அம்மாவுக்கு ஒரு பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் 500 ரூபாய் முதல் பரிசு கிடைத்ததாம்!

அப்பாவிற்கு சென்னை ஆல் இந்தியா ரேடியோவுக்கு மாற்றல் வந்து விட்டது. நாங்கள் சென்னைக்கு வந்து விட்டோம். எனக்கு மேல் இரண்டு சகோதரர்கள் மூன்று சகோதரிகள். இப்படி நிறைய மூத்த சகோதர, சகோதரிகளுடன் பிறப்பதில் என்ன சவுகரியம் என்றால் அம்மா - அப்பா நேரடி கண்காணிப்பில் நாம் வருவதற்கான வாய்ப்பு குறைந்து விடும். மூத்த அண்ணனோ அல்லது சகோதரியோ கடைக்குட்டியைக் கவனித்துக் கொள்வார்கள். என்னை mould செய்தவர்கள் என் சகோதர சகோதரிகள்தான். அப்பா மிகவும் கண்டிப்பான ஆசாமி. அவர் கூடத்தில் உட்கார்ந்திருந்தால், எங்கள் நடமாட்டம் அவரது பின்புறமாகவே இருக்கும். அவருக்குப் பிடிக்காத செயல்களைச் செய்து விட்டால் கத்தி விடுவார். ஆனால் ஒருமுறைதான் கண்டிப்பார். ஒரு சமயம் அண்ணா கறுப்பு கலரில் சட்டை வாங்கி வந்தார். அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. தூக்கி ஓட்டின் மேல் போட்டு விட்டார். அதன் பின் கறுப்பு கலரா... மூச்.






ஆறாவது வகுப்பிலிருந்து சாந்தோம் பள்ளி. ரெவரெண்ட் ஆன்ஸ்லாம் தான் தலைமையாசிரியர். நீண்ட அங்கி அணிந்திருப்பார். அங்கியின் கைப்பகுதி மணிக்கட்டு வரை மறைத்திருக்கும். அந்தப் பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பிரம்பு. யாராவது விஷமம் பண்ணினாலோ அல்லது லேட்டாக வந்தாலோ, பிரம்பு வெளிப்படும். பிய்த்து வாங்கி விடுவார். நான் எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் போது மிகவும் கண்டிப்பான உத்தரவு என்னவென்றால் 'யாரும் லீவு போடக் கூடாது' என்பதுதான். எவனாவது லீவு போட்டு விட்டால் போதும். அன்று மாலையே அவனது வீட்டுக்குப் போய் விடுவார் ஆன்ஸ்லாம். ஒவ்வொரு நாள் மாலையும் வாக்கிங் போகும்போதே தெருக்களில் பையன்களின் செயல்களைக் கண்காணித்துக் கொண்டே போவார். இந்த இடத்தில் ஒரு சம்பவத்தைச் சொல்லியாக வேண்டும். கல்லூரி படிப்பையெல்லாம் முடித்து விட்டு சமயச் சொற்பொழிவில் நான் பிரபலமாகி வந்த காலகட்டத்தில், ரெவரெண்ட் ஆன்ஸ்லாம் ஊட்டி – குன்னூரில் உள்ள ஒரு பள்ளிக்குப் பொறுப்பாக பணியாற்றிக் கொண்டிருந்தார். நான் ஊட்டி பகுதியில் ஒரு பள்ளியில் சொற்பொழிவாற்றுவதற்காகச் சென்றிருந்தேன். ஆன்ஸ்லாம் பொறுப்பிலிருந்த பள்ளியின் ஆசிரியர்களுக்கும் என்னை அழைத்து சொற்பொழிவு ஆற்றச் சொல்ல வேண்டுமென்பது விருப்பம். ஆன்ஸ்லாம் அவர்களிடம் தெரிவித்த போது, 'நான் கூப்பிட்டேன்' என்று சொல்லுங்கள் என்று மட்டும் சொல்லி அனுப்பி விட்டார். அழைத்தவர் என் பிரியத்துக்குரிய ரெவரெண்ட் தான் என்று தெரிந்து மறுநாள் அவரது பள்ளிக்குச் சென்றேன். அவரைப் பார்த்தவுடன், 'என்ன ஃபாதர் மணிக்கட்டுப் பகுதியில் பிரம்பு உண்டா?' என்று கேட்க, அவர் சிரித்துக் கொண்டே அதை விருட்டென வெளியே எடுத்து, 'இது இல்லாமலா?' என்று சொல்லவே அந்த ஏரியாவே கலகலப்பானது.

எனக்குள் தமிழ்ப்பற்றை வளர்த்தவர் தமிழாசிரியர் சிதம்பரம் சாமிநாதன்தான். வரிகளைக் கொடுத்து வெண்பாக்கள்





எழுதப் பழக்கியவர் அவர்தான். பேச்சுப் போட்டிகளில் என்னை பங்குகொள்ள ஊக்குவித்தவரும் அவர்தான். ஒருமுறை தமிழ்நாடு தழுவிய அளவில் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி நடந்தது. அந்தப் போட்டியில் கலந்து கொள்ள எங்கள் பள்ளியிலிருந்து இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதாக இருந்தார்கள். ஆனால் என்னைப் பிடிக்காத சில மாணவர்கள், என்னைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று முயற்சித்தார்கள். அதைக் கேள்விப்பட்டபோது எனக்குக் கண்ணீரே வந்து விட்டது. வேறு இரண்டு மாணவர்களை அனுப்புவது என்றும் முடிவாகி விட்டது. அதில் ஒரு மாணவன் பெயர் ரவி. அவன் என் நண்பன்தான். நான் மிகவும் நொந்து போனது கண்டு அவன், 'எனக்குப் பதிலாக நீ போய் வா' என்று சொல்லி விட்டுக் கொடுத்து விட்டான். அதன் பின் நான் போட்டியில் கலந்து கொண்டு 'ஐக்கிய நாடுகள் மன்றம்' என்ற தலைப்பில் பேசினேன். தமிழ்நாட்டிலேயே முதலாவதாக வந்தேன். என்னைப் பாராட்டும்விதமாக பள்ளிக்கூடத்திற்கு ஒருநாள் விடுமுறை விட்டார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

இப்படிப் பல பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டதால் எனக்கு மேடைக் கூச்சம் என்பது சிறிதும் இல்லாமல் போய் விட்டது. இது தவிர பள்ளியிறுதி வகுப்பு படிக்கும் போது, நாங்கள் சிந்தனைக் கோட்டம் என்ற அமைப்பு வைத்திருந்தோம். அந்த அமைப்பின் சார்பில் பேசுவதற்குப் பொள்ளாச்சி மகாலிங்கம், கிரிதாரி பிரசாத், ஔவை நடராஜன் ஆகியோர்களைக் கூப்பிட்டிருக்கிறோம். அவர்களை வரவேற்றுப் பேசுவது, நன்றி சொல்வது என பேச்சுக்கலை நன்றாகவே பழகி விட்டது எனக்கு.

நான் ஐந்தாவது படிக்கும்போதெல்லாம் குண்டாக இருப்பேன். கொஞ்சம் கறுப்பாக இருப்பதால் என் உருவத்தைப் பற்றி எனக்கே ஒரு தாழ்வு மனப்பான்மை இருந்தது. நண்பர்கள் 'எந்த கடையில் அரிசி வாங்கறே?' என்று கிண்டல் செய்வார்கள். 'நீங்க வாங்கற அதே கடையில்தான்' என்று திருப்பி பதில் சொல்லுவேன். ஆனால் சிறு வயதிலேயே என்னுள் அழுத்தமாக பதிந்த ஒரு விஷயம். 'யாரிடமும் கைகட்டி வேலை செய்யக் கூடாது' என்பதுதான். அப்பாவுக்கு என்னை வழக்கறிஞராக ஆக்கும் எண்ணம் இருந்தது. ஆனால் எனக்கோ அரசியல்வாதியாக உருவாகும் ஆசை இருந்தது. இப்போது சமயச் சொற்பொழிவாளனாக ஆகிவிட்டேன்.

ஏராளமான பள்ளி, கல்லூரிகளில் தற்சமயம் சொற்பொழிவுகள் ஆற்றுகிறேன். ஆனால் இப்போதுள்ள மாணவ, மாணவியர், பெற்றோரின் அறிவுரைகளை வெறுக்கிறார்கள். இந்த மனோபாவத்தை அவர்கள் கைவிட வேண்டும். ஒரு சிற்பி கல்லைச் செதுக்கிக் கொண்டே வந்து இறுதியில் முடிக்கும் போதுதான் நல்ல கலைப் படைப்பு ஒன்று உருவாகும். சிற்பிகளைப் போன்றவர்கள்தான் பெற்றோர்கள். தங்கள் குழந்தைகளை கண்டித்து வளர்ப்பது என்பது சிற்பத்தை செதுக்குவது போன்றதுதான். எதிர்காலத்தில் குழந்தைகள் சிறப்பாக உருவாக வேண்டுமென்பதே அவர்களின் நோக்கம். இதை மாணவ, மாணவிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

— ப்ரியன்

படங்கள்: ராஜன்



• ராணிமைந்தன்



• ஆர்.பி. சாரதி



லலிதா

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டி முடிவுகள்!

பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என முத்தரப்பினருக்கும் போட்டிகள் அறிவித்திருந்தோம். முத்தரப்பினரிடமிருந்தும் ஏராளமான படைப்புகள் வந்து சேர்ந்தன. கோகுலம் ஆசிரியருடன் கட்டுரைகளை பத்திகையாளர் திரு. ராணிமைந்தன் அவர்களும், கவிதைகளை சிறுவர் இலக்கிய எழுத்தாளர் திரு. ஆர்.பி.சாரதி அவர்களும் கதைகளை ஓவியர் திருமதி லலிதா அவர்களும் நடுவர்களாக இருந்து தேர்ந்தெடுத்தனர். பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.

மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

முதல் பரிசாக
ரூ. 300 பெறும் கட்டுரை

யூரோ கரன்சி வரலாறு –
சு. ஜானகி, தாராசுரம், கும்பகோணம்.

இரண்டாம் பரிசாக
ரூ. 200 பெறும் கட்டுரைகள்

1) சூழலைக் காப்பது சுகம் – ஆர். வினோதினி, ஏரல், தூத்துக்குடி மாவட்டம்.
2) உழைப்பின் மதிப்பு! – சு. ஸ்ரீதரன், அம்பத்தூர், சென்னை.

மூன்றாம் பரிசாக ரூ. 100 பெறும் கட்டுரைகள்

1) அறிவியல் முன்னேற்றப் பாதையில் இந்தியா– ஆர். சுப்ரதா, நங்கநல்லூர், சென்னை.
2) உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?– எம்.ஒய். முஹம்மது குரைஷ், காரைக்கால்.
3) தொழிற் கல்வி – எம். ஷியாமளா, கோட்டையூர்.

ஆசிரியர்களுக்கான கவிதைப் போட்டி

முதல் பரிசாக ரூ. 300 பெறும் கவிதை

அறிவியல் அற்புதம்! – மு. நடராசன், வில்லியனூர், புதுவை.

இரண்டாம் பரிசாக ரூ. 200 பெறும் கவிதைகள்

1) வானம் சிந்தும் மழையிலே... – நெல்லை. கவிதாசன்.
2) இலவு காத்த கிளி – தலைமை ஆசிரியர், ஊ.ஒ.து. பள்ளி, திடும்மல், நாமக்கல் மாவட்டம்.

மூன்றாம் பரிசாக ரூ. 100 பெறும் கவிதைகள்

1) தொட்டுவைத்த வட்டநிலா... – பால. நடராஜன், கோனாபட்டு.
2) குழந்தையும் தெய்வமும் – எஸ். குமாரகிருஷ்ணன், புதுவை.
3) கணினிக்காலம்! – பரிதிவேங்கடேசன், புதுவை.

பெற்றோர்களுக்கான சிறுகதைப் போட்டி

முதல் பரிசாக ரூ.400 பெறும் கதை


இனி ஒரு தொண்டு செய்வோம்! – மு. நடராசன், வில்லியனூர், புதுவை.

இரண்டாம் பரிசாக ரூ.300 பெறும் கதைகள்

1) உதவிக்கு ஓடிவா! – பி. புலேந்திரன், பொன்னிரை, திருவாரூர் மாவட்டம்.
2) மாலதி – ஜூலியட்ராஜ், நெய்வேலி.

மூன்றாம் பரிசாக ரூ. 250 பெறும் கதைகள்

1) சாதனை நண்பர்கள்! – அ. கங்காதரன், தென்காசி.
2) மனதை மாற்றிய விடுகதை! – சு. இராமச்சந்திரன், அருப்புக்கோட்டை.


கறையான் தின்ற எடைக்கல்!
கதை : எஸ்.ஏ.ஆர். சுரேஷ்
படம் : மகேஸ்
பாண்டியனும் பொன்னையாவும் நண்பர்கள். ஒருநாள் –
பாண்டியா! எடைக்கல் இருந்தால் கொடு. மிளகாய் அளக்கணும்.
இரு தர்றேன்.
இந்தா. உன் வேலை முடிந்ததும் மெதுவா திருப்பித் தந்தால் போதும்.
சரி பாண்டியா!
நாட்கள் சென்றன. ஒருநாள் பாண்டியனுக்குப் பக்கத்து ஊரில் இருந்து புளி வந்திறங்கியது.
பொன்னையா, எடைக் கல்லைத் தர்றியா? புளி அளக்கணும்.
அதுவா! உங்கிட்டே எப்படிச் சொல்றதுன்னு யோசிச்சிட்டிருந்தேன்.


என்ன? எதுவாக இருந்தாலும் தாராளமாகச் சொல்!
எடைக்கல்லைக் கறையான் அரிச்சு சாப்பிட்டிருச்சு.
அட..ப்பாவி! எவ்வளவு நம்பிக்கையா கொடுத்தேன். சே!
அடுத்த வாரம் –
பொன்னையா நான் ராமேஸ்வரம் போறேன். வர்றியா?
எனக்கு வேலை இருக்கு. என் மகனை அழைச்சிட்டுப் போ.


ராமேஸ்வரம் சென்று திரும்பினான் பாண்டியன்.
பாண்டியா என் மகன் எங்கே? நீ மட்டும் வர்றே?
சொல்றதுக்கே கஷ்டமா இருக்கு. உன் மகனை வரும் வழியில் பெரிய கழுகு தூக்கிட்டுப் போயிடுச்சு.
இதைக் கேட்ட பொன்னையா கோபத்துடன் பஞ்சாயத்தைக் கூட்டினான்.
பொன்னையா வழக்கு என்னன்னு சொல்.
என் மகனை இவனுடன் போன வாரம் ராமேஸ்வரம் அனுப்பினேன்.
சரி.
இப்ப இவன் மட்டும் வந்திருக்கான். என் மகனை கழுகு தூக்கிருச்சுன்னு சொல்றான்.
அப்படியா!
கழுகு எப்படி தூக்கிட்டுப் போகும் நீங்களே சொல்லுங்க?
என் எடைக் கல்லை கறையான் அரிக்கும் போது உன் மகனைக் கழுகு தூக்காதா?
பொன்னையா, பாண்டியனை ஏமாற்றினாயா?
ஆமாம்! இப்பவே எடைக் கல்லைக் கொடுத்துடறேன்.
நானும் அவன் மகனை ஒப்படைக்கிறேன்.


வாய்க்குள் புகுந்த பாம்பு!

விஜயேந்திர மன்னனின் தவப் புதல்வன் விக்ரமன். அவன் அரசருக்குரிய சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தாலும் அவனிடம் ஒரே ஒரு கெட்டப் பழக்கம் இருந்தது. அது வாயைத் திறந்துகொண்டு தூங்குவது. ஒரு நாள் இரவு நிலாவை ரசித்துக் கொண்டிருந்தவன் அப்படியே தூங்கி விட்டான். அவனது திறந்த வாய்க்குள் ஒரு பாம்பு புகுந்து கொண்டது. வயிற்றில் போய் அது கடாமுடா பண்ணவே விக்ரமன் பசிக்கிறதென்று எண்ணிச் சாப்பிட்டான். அந்தச் சுவை யான உணவை சாப்பிட்ட நாகம் பேசாது தூங்கி விட்டது.

அதன் பின் பாம்புக்குப் பசிக்கும் போதெல்லாம் அது வயிற்றில் சுற்றி வரும். இளவரசன் சாப்பிடுவான். பாம்பு சாது வாகி விடும். சாப்பிடும் உணவெல்லாம் பாம்புக்குப் போனதால் இளவரசன் நாளுக்கு நாள் சோர்ந்து வந்தான். எந்த வேலையும் செய்ய விடாமல் பாம்பு வயிற்றுள் இம்சித்ததால் விக்ரமனை மற்றவர் சோம்பேறி என நினைத்தனர். ஒருநாள் தந்தையின் கடுஞ் சொல்லைத் தாங்க மாட்டாமல் ஊரை விட்டு வெளி யேறி கால் போன போக்கில் சென்றான் விக்ரமன். ஆங்காங்கே பிச்சை எடுத்துச் சாப்பிட்டான்.

ஒரு சமயம் அவன் தங்கி இருந்த நாட்டின் அரசனுக்கு இரண்டு பெண்கள். ஒருத்தி "அப்பா! தங்களுக்கு இந்த நாள் நன் மையே தரும்" என்பாள்.

இளையவள் சுகந்தி "எதுவும் விதிப்படிதான் நடக்கும்" என்பாள். ஒரு நாள் அவள் சொல்லி



முடித்ததும் அரசன் கீழே விழுந்து கால் எலும்பு முறிந்தது. இதனால் ஆத்திரம் கொண்டு "இவளை நாடு கடத்துங்கள். இதுதான் இவள் விதி" என்றான் மன்னன்.

சேனாதிபதி அவளை நாட்டு எல்லையில் விட்டு வந்தான். சுகந்தி அங்கிருந்த பாழடைந்த கோயிலை அடைந்தாள். அங்கே விக்ரமன் வாயைப் பிளந்துகொண்டு தூங்கினான்.

அவன் வாயிலிருந்து வெளிப்பட்ட பாம்பு பக்கத்திலிருந்த புற்றுக்குள் புக முயன்றது. புற்றுக்குள்ளிருந்து வெளி வந்த பாம்பு அதைத் துரத்தியது.


சுகந்தி ஊர்வன, பறப்பன எல்லாவற்றின் பாஷையையும் கற்றிருந்தாள்.

"இதோ பார்! நீ தினமும் இங்கு வந்து என் பாம்புக் குட்டிகளைத் தின்று விட்டுப் போகிறாய். அதோடு மக்கள் நாக பூஜை செய்து விட்டுச் செல்லும் முட்டை, பாலையும் குடிக்கிறாய்! இது நல்லதல்ல!" என்றது புற்றுப் பாம்பு.

"நானும் உன் இனம்தானே! இந்த முட்டையும் பாலும் எனக்கும் உரிமை உள்ளதாகும். இந்த மனிதன் முன்பு அறுசுவை உணவைக் கொடுத்தான். இப்போதோ உப்பில்லா வெறும் சோறு தருகிறான். வாழ்க்கையே வெறுத்து விட்டது" என்றது வாய்க்குள்ளிருந்து வந்த நாகம்.

"நீ செய்வது அநியாயம்! சகல கலைகளையும் கற்ற அரச குமாரனை ஆட்டிப் படைக்கிறாயே! அவன் மட்டும் வாயை மூடிக்கொண்டு தூங்கப் பழகினால் நீ அழிந்து போவாய்" என்று எரிச்சலோடு கூறியது புற்று நாகம்.

"கறையான் புற்றுதான் நம் இருப்பிடம்! நாம் எங்கே வீடு கட்டிக் கொள்கிறோம்! இதிலே நீ நியாயம் பேச வந்து விட்டாய்! அவன் வாயை மூடிக் கொண்டு தூங்கினால் அவன் வயிற்றுச் சதையைக் கடித்துத் துடி துடிக்கப் பண்ணி விடுவேனே!" என்றது வாய்ப் பாம்பு.







மாலதி

"கடுகை அரைத்துக் கொடுத்தால் அரை நொடியில் மாண்டு போவாய்! பேதிக்குக் கொடுத்தால் வெளியில் வந்து விழுவாய்... இது ஒருத்தருக்கும் தெரியவில்லையே!" என்று அங்கலாய்த்தது புற்றுப்பாம்பு.

"நீ மட்டுமென்ன! கொதிக்கிற வெந்நீரைக் கொட்டினால் நீ செத்து விடுவாய்! இரண்டு குடம் தங்கப் புதையலும் யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ" என்று பெரு மூச்சு விட்டது வாய்வழி வந்த நாகம்.





விடுதலை கேட்கும் விழிகள்!

கூண்டில் வைத்த பழத்தைப் பார்த்தும்
களித்திட வில்லையே;
பச்சைக் கிளியும் கூண்டுக் குள்ளே
கண்ணீர் வடிக்கிறதே!

பச்சைப் புல்லை அள்ளிக் கொடுத்தும்
பயனே இல்லையே;
குட்டி மானும் கூண்டுக்குள்ளே
கண்ணீர் வடிக்கிறதே!

நித்தம் உணவை நீரில் போட்டும்
நாட்டம் இல்லையே;
தொட்டிக் குள்ளே சுற்றிடும் மீனும்
கண்ணீர் வடிக்கிறதே!

'விடு! விடு!' வென்றே தொழுதிடும் பார்வை
அவற்றின் விழிகளிலே!
விடுதலை செய்தால் உள்ளம் மகிழ்ந்தே
உங்களை வாழ்த்திடுமே!

— புலேந்திரன்

விக்ரமன் அசைய இரண்டும் அதனதன் இருப்பிடம் சென்றன.

பொழுது விடிந்தது. நடந்ததை விக்ரமனிடம் கூறிய சுகந்தி தன் தோட்டை விற்று, நிறையக் கடுகு வாங்கி, அரைத்து விக்ரமனிடம் கொடுத்தாள். அதைக் குடித்த பிறகு இரவு பேதி மருந்தும் கொடுத்தாள்.

இறந்த பாம்பு கழிவுடன் வெளி வந்தது. பிறகு ஒரு மண் பானை வாங்கி மூன்று கல் வைத்து தீமூட்டி வென்னீர் போட்டாள். கொதிக்கும் வென்னீரைப் புற்றில் ஊற்றினாள். கரையான் புற்று கரைந்து ஓட பாம்பு பூமிக்குள் சென்றது. இரண்டு செப்புக் குடங்களும் பளீரெனத் தெரிந்தன.


விக்ரமனும் சுகந்தியும் அந்தக் காளி கோவிலிலேயே மோதிரம் மாற்றிக் கொண்டனர். பின்னர் ஆளுக்கொரு குடத்தோடு விக்ரமனின் நாட்டை அடைந்தனர்.

மகனின் பிரிவால் படுத்த படுக்கையாயிருந்த அன்னையும் தந்தையும் மகனைக் கண்டு ஆனந்த பரவசமுற்றனர். நடந்த விஷயங்களைக் கேட்டு சுகந்தியைக் கொண்டாடினர். சுகந்தியின் தந்தைக்குத் தூதனுப்ப அவரும் குடும்பத்தோடு வந்தார்.

திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. சுகந்தியின் தந்தை "விதி மட்டுமில்லை! உன் மதியும் சிறப்பாகச் செயலாற்றியதால் பெருமை மிகு வாழ்வு பெற்றாய்" என்று மகளை வாழ்த்தினார்.

அரசகுமாரன் வாயைத் திறந்து தூங்கும் பழக்கத்தை விட முடியாததால் தூங்கு முன் வாயைத் துணி கொண்டு இறுகக் கட்டிக் கொண்டு தூங்குகிறான். அந்தப் பாம்பின் உறவினர்கள் வந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் தான்!

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. ஒரு தினப் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை எடுத்து சாதனை படைத்த கிரிக்கெட் வீரரின் பின் பாதி பெயர் (4)

2. எழுத்தறிவு அதிகம் பெற்ற இந்திய மாநிலம் (4)

3. ________ ஈர்ப்பு விசையை நியூட்டன் கண்டறிந்தார் (2)

12. சர்க்கரை இதிலிருந்து பெறப்படுகிறது (4)

14. கொலுவின்போது தினமும் செய்யப்படும் பண்டம் (4)

வலமிருந்து இடம்

4. கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் ________ பாடும் (2)

8. கோயில் திருவிழாக்களில் ஊர் பெரியவர்களுக்கு இது வைத்து கௌரவிப்பார்கள் (4)

9. மின்சாரம் இக் கம்பிகள் மூலம் பாய்கிறது (4)

10. அர்ஜுனன் இந்த வித்தையில் சிறந்தவன் (2)

11. விதியை இதனால் வெல்லலாம் (2)

மேலிருந்து கீழ்

1. 'ஆஹா, ஓஹோ' என்று வியந்து மகிழ்வதை இப்படியும் கூறலாம் (5)

2. இதைக் கேட்டால் பதில் சொல்ல வேண்டும் (3)

6. நெல்லின் மேலிருக்கும் இதை நீக்கினால் அரிசி (2)

7. கிழிந்த காகிதங்களை ஒட்டுவதற்கு இது பயன்படும் (2)

9. ஆக்ராவில் அமைந்திருக்கும் புகழ் பெற்ற கட்டடம் (5)

கீழிருந்து மேல்

5. இது பாதாளம் வரைக்கும் பாயும் என்பது பழமொழி (3)

8. நெல்லை மாவட்டத்தில் அமைந்திருக்கும் புகழ் பெற்ற நீர்வீழ்ச்சி (5)


12. பறவைகளின் அரசன் (3)

13. குதிரை என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)

14. இதற்கான உலகத் தலைமை நிறுவனம் ஜெனிவாவில் உள்ளது.

– சி.கு. சரண்யா,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர்பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
ஆண்டிபட்டி

விடை 24-ம் பக்கம்






பிருந்தாவனம்

'ஆல்பாட்ரோஸ்' என்னும் பறவை 8 கிலோ எடையுள்ளது. இதுவே உலகில் மிகப் பெரிய பறவையாகும். இதன் சிறகுகள் விரிந்தால் சுமார் ஆறு மீட்டர் நீளம் இருக்கும். ஆயிரக்கணக்கான மைல் தூரத்தையும் நிற்காமல் தொடர்ந்து பறந்து செல்லும் வலிமை உடையது. இது வெள்ளை நிறத்திலும், பழுப்பு நிறத்திலும் காணப்படும். ஓர் ஆண்டிற்கு ஒரு முட்டை தான் இடும். சுமார் 45 முதல் 50 ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழும்.


– பி. சதீஷ்குமார், திருப்பூர்.




எறும்பு தின்னி என்னும் பிராணி ஒன்று உள்ளது. இது செதில்களுடன் சிறிய ஆமை போல தோற்றமளிக்கும். இதன் தலை ஊசி முனை போல இருக்கும். இதற்குப் பல் கிடையாது. இதன் வாய் விரலை விட முடியாத அளவு சிறியதாக இருக்கும். இதன் நாக்கு இரண்டடி நீளம் வரை இருக்கும். எறும்புகளையும் கரையான்களையும் உண்ணும் விதத்தில் நாக்கில் ஒருவிதப் பசை போன்று திரவம் சுரக்கிறது. அது நீண்ட நாக்கினைக் கரையான் புற்றுக்குள் விட்டதும் அந்தப் பசையில் கரையான்களும் எறும்புகளும் ஒட்டிக் கொள்ளும்.

இது போன்ற











கொசுவை விரட்டும் சட்டை!


எறும்புத் தின்னிகள் தென் அமெரிக்க நாட்டில் வாழ்கின்றன.

– ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.


- இந்திய செஞ்சிலுவைச் சங்கம் 1920ல் தோற்றுவிக்கப்பட்டது.
- இந்தியாவில் டீ அதிகமாக உற்பத்தி செய்யும் மாநிலம் அஸ்ஸாம்.
- தன் மகனாலேயே சிறைபிடிக்கப்பட்ட முகலாய மன்னர் ஷாஜஹான்.
- இறகுப் பந்து (பேட்மிண்டன்) விளையாட்டிற்கு வேறு பெயர் பூனா.
- நண்டுக்குப் பல் வயிற்றுப் பகுதியில் உள்ளது.


– க. பூங்கொடி, சித்தோடு.

கொசுவை விரட்டும் அதிசய சட்டையை சோவியத் விஞ்ஞானிகள் தயாரித்து உள்ளனர். இந்த அதிசய சட்டையை அணிந்து கொண்டால், கொசுக்கள் பக்கத்திலேயே வராது. மாஸ்கோவின் நிறுவனம் ஒன்று, கொசுக்களை விரட்டும் தன்மையுள்ள பொருளுடன் கூடிய விசேஷ துணியைக் கொண்டு, கொசு விரட்டும் சட்டையைத் தயாரித்துள்ளது. இதேபோல் கொசுவை விரட்டும் தொப்பிகளுக்கான துணியைத் தயாரிப்பதிலும் இந்த









நிறுவனம் ஈடுபட்டு உள்ளது. ஏற்கெனவே, தீயில் எரியாத புதுவகைக் கம்பளத்தையும், கிருமி எதிர்ப்பு துணியையும் தயாரித்துள் ளது இந் நிறுவனம்.

ஆதாரம் : அறிவூட்டும் அறிவியல் செய்திகள்

– ஏ. எஸ். பாத்திமா, காரைக்கால்.

- அனைத்துலக நீதிமன்றம் உள்ள இடம் 'ஹேக்'.
- பஞ்சு அரவை இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் விட்னி.
- நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு நார்வே..
- ஹர்ஷர் இயற்றிய நூலின் பெயர் ரத்னா வளி.
- தமிழ்த்தாய் வாழ்த்து எழுதியவர் சுந்தரம் பிள்ளை.

– எஸ். விஜயர் சீனிவாசன், திருச்சி.

மக்களை விட தொலைபேசி கருவி கள் அதிகம் உள்ள நகரம் வாஷிங்டன் தான். இங்கே 1000 பேருக்கு 1730 தொலைபேசிகள் உள்ளதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

– ஏ. கோவிந்தன், சேலம்.



மழை நீரில் 28 சத வீதம் மட்டுமே நிலப்பரப்பில் ஓடிக் கடலை அடைகிறது. மீதி 72 சதவீதம் ஆவி யாகிக் காற்று மண்ட லத்தை மீண்டும் அடை கிறது.

– ஆர். பிரகாசம், மருதாடு.

உலகின் மிகப் பெரிய வண்ணத்துப்பூச்சி, 3 அடி 3 அங்குலம் நீள இறக்கைகள் கொண்ட, 'குயின் அலெக் ஸாண்ட்ரியா' என்ற வண் ணத்துப் பூச்சிதான்.

மரங்கொத்தி, தனது அல கால் மரத்தைக் கொத்தும் வேகம், மணிக்கு 1300 மைல்கள்.

– எஸ். மோகன்ராஜ், சீர்காழி.

- ஆஸ்திரேலியாவின் தேசிய விளை யாட்டு கிரிக்கெட்.
- கிரிக்கெட் மட்டை 'ஓக்' மரத்தில் இருந்து தயாரிக்கப்படுகிறது.
- கிரிக்கெட் ஸ்டெம்பின் உயரம் 71.10 செ.மீ. முதல் 71.50 செ.மீ வரை இருக்கும்.

– திருப்பூர், பி. சதீஸ்குமார்.

பிளாட்டினம் மிகவும் கடினமான உலோகமாகும். இது தண்ணீரை விட 21 மடங்கு கனம் உடையது. ஒரு அடி கன முடைய பிளாட்டினம் கட்டியின் எடை ஒரு டன்!

தங்கத்தைப் போல வளைந்து கொடுக் கக்கூடியது. ஆனால் தாமிரத்தை விட உறுதியானது. ஒரு அவுன்ஸ் பிளாட்டினத் தைச் சிறிய இழையாக பல மைல்கள் நீட்ட முடியும்.

இது வெள்ளியைப் போல தோன்று வதால் ஸ்பானிஷ் மொழியில், 'ப்ளாடா என்று அழைத்தனர். ஸ்பானிஷ் மொழி யில் ப்ளாடா என்றால் வெள்ளி என்று பொருள்படும். இதையொட்டி பிளாட்டி னம் என்று பெயர் வந்தது.

– ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.

பாம்பு ஒரு சமயத்தில் 60, 70 முட் டைகள் இடும். இது ரப்பர் பந்து போல இருக்கும். கீழே விழுந்தால் உடையாது. சில முட்டைகள் 4 நாட்களில் பொரியும். சிலவற்றுக்கு மூன்று மாதம் கூட ஆகும். முட்டையிலிருந்து வெளிப்பட்டதுமே சூழ்நிலையை சமாளிக்கத் தயாராகிவிடும் பாம்பு.

– எஸ். மல்லிகா, அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குக் கதை, கவிதை, ஜோக் எழுதவும் படம் வரையவும் தெரியுமா? அப்படியென்றால் உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடனே சந்தா செலுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

மானைத் துரத்திய புலி!

சாஸ்தா கோயில் மலையின் ஒற்றையடிப்பாதையில் அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். நீலனுக்கு அவர்கள் முதலிலேயே தகவல் சொல்லி விட்டதால் அவன் மலைப் பாதை வழியாகவே வந்து சேர்ந்திருந்தான்.

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் பூங்கோதை, பூங்குன்றன், கண்ணன், தயா, முருகன், அகிலா ஆகிய மாணவ-மாணவியர் சாஸ்தா கோவில் மலைக்குப் போய் வருவோம் என முடிவு செய்து நீலனுக்குச் சொல்லியனுப்பினர்.

ராஜபாளையம் அய்யனார் கோயில் மலைப்பகுதியைச் சேர்ந்த அவனும் அங்கு வந்து சேர்ந்து கொண்டான்.

இங்குள்ள ஆறு குறுகலாகவும் பள்ளமாகவும் பாறைக்கற்களுமாக இருந்தது. முழங்கால் அளவு தண்ணீர் போய்க் கொண்டிருந்தது.

அவர்கள் அங்கு குளித்து விட்டு உள்வன அழகைப் பார்க்க வேண்டும் என கேட்கவே நீலன் அவர்களை அழைத்துச் சென்றான்.

வனம் மிக அடர்த்தியாக இருந்தது. பெரு மரங்கள், கொடிகள், புதர் செடிகள் மண்டிக் கிடந்தன. எங்கும் கரும் பாறைகள் விலங்குகள் போல சிதறிக் கிடந்தன. தூரத்தில் காட்டுப் பறவைகளின் குரல்களும் பக்கத்து மரங்களிலிருந்து சில்வண்டுகளின் ஓசையும் கேட்டுக் கொண்டிருந்தன.

கொ.மா. கோதண்டம்

''நீலா இந்தப் பக்கம் புலிகள் நடமாட்டம் இருக்கு மாமே!'' கண்ணன் கேட்டான்.

"யானைகள் கூட நிறைய இருக்கு" நீலன் கூறியதும் பூங்கோதை கேட்டாள்:

"அப்ப ஒண்ணும் சொல்லாம கூட்டிட்டுப் போறியே?"

"நான் கூட வரும்போது உங்களுக்கு எதுக்கம்மா பயம்?"

"யானை நம்மைப் பார்த்தால் விரட்டுமாமே" அகிலா கேட்டாள்.

"அதான் நான் இருக்கேனு சொல்றான்ல பேசாம வா!" என்றான் முருகன்.

"யானை, புலி, கரடி எதுவும் மனிதர்களைக் கண்டா அதுபாட்டுக்குதான் போகும். நாம அதுக்கு ஏதும் தொல்லை தர மாதிரி நடந்துகிட்டாதான் அதுகளும் விரட்டும். மற்றபடி எதுவும் யாரையும் ஒண்ணும் செய்யாது இப்ப நான் மெல்ல உங்களுக்கு ஏதாவது சொல்லிக்கிட்டு வருவேன். நீங்க சத்தம் போடாம கேட்டுக் கிட்டுவாங்க." நீலன்



கூறியதும் அவர்கள் "சரி" என்றனர்.

ஒற்றையடிப் பாதை ஏற்றத்தில் உருட்டுக் கற்களில் கால் வைத்து விழாமல் பார்த்து நடந்தனர். குறுக்குக் கொடிகள் வரும் இடங்களில் குனிந்து நடந்தனர்.

"நீலா வேட்டைக்கி வர்றாங்களே பயம் இருக்காதா?"

"பயப்பட்டா முடியுமா? நடுச் சாமத்துல வேட்டைக்கி வரணும். சரி இப்ப வேட்டையாடுறதை அரசாங்கம் நிறுத்திடிச்சில்லே. பாரஸ்டு ஆபீசருங்க பார்த்தா புடிச்சிட்டுப் போயிடுவாங்க. ஆனாலும் ஒண்ணு ரெண்டு தெரியாம நடந்துகிட்டு தான் இருக்கு" என்றான் நீலன்.

"எது கஷ்டம், புலி வேட்டையா? யானை வேட்டையா"- பூங்கோதை.

"யானைக்குப் பலம் ரொம்ப தான். அதுக்கு ஏமாத்த தெரியாது. குறுக்கு புத்தி கிடையாது. யானையை ஏமாத்தி வேட்டையாடலாம். ஆனால் புலி தந்திரசாலி, குறுக்கு புத்தி உடையது. உடனே படக்குன்னு சுட்டாதான் முடியும்.



தெளிவான மனசு, உடனே முடிவு செய்யற திறமை, சட்டுனு காரியத்துல இறங்குற சக்தி அதோட புலிகளுக்குண்டான குணத்தையும் ஓரளவு தெரிஞ்சாத் தான் புலிவேட்டையாட முடியும்."

"உசுரோட புடிக்கணும்னா என்ன செய்வாங்க?"

"யானைகளைப் புடிக்க அது வரும் பாதையிலே பெரிய குழி தோண்டி இலைதழைகளால் மறைத்து அதுல விழ வச்சுப் புடிப்பாங்க. புலியானா கூண்டுக்குள்ளே ஆட்டைக் கட்டி வச்சா ஆடு கத்துற சத்தம் கேட்டு புலி அதைப் புடிக்க உள்ளே ஓடி வரும். கூண்டு படக்குனு மூடிக்கிடும். அவ்வளவு தான். இப்பெல்லாம் எதையும் புடிக்கக் கூடாது."

அவர்கள் பேசிக் கொண்டே நடந்தார்கள்.

"ஆ" என்ற அலறல் சத்தம்! நின்று பார்த்தார்கள்.

கடைசியில் வந்து கொண்டிருந்த தயா, கல் தடுக்கி கீழே விழுந்ததனால் அப்படி கத்தினான். டக்கென்று தயாவைக் கண்ணன் தூக்கினான். கால் பெருவிரலில் அடிபட்டு நகமும் சதையும் பிளந்து இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. உடனே பூங்கோதை தன் கைக்குட்டையால் இரத்தத்தைத் துடைத்தாள்.

அகிலா அவன் காலைப் பிடித்துக் கொண்டாள்.

"அடடா நல்லா அடிபட்டிருக்கே இருங்க வரேன்" என்ற நீலன் ஒற்றையடிப்பாதை வழியே ஓடினான். சிறிது நேரத்தில் ஒரு செடியுடன் அங்கு வந்தான். அதில் சில இலைகளைப் பறித்து பாறையில் வைத்து கல்லால் தட்டி அரைத்தான். அதனை வழித்து எடுத்து தயாவின் கால் அடிபட்ட இடத்தில் வைத்து முருகன் தந்த கைக்குட்டையால் கட்டி விட்டான்.

"சாமி இனிமேல் இதுல வலி இருக்காது. இது தையல் போட வேண்டிய காயம். ஆனால் ரெண்டு நாளையிலே இது தானா சேர்ந்திடும். இந்த இலைக்குப் பேரு 'அத்தாலொட்டி'. நாட்டுக்கார வைத்தியமாருக இதை சதை ஒட்டின்னு சொல்வாங்க. அந்தச் செடியில ஒரு இலையை எடுங்க" என்று நீலன் கூறியதும் ஆளுக்கு ஒரு இலையை அதிலிருந்து பறித்தார்கள்.

"இப்ப அதை ரெண்டா கிழிங்க." அவர்கள் இலைகளை பாதிப் பாதியாகக் கிழித்தனர். "இப்ப கிழித்த ரெண்டையும் ஒண்ணா சேருங்க". அவர்கள் இரு துண்டு இலைகளைச் சேர்த்து வைத்தனர்.

"ஏய் ஒட்டிக்கிடிச்சே!"

"அடடே!"

"அற்புதம்!"

"ஆச்சர்யம்" அவர்கள் வியந்து பாராட்டி குதித்து மகிழ்ந்தனர்.

கண்ணனும் முருகனும் சில இலைகளைப் பறித்து சட்டைப் பைகளில் வைத்துக் கொண்டனர்.

"இலையை அரைச்சு விழுதை எடுத்து வெட்டுப்பட்ட சதையை ஒட்ட வைத்தால் ரெண்டு நாளில் புண் ஆறிடும். தையல் போட வேண்டியதில்லை."

"நாங்க எங்க பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள்கிட்டே காட்டுவோம்."

"நீலா இதை மருந்தா தயாரிச்சி விக்கலாமே! நல்லா விக்குமே!" பூங்கோதை கூறினாள்.

"நமக்கு இதெல்லாம் சரிபட்டு வராதுங்க."

"சரி, சரி! புலி வேட்டையைப் பற்றி இன்னும் சொல்லு."


"வழக்கமா தண்ணீர் குடிக்க வரும் இடத்துக்குப் பக்கத்துல மறைவுல நின்னுகிட்டு புலி வரும் போது துப்பாக்கியால சுடுவாங்க. இது ஆபத்தானது. அப்புறம்

"ஒரே ஒரு பேங்கிலே பணத்தை போட நினைச்சா முடியவே முடியாது. எந்த பேங்க் தெரியுமா?"

"தெரியலையே!"

"அதான் பிளட் பேங்க்!"

- சேந்தன்குடி மா. பானுமதி





மரத்துமேல பரண் கட்டி கீழே ஒரு ஆட்டைக் கட்டி வச்சிட்டா இரவு ஆடு கத்தோகத்துன்னு கத்தும். சத்தம் கேட்டு புலி வரும். அப்ப பரணிலிருந்து சுட்டுருவாங்க. அப்புறம் தகரம் அடிச்சி புலியை வெரட்டி அது ஓடும்போது குறிவச்சு சுட்டுத் தள்ளுவாங்க. இப்படி பல முறைகள்ல வேட்டையாடுவாங்க."

அவர்கள் அடர் வனத்தின் ஒற்றையடிப் பாதை வழியே பேசிக் கொண்டே நடந்து மலையேறினார்கள். எங்கிருந்தோ வந்த மேக மூட்டம் அவர்களை மறைத்து விட்டு பின் மறைந்தது. மரக்கிளைகளில் தாவி ஓடும் குரங்குகளின் ஆர்பாட்டக் கூச்சல் பலமாக இருந்தது. ஓர் இடத்தில் அடர் வனம் முடிந்து ஆளுயர காட்டுப் புல் வளர்ந்திருந்தது. இடையிடையே பாறைகள், சில இடங்களில் ஒற்றை மரங்கள்.

ஒரு பக்கத்தில் சில மான்கள் மேய்ந்து கொண்டிருந்தன. சில குட்டிகளும் உடன் இருந்தன. தாய்மான் ஒன்று தன் குட்டியை உடம்பெல்லாம் நாக்கினால் நீவி விட்டுக் கொண்டிருந்தது.

நீலன் நின்று யோசித்தான். சத்தம் போடாமல் இருக்குமாறு சைகை செய்தான். உயரமான பெரிய பாறையில் சரிவான பக்கவழி. மேலே ஏறி வருமாறு சொல்லிவிட்டு ஏறினான். பாறை உச்சியில் அவர்கள் உட்கார்ந்து கொண்டனர். பூங்கோதை எல்லோருக்கும் கடலை மிட்டாய் தந்தாள். கண்ணன் பிஸ்கட் தந்தான்.

"பக்கத்துல எங்கேயோ புலி இருக்கு. வாசனை அடிக்கிது. அமைதியா இருங்க" என்று நீலன் சொன்னதும் அவர்களுக்குப் பயம் வந்து விட்டது. எதுவும் சாப்பிடாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு பயத்துடன் இருந்தனர்.

நீலன் சுற்றும்முற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். எதிர்த் திசையில் ஒரு பெரிய புலி வந்து கொண்டிருந்தது. நடக்கும் சத்தம் கேட்காமல் மெல்ல நடந்து வந்து ஒரு இடத்தில் நின்று மான் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

அதன் கண்களில் பசி தெரிந்தது. உடம்பு முறுக்கேறியது. அதன் வால் பாம்பாகச் சுருண்டு நெளிந்தது.

ஆபத்தை எப்படியோ உணர்ந்த தலைமை மான் தலையைத் தூக்கி நிமிர்த்தி சுற்றும் முற்றும் பார்த்தது. பின் காதுகளை தூக்கி நிமிர்த்தி ஆட்டியது. அது 'ஓடி வாருங்கள்' என்பதற்கான அதன் மொழி. அது ஓட எல்லா மான்களும் அதன் பின்னால் ஓடின. இரண்டு குட்டிமான்கள் கடைசியில் ஓடிக் கொண்டிருந்தன. கடைசிக் குட்டியைப் பார்த்துப் புலி பாய்ந்து ஓடியது. இதையெல்லாம் பாறையில் உட்கார்ந்து அச்சத்துடன்

பார்த்துக் கொண்டிருந்தனர்.

மான் குட்டியைப் புலி நெருங்கிக் கொண்டிருந்தது. மான் குட்டி ஓடுகிறதா? காற்றில் பறக்கிறதா? பலம் மிகுந்த புலியல்லவா? 'விடுவேனா உன்னை' என்பது போல நெருங்கிக் கொண்டிருந்தது. ஆபத்து நெருங்கும் வேளை.

ஏதோ ஒரு குரல். 'கிய்ய்ய்' என்று கத்தியவாறு முயல் குட்டி ஒன்று பாய்ந்து ஓடிவர அதை விரட்டிக் கொண்டு வானத்தில் பறந்து வந்து கொண்டிருந்த கழுகு 'கெய்க்' என கீழே நோக்கிப் பாய...

பாய்ந்து வந்து கொண்டிருந்த புலியின் முகத்தில் சட்டென்று கழுகின் உடல் மோத அதன் கால்கள் புலியின் கண்ணில் பட்டுவிட, இந்தத் திடீர் தாக்குதலில் நிலை குலைந்து போன புலி தடுமாற்றத்தால் விழுந்து உருண்டது. மான் கூட்டம் ஓடி மறைந்து விட்டது. முயல் குட்டிக்கும் விடுதலை. அதிர்ச்சியில் விழுந்த கழுகும் சுதாரித்து எழுந்து பறந்து போனது.

எழுந்து கொண்ட புலியும் சாவதானமாக சுற்றிப் பார்த்துவிட்டு மெல்ல நடந்து சென்று மறைந்தது. திகிலிலிருந்து விடுபட்ட அவர்களும் மெல்ல எழுந்தனர்.

"சரி வாங்க இறங்கிப் போயிடலாம்."

நீலனைத் தொடர்ந்து அவர்களும் இறங்கி நடந்தனர்.

"நல்ல வேளை மான்குட்டி பாவம் அகப்படாம போச்சி" என்றான் கண்ணன்.

"அது சரிதான் சாமி. இந்த மான்களை அப்பப்ப புலி அடிச்சி சாப்பிடாம இருந்தா மான்கூட்டம் பெருகி இந்த வனத்தையே தின்னு அழிச்சிடும். அதுக்குத்தான் சாமி நம்ம இயற்கை இப்படியெல்லாம் படைச்சிருக்கு. அதுக்காக நாம மான்களை கொன்னு வேட்டையாடணுமுன்னு நினைச்சா அது தப்பு. நமக்கு அந்த உரிமை கிடையாது. புலி பசிக்குச் சாப்பிடுது. அது தப்பில்லை"


"நீ சொல்றதும் சரிதான்" என்றாள் பூங்கோதை.

"சரி சாமிகளா போயிட்டு வாங்க. நா இப்படியே மலைப் பாதை வழியா போயிடறேன்."


அடிவார பாதைக்கு வந்ததும் நீலனுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு பெரிய சாலையில் பயம் நீங்கி பேசிக் கொண்டே ஓட்டமும் நடையுமாக விரைந்தனர்.


குறுக்கெழுத்துப் புதிர் விடை






உண்மை புரிந்தது!
கதை : ந. கௌரி
படம் : சசி
மலையூர் காட்டில் பத்மகி என்ற பன்றி வசித்து வந்தது. அதன் தாய் சந்திரிக்கு அது ஒரே செல்ல மகன்.
எனவே பத்மகியை வெளியே எங்கும் செல்ல அனுமதிக்காமல் தன் இருப்பிடத்திலேயே பாதுகாப்பாக வளர்த்து வந்தது சந்திரி.
சந்திரி தினமும் அலைந்து, திரிந்து கிழங்கு, பழங்களைக் கொண்டு வந்து கொடுக்கும்.
அன்று வன விழா. பத்மகிக்குப் புத்தாடை அணிவித்து அழைத்துச் சென்றது சந்திரி.
குண்டாகவும் பளபளப்பாகவும் இருந்த பத்மகியைப் பார்த்த மற்ற விலங்குகள் "ரொம்ப அழகு" எனப் பாராட்டின.
வீட்டிற்கு வந்ததும் "பத்மகி உன்னைப் போல் அழகு யாரும் இல்லை" என்றபடி திருஷ்டி சுற்றிப் போட்டது சந்திரி.
பத்மகி தான் அழகு என்பதில் பெருமையடைந்தது. ஒரு நாள் அவ்வழியே மான்குட்டி ஒன்று சென்றது.
அதைப் பார்த்த சந்திரி "இந்த மான்குட்டி எவ்வளவு அழகு" என்று தன்னை மறந்து கூறியது.


உடனே பத்மகி கோபம் அடைந்தது. "என்னைப் போல் அழகு யாரும் இல் லைன்னு சொன்னே. இப்ப மான்குட்டியை அழ குங்கிறியே" என்று கத்தியது.
"கோவிச்சுக்காதேடா, இனிமேல் யாரையும் அழகுன்னு சொல்ல மாட்டேன்" என்று சமாதானப்படுத்தியது சந்திரி.
நாட்கள் சென்றன. பத்மகி யாருடனும் பழகுவதில்லை. வீட்டிலேயே உட்கார்ந்து சாப்பிட்டதால் தொப்பை விழுந்தது.
இதைப் பார்த்த சந்திரி "ஆஹா! என் மகன் கணபதி மாதிரியே இருக்கானே" என்று கூறியது.
இதைக் கேட்ட பத்மகி "என்னை வேறு யாருடனோ ஒப்பிட்டு விட்டே. நான் போகிறேன்" என்று கூறி காட்டை விட்டு வெளியேறியது.
ஊருக்குள் நுழைந்த பத்மகி ஒரு வீட்டு வாசலில் நின்றது. அந்த வீட்டுப் பெண் அழகாக இருந்தாள். பத்மகி அருகில் வந்து நின்றாள்.
இதைப் பார்த்த அந்தப் பெண்ணின் அம்மா, "இந்த அசிங்கம் பிடிச்ச பன்றி கூட நிற்கிறியா?" என்றபடி அழைத்துச் சென்றார்.
காட்டிலே என்னைத்தான் அழகுன்னு எல்லாரும் சொன்னாங்க. ஆனால் இங்கே அசிங்கம்ன்னு தூற்றுகிறார்களே' என தனக்குள் நொந்து கொண்டது பத்மகி.


அங்கிருந்து நகர்ந்த பத்மகிக்குக் களைப்பாக இருந்தது. ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்தது.
பத்மகி தூங்குவதைக் கண்ட வீட்டின் சொந்தக்காரர் குச்சியால் ஓங்கி ஒரு அடி கொடுத்தார்.
வலி தாங்காமல் பத்மகி அலறியடித்துக் கொண்டு ஓடியது.
அழுது கொண்டே சென்ற பத்மகி வழியில் ஒரு குப்பை மேட்டில் சில பன்றிகள் கூட்டமாகச் சாப்பிடுவதைக் கண்டு நின்றது.
"ச்சீ! குப்பை மேட்டில் சாப்பிடறீங்களே. உங்களுக்கு வெட்கமா இல்லே" என்று கேட்டது பத்மகி.
"நம் இனத்துக்குக் குப்பை மேட்டில் தான் சாப்பாடு. ஏதோ குப்பை மேட்டைப் பார்க்காத மாதிரி பேசறியே" என்றது ஒரு பன்றி.
துன்பமே என்னவென்று தெரியாமல் வளர்ந்த பத்மகிக்கு உண்மை புரிந்தது. தன் அம்மாவைத் தேடி காட்டிற்குச் சென்றது.

நகரும் வீடு!

அன்று ஞாயிற்றுக் கிழமை. இரண்டு நாட்களாக மழை பெய்து கொண்டிருந் தது. அருண் வராண்டாவிலிருந்து மழையை ரசித்துக் கொண்டிருந்தான். அப்போது சின்ன பெட்டி போல் ஏதோ மெதுவாக நகர்ந்து வந்து கொண்டிருந்தது வாசலில்.

இதைப் பார்த்த அருண் உள்ளிருக்கும் அம்மாவை அழைத்தான். 'என்ன?' என்று கேட்டபடியே வந்த அம்மா, அருண் காண்பித்த உருவத்தைப் பார்த்து கோப மானார்.

''அருண்! ஆமை புகுந்த வீடு உருப்படாதுன்னு சொல்வாங்க. சீக்கிரம் குச்சியால் அடிச்சு தூக்கி வீசு'' என்றபடியே உள்ளே சென் றார்.

அருண் கம்பை எடுத்துக் கொண்டு ஆமை அருகில் வந்தான். ''தம்பி! என்னை அடிக்காதே! தெரியாமல் வந்துட்டேன். நான் இங்கிருந்து செல்ல கொஞ்சம் அவ காசம் கொடு'' என்றது ஆமை.

ஆமையின் பேச்சைக் கேட்ட அருண் வெலவெலத்துப் போய், கையில் இருந்த குச்சியை நழுவ விட்டான்.

இதைப் பார்த்த ஆமை, ''தம்பி ரொம்ப நன்றி. நான் வரேன்'' என்றபடி நகர ஆரம்







பித்தது.

"ஆமையே! நீ பேசுவே என்பதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலே. என்னோடு கொஞ்ச நேரம் பேசிட்டுப் போயேன். எனக்கு ரொம்ப போர் அடிக்குது" என்றான் அருண்.

"வேண்டாம் தம்பி! உங்கம்மா ஏற்கெனவே என்னைப் பார்த்த கோபத்தில் இருக்காங்க" என்று கூறிக்கொண்டே மீண்டும் நகர்ந்தது ஆமை.

"அம்மா இப்போ முக்கியமான வேலையில் இருக்காங்க. இங்கே வர மாட்டாங்க. நான் உன்னை வராண்டா மூலையில் வைக்கறேன். ப்ளீஸ்" என்று கெஞ்சினான் அருண்.

அருண் கெஞ்சுவதைப் பார்த்த ஆமை இரக்கப்பட்டு அவனுடன் சிறிது நேரம் கழிக்க முடிவெடுத்தது.

"இங்கே பார் அருண். நான் வராண்டாவுக்கு வர விரும்பலை. இப்படியே சுவர் ஓரம் ஒதுங்கி நிற்கிறேன். நீ கேட்க விரும்பியதைக் கேள்" என்றது ஆமை.

"உன்னை முதலில் பார்த்த போது ஏதோ மரப் பெட்டின்னு நினைச்சேன். நான் மிருகக் காட்சிச் சாலைகளில் பார்த்த ஆமைகள் ரொம்பப் பெரிசா இருந்துச்சு. நீ என் கைக்குள் அடங்கிடுவே போலிருக்கே!" - அருண்.

"நீ பிறந்த போது சின்னதாகத்தானே இருந்தே. அதே போலத்தான் நானும். நீ பார்த்த ஆமைகள் கடலாமைகளாக இருக்கலாம். எங்களில் சிறிய இனங்களும் உண்டு" என்று அருணைப் பார்த்துச் சொன்னது ஆமை.

"உங்க இனம்தான் உலகத்திலேயே அதிக ஆண்டுகள் வாழக்கூடிய இனம்னு படிச்சிருக்கேன்."

எஸ். சுஜாதா



"நீ சொல்றது சரிதான். முதுகெலும்புள்ள பிராணிகளில் அதிக காலம் உயிர் வாழறது நாங்கதான். சுமார் 150 ஆண்டுகள் வரை வாழ்வோம். எங்களில் ஒரு சில அபூர்வமாக 200 வருடங்களுக்கு மேலும் வாழ்ந்து சாதனை படைத்திருக்கின்றன. எனக்கு ஒரு வயதுதான் ஆகிறது.''

"அப்ப நீ இன்னும் 149 வருஷம் இந்தப் பூமியில் ஜாலியாக வாழப் போறே! ஆமாம் உங்க முதுகில் மட்டும் ஏன் இப்படி ஒரு வித்தியாசமான ஓடு இருக்கு?'' என்று அடுத்த கேள்வியைக் கேட்டான் அருண்.

''நீங்க பாதுகாப்பா வீட்டில் இருக்கீங்க. எங்களுக்குப் பாதுகாப்பு வேணுமே. அதுக்குத்தான் இந்த ஓடு. இதை எங்கள் வீடுன்னு கூட சொல்லலாம்! என்ன, இது அசைகிற வீடு. அதுதான் வித்தியாசம்.''

''ஓடுனாலே உனக்கெப்படி பாதுகாப்பு?'' என்றான் அருண்.

"இதைப் படிக்கலயா நீ? நீ நல்ல பையன் என் பேச்சைக் கேட்டு அடிக்காமல் விட்டுட்டே. சிலர் கல்லால் அடிப்பாங்க. சில பிராணிகளும் பறவைகளும் சாப்பிடுவதற்குத் தாக்கும். அப்ப மற்ற பிராணிகளைப் போல எங்களால் வேகமாக ஓடி ஒளிய முடியாதே! அதனால தான் இயற்கை இப்படி ஒரு பாதுகாப்பைக் கொடுத்திருக்கு. ஏதாவது ஆபத்துன்னா உடனே தலை, வால், கால்களை உள்ளே இழுத்துக் கொண்டு தப்பித்து விடுவோம். அதே சமயம் ஓட்டின் மீது மெதுவாகக் கை வைத்தாலும் உணர்ந்து விடுவோம்'' என்று கூறி நிறுத்தியது குட்டி ஆமை.

"உங்களால ஏன் வேகமா போக முடியலை? நான் கூட மெதுவா வேலை செய்யறவங்களை 'ஆமை போல் அசையறியேன்னு' சொல்லிக் கேள்விப்பட்டிருக்கேன்'' - அருண்.

"எங்கள் பாதுகாப்புக்கு ஓடு உதவுவது போலவே எங்கள் வேகத்தைக் குறைப்பதற்கும் இந்த ஓடுதான் காரணம். கழுத்து, கால், வாலைத் தவிர விலா எலும்புகளையோ, வேறு உறுப்புகளையோ எங்களால் அசைக்க முடியாது. எனவே மூச்சு விடுவது சுலபமல்ல.''

"சரி நீ என்னென்ன சாப்பிடுவே? அதைச் சொல்'' என்றான் அருண்.

"நான் நிலத்தில் வாழக்கூடியவன். எனவே எங்கள் இனம் சைவ உணவுகளைத்தான் சாப்பிடும். முட்டைக்கோஸ் இலை என்றால் எங்களுக்கு அலாதி விருப்பம். அது தவிர காய்கறிகள், இலை, தழைகள், பழம் போன்றவற்றைச் சாப்பிடுவோம். கடலாமைகள் அசைவம் சாப்பிடக்கூடியவை. சிறிய புழு, நத்தை, மீன்கள், இறந்த பிராணிகள், கடற்பாசிகள், அழுக்குகளை உண்டுவாழ்கின்றன!''

''உனக்கு இன்னும் பல் முளைக்கலையோ? என் கண்ணுக்குத் தெரியலையே'' என்றான் ஆர்வத்துடன் அருண்.

"பல் இருந்தால்தானே பார்ப்பே! எங்க இனத்துக்குப் பற்களே கிடையாது. ஆனால் எப்படிச் சாப்பிடறோம்னு பார்க்கறியா? பறவைகளுக்கு உள்ளது போன்ற உறுதியான அலகுகள் இருக்கு. அதை வைத்து உணவை வெட்டி விழுங்கி விடுவோம். சரி. நான் கிளம்பவா தம்பி?'' என்றது ஆமை.

"இன்னும் கொஞ்ச நேரம் இரு. அம்மா வர மாட்டாங்க. பயப்படாதே?'' என்றான் அருண்.

"நீ கேட்கறதுக்கு முன்னால நான் ஒரு கேள்வி கேட்கறேன். உன்னால் எத்தனை நாள் சாப்பிடாமல் இருக்க முடியும்?'' என்றது ஆமை.

''ம்... அதெல்லாம் முடியாது. அதிக பட்சம் ரெண்டு வேளை பட்டினி கிடப்பேன்'' என்றான் அருண்.

ஆமை ஏளனமாக அவனைப் பார்த்து விட்டு, "நாங்கள் மாதக்கணக்கில் சாப்பிடாமல் உயிர் வாழ்வோம்" என்றது பெருமையாக.

"உனக்கும் கடலாமைக்கும் என்ன வித்தியாசம்? கொஞ்சம் சொல்லேன்" என்றான் அருண்.

"நாங்க நிலத்தில் மட்டும்தான் வாழ்வோம். கடலாமைகள் பெரும்பாலும் கடலிலேயே வாழ்கின்றன. குளம், குட்டை, சேறு ஆகியவற்றில் வாழ்பவை நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியவை.

"எங்கள் முதுகு குவிந்து காணப்படும். கடலாமைகளுக்கு முதுகு தட்டையாக இருக்கும். நீந்துவதற்கு ஏற்ப கால்களில் சவ்வுப் படலம் காணப்படும்.

"நாங்கள் அனைவரும் முட்டையிட்டுத்தான் குஞ்சு பொரிப்போம். நாங்கள் 20 முதல் 30 முட்டைகள்தான் இடுவோம். கடலாமைகள் 100 முதல் 200 முட்டைகள் வரை இடக்கூடியவை. காலாலும் வாலாலும் மணலைத் தோண்டி முட்டைகளை இட்டு மூடி விடுவோம். சூரிய வெளிச்சத்தால் குஞ்சுகள் அனைத்தும் ஒரே சமயத்தில் பொரிந்து வெளியே வரும். ஆனால் நாங்கள் கஷ்டப்பட்டு முட்டைகளை மூடி மறைத்தாலும் முட்டைகளைத் தின்ன சில பிராணிகள் பேயாய் அலைகின்றன. தப்பி, பிழைத்து குஞ்சாக வெளியே வந்தாலும் பெரிய பறவைகள், பிராணிகள், நண்டுகளிடம் அகப்பட்டால் அதோகதிதான்! இத்தனையும் மீறி நாங்களும் பல கோடிக் கணக்கான ஆண்டுகளாக பூமியில் வாழ்ந்து வருகிறோம்" என்று பெருமூச்சு விட்டது ஆமை.

"கோடிக்கணக்கான வருஷங்களா வாழறீங்களா?" என்றான் அருண் வியப்புடன்.

"ஆமாம்! நாங்கள் பூமியில் தோன்றி 17 முதல் 18 கோடி ஆண்டுகள் ஆகி விட்டன. உங்களுக்கு எல்லாம் சீனியர்கள்."

"சரி! நான் ஒண்ணு கேட்டால் தப்பா நினைக்க மாட்டியே!"

"என் அருமை நண்பன் நீ. உன்னிடம் கோவிப்பேனா?" – ஆமை.

"உன்னைத் திருப்பிப் போட்டால் மீண்டும் திரும்ப முடியாதாமே!" என்றான் அருண்.


உடனே ஆமைக்கு உற்சாகம் குறைந்தது. "ஆமாம் தம்பி. திருப்பிப் போட்டால் எங்களால் திரும்பவே முடியாது. அப்படியே சில நாட்களில் இறந்து விடுவோம்" என்றது ஆமை.

ஆமையின் கவனத்தை வேறுவிதத்தில் திருப்பும் எண்ணத்தில், "உங்களில் எத்தனை வகைகள் உள்ளன?" என்றான் அருண்.

"சுமார் 275 வகைகளில் இருக்கிறோம். தோணி ஆமை மிகப் பெரியது. பச்சையாமை, பெருந்தலை ஆமை, நட்சத்திர ஆமை போன்றவை எனக்குத் தெரிந்த வகைகள்."

"இத்தனை வகைகளென்றால் உலகில் அதிக எண்ணிக்கையில் இருப்பீர்களே?"

"அதுதான் இல்லை. பிராணிகள் தவிர மனிதர்களும் ஓட்டிற்காகவும் இறைச்சிக்காகவும் வேட்டையாடுகின்றனர்."



"ஐயோ பாவம்!" என்று வருந்தினான் அருண்.

"தம்பி அம்மா முட்டைகோஸ் சமைக்கிறாங்க போலிருக்கு. வாசம் வருது" என்றது ஆமை.

"மறந்தே போயிட்டேன். இரு உனக்குக் கொஞ்சம் முட்டைக்கோஸ் தரேன்" என்றான் அருண்.

"வேண்டாம், நீ சொன்னதே போதும். எனக்குக் காதும் மூக்கும் கண்ணும் நல்லா வேலை செய்யும். இன்னொரு விஷயம். நாங்கள் புகுந்த வீடு உருப்படாது என்பது வெறும் மூடநம்பிக்கை. நான் வரேன்" என்றபடி கிளம்பியது ஆமை.

"உன்னை இனிமேல் எப்பப் பார்க்கலாம்? பிரிய மனமில்லை" என்றபடி நின்றான் அருண்.

ஆமை திரும்பிப் பார்த்து சிரித்துவிட்டு நகர ஆரம்பித்தது.

அம்மா வரும் சத்தம் கேட்கவே அருண் உள்ளே சென்றான்.

10 மலைக்கோயிலில்...

அப்பாவைக் கண்டதும் அடக்க முடியாத ஆவலோடு நித்யாவும் சத்யாவும் அவரை நோக்கிப் பாய்ந்தார்கள். ஆனால் அடியாட்கள் குழந்தைகளை நகர விடாமல் தடுத்து விட்டார்கள்.

அதேபோல, தன் குழந்தைகளைக் கண்டதும், தவிப்போடு அவர்களை நோக்கி வர ஆரம்பித்த மோகனை ஆயுதம் தாங்கிய ஒருவன், அவர் நெற்றியில் துப்பாக்கியை அழுத்தி, ''நகரக் கூடாது!'' என்று கரகரத்தான். அதேசமயம் மற்றொரு கூடாரத்திலிருந்து ஜெயராஜ் வெளிப்பட்டான். மோகனை நோக்கி சவடாலாக நடந்து அவர்கள் அருகில் வந்தவன், "என்ஜினீயர் மோகன் சார் உங்களைக் காண விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள்!" என்றான் கிண்டலாக.

மோகன் தன் நெற்றியில் அமுக்கிக் கொண்டிருக்கும் துப்பாக்கியை ஆத்திரத்துடன் தட்டிவிட்டு, தன் குழந்தைகளை நோக்கி நடக்க முற்படுகையில் ஜெயராஜ் தன் உள்ளங் கையை அவர் மார்பில் பதித்து "அவசரப்பட வேண்டாம் மோகன் சார்!" என்றவன் புண்ணியகோடியைப் பார்த்து "புரொபஸர் சார்! நான் கூறியபடி இந்தப் பாறைச் சுவரை வெடி வைத்துத் தகர்த்து, புதையல் உள்ள இடத்துக்குப் போக வழி பண்ணுங்கள்'' என்றான்.

''உன் யோசனைப்படி நடப்பதற்கு இல்லை! இந்தப் பாறைக்குப் பின்னால் புராதன காலத்துப் புதையல் - புரொபஸரின் அனுமானப்படி இருக்குமானால், வெடி வைத்துத் தகர்ப்பதினால் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அது பாழாகும்" என்றார் மோகன்.

''அது பாழாவதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. துண்டு துணுக்கானாலும் - எனக்கு வேண்டியது தங்கம்!'' என்று சீறினான் ஜெயராஜ்.

''எனக்குக் கிடைத்துள்ள குறிப்புகளின்படி - இந்தப் பாறைச் சுவருக்குப் பின்னால் மிகப் புராதனமான சரித்திரச் சின்னங்களும் ஆபரணங்களும் உள்ளன. அவை மியூசியத்துக்குக் கொண்டு போகப்பட வேண்டுமே தவிர - முட்டாள்களாலும் ரௌடிகளாலும் உருக்கப்படக் கூடாது'' என்றார் புண்ணியகோடி உறுதியான குரலில்.



"போதும்!" என்று கையை உயர்த்தினான் முகம் சிவந்த ஜெயராஜ். மோகனைப் பார்த்து " மோகன் - நீ ஒரு பொறியாளர். மலைக்கோயிலில் மறைந்துள்ள புராதனப் புதையலை வெளிக் கொண்டு வர, புரொபஸருக்கு உதவவே, நீ இங்கு வந்திருக்கே. நீ அந்தக் காரியத்தை எனக்காக இப்பவே செய்யணும்'' என்றான்.

"ஒருக்காலும் முடியாது" என்றார் மோகன் அழுத்தமாக.

"முடியும் - முடியணும்! இல்லாவிடில் உன் குழந்தைகள் இருவரும் கொல்லப் படுவார்கள்" என்றான் அதே உறுதியான குரலில் ஜெயராஜ்.

சில விநாடிகள் அங்கு பயங்கர அமைதி நிலவியது. நித்யாவும் சத்யாவும் விக்கித்துப் போய் நின்றார்கள். மோகனுக்குத் தெரியும் அந்தக் கொலைகாரன் எதற்கும் தயங்காதவன் என்று. ஜெயராஜை சுட்டெரிப்பதுபோல மௌனமாகப் பார்த்துக்கொண்டு நின்றார் அவர்.

நித்யா, சத்யாவுக்குக் காவலாக நின்ற இரு குண்டர்களின் கவனம் ஜெயராஜிடமும் மற்றவர்களிடமுமே இருந்தது. சற்றுத் தள்ளிப் பின்னால் நின்றுகொண்டிருந்த டிங்குவை யாருமே சட்டை செய்யவில்லை. காட்டுவாசியான டிங்கு தன் இடையில்

தொங்கிய தோல் பைக்குள் கைவிட்டான். அதிலிருந்து நாணல் குழல் வெளிப்பட்டது.

அவன் விரல்கள் விஷ முள் செருகிய தானிய மணியைப் பையிலிருந்து எடுத்து

தங்கச்சிலை



வாண்டுமாமா



பணிப்பெண்: ராஜா சேனையுடன் வருகிறார்.
ராணி: அவர் மார்க்கெட் போகும் போதே நினைத்தேன்!

— எஸ். மோகன்

அதை நாணல் குழாய்க்குள் போட்டது. நிதானமாக குழாயைத் தன் வாயில் பொறுத்திக்கொண்ட டிங்கு, மூச்சுக் கட்டி அதை வேகமாக ஊதினான். நாணல் குழாயிலிருந்து வெளிப்பட்ட விஷ முள், ஒரு காவல்காரனின் தோள் பட்டையில் பதிந்தது. வலியினால் கத்திய அவன் கையிலிருந்த துப்பாக்கி கீழே விழுந்தது. மற்றொரு காவல் ஆள் வியப்போடு திரும்புமுன், டிங்கு மின்னல் வேகத்தில் செயல்பட்டான்.

"**நி**த்யா - சத்யா சீக்கிரம்" என்று கூறியபடி ஓடினான். தன்னைத் தொடருமாறு சைகை செய்தபடி. விநாடியும் தாமதிக்கவில்லை நித்யாவும் சத்யாவும் டிங்குவைத் தொடர்ந்து ஓடினார்கள். துப்பாக்கிகள் ஓலமிட்டன. ஆனால் வளைந்தும் நெளிந்தும் சென்ற மலைப்பாதை, அப்போது அவர்களுக்குப் பாதுகாப்பளித்தது. ஓடிக்கொண்டிருந்த சத்யா, திடீரென்று நின்றான். "டிங்கு நில். இங்கு பார்!" என்று குரல் கொடுத்தான். அவன் முன்னே இரு பாறைகளுக்கு இடையேயுள்ள ஒரு பிளவு- காய்ந்த புல்லும் புதரும் பாதி மறைத்த நிலையில்—

"நாம் இப்படி ஓடினால் அவர்களிடமிருந்து தப்ப முடியாது. இந்தப் பாறை இடுக்கில் ஒளிந்து கொள்வோம். ரொம்பக் குறுகலா இருக்கு. ஆனாலும் சிரமப்பட்டு உள்ளே புகுந்துடலாம்" என்றான் சத்யா. சொன்னபடியே அந்த இடுக்கில், உடலை நெளித்து, உள்ளே நுழையலானான். அவன் முயற்சி வீணாகவில்லை. சத்யாவை அடுத்து நித்யாவும் டிங்குவும் அந்தக் குறுகலான இடைவெளியில் - உடலில் பாறை கீறி வலி ஏற்பட்டாலும் அதைப் பாராட்டாமல் புகுந்து விட்டார்கள். உள்ளே போனதும் அங்கு விசாலமாக இருந்தது. இதயம் படபடக்க மூச்சு வாங்க அவர்கள் அங்கு ஒண்டிக்கொண்டிருந்தபோது, வெளியே மலைப் பாதையில் ஜெயராஜின் ஆட்கள் ஓடித் தேடும் அரவம் கேட்டது.

சிறிது நேர அமைதிக்குப் பிறகு கேட்டாள் நித்யா - "இப்போ நாம் என்ன செய்யப் போறோம்?"

"என்னைத் தொடர்ந்து வாங்க, இங்கிருந்து வெளியேற வேற வழி ஏதாவது இருக்கலாம்" என்றான் டிங்கு.

டிங்குவின் இடுப்புத் துணியை சத்யா பற்றிக்கொண்டான். சத்யாவின் சட்டையை நித்யா பிடித்துக்கொண்டாள். மெள்ள மெள்ள அவர்கள் இருளுக்குள் புகுந்து மலையின் மையத்தை நோக்கிப் போனார்கள். உள்ளே குளுகுளுவென்றிருந்தது. எங்கோ நீர் சொட்டும் ஓசை கேட்டது. இனம் புரியாத ஜந்துகளும் அவர்கள் காலில் மோதிக்கொண்டு ஓடின.

கொஞ்ச நேரப் பயணத்துக்குப் பின் சத்யா கூறினான். "தூரத்தில் வெளிச்சம் தெரியறாப் போல இருக்கு!" ஒரு இடத்தில் பாறைச் சுவரைத் தட்டித் தடவியபடி முன்னேறும்போது குறுகலான இடைவெளிப் பாதை திரும்புவதை உணர்ந்தார்கள் மூவரும். அங்கு திரும்பியபோது வியப்பினால் பிரமித்துப் போனார்கள். மலையைக் குடைந்தது போல விசாலமாக இருந்தது. மேலிருந்து சிறு, சிறு துவாரங்கள் வழியே வெளிச்சம் கசிந்து ஒழுகிக்கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்துக்குக் கண்கள் சுதாரித்துக் கொண்டபோது, பாறைச் சுவர்களில் மனித உருவங்களும் யானை, குதிரை, காளை போன்ற உருவங்களும் செதுக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள்.

"நம்ம டாடி கூறினாரே அந்தப் புராதனக் கோயிலோட மண்டபம் போல இருக்கு" என்றாள் நித்யா. அந்தச் சிற்பங்களைக் கையால் தடவி ஆராய்ந்தபடி.

"நித்யா! இது மண்டபமில்லே .கர்ப்பக்கிரகம் - கருவறை!" என்ற சத்யா, தன் அக்காவின் கையை இறுகப் பற்றியபடி, சில தப்படி நடந்து ஒரு சிலையின் முன்னால் கொண்டு போய் நிறுத்தினான் அவளை. "உற்றுப் பார்! பீடத்திலே அமர்ந்திருக்கிறது தேவி சிலை போல இல்லே?"

கண்களை இடுக்கிக் கூர்ந்து பார்த்த நித்யா "ஆமா!" என்றாள் வாய் பிளந்தபடி.

"கதை உருவங்கள்னு நான் எதிலயோ

படிச்ச ஞாபகம் இருக்கு. அது போகட்டும்- ஜெயராஜ் நம்ம அப்பாவை வெடி வைத்துப் பினக்கும்படி ஒரு பாறையைக் காட்டி னானே அது - இந்தச் சுவரின் மறு பக்கப் பாறைதான்னு நினைக்கிறேன்..." என்றான் சத்யா. சுதையினாலான தேவி சிலையின் எதிரேயுள்ள பாறையைப் பார்த்தபடி.

"நம்ம டாடிதான் முடியாதுன்னு உறுதி யாச் சொல்லிட்டாரே... ஆனா இப்போ நம் மோட உயிருக்கு அபாயம்கிறதினால ஒரு வேளை, வெடி வைத்துத் தகர்க்க சம்மதிச் சுடுவாரோ...?" நித்யாவின் குரல் தடுமாறியது.

"அப்போ - அந்த வெடிப்பிலே, பாறை களோடு நாமும் தூக்கி எறியப் படுவோம்" என்றான் சத்யா.

இவர்கள் உரையாடலில் கலந்து கொள் ளாமல் குடைவரைக் கோயிலின் சுவர்களை ஆராய்ந்து கொண்டிருந்த டிங்கு "இங்கே வாங்க" என்று குரல் கொடுத்தான். கோயில் சுவரின் ஒரு இடத்தில் மூன்று சிறுதுளைகள் இருந்தன. உற்றுப் பார்த்தபோது - சுவரில் செதுக்கப்பட்டிருந்த ஒரு பூதகணத்தின் கண்களும் - வாயுமாக அந்தத் துளைகள் அமைந்திருந்தன. துளைகள் உயரத்தில் இருந்ததினால் அதன் வழியே அவர்களால் பார்க்க முடியவில்லை. டிங்கு அங்கிருந்த ஒரு கல்லை, நித்யா சத்யாவின் உதவி யோடு உருட்டி, வந்து துளை களுக்குக் கீழே போட்டு அதன் மீது ஏறி நின்று,- அப்போதும்கூட எம்பித்தான் பார்க்க வேண்டி இருந்தது - துளைகள் வழியே வெளியே பார்த்தவன், ரகசியக் குரலில் கூறினான்:

"நித்யா பாப்பா! உங்க நயினாவும் அந்த ரெண்டுப் பசங்களும் இந்தப் பாறைக்கு அப் பாலே இருக்காங்க... வந்து பாரேன்!" என்று நித்யாவின் கையைப் பிடித்துத் தூக்கி அவள் எம்பிப் பார்க்க உதவினான். சத்யாவும் ஒரு துளை வழியே அந்தக் காட்சியைக் கண்டு வியந்து போனான்.

"அப்பா ரொம்பக் கவலையா உட்கார்ந் திருக்கார்... புண்ணியகோடியும் கலங்கிப் போயிருக்கார்..." என்றாள் நித்யா. "நாம் எப் படியாவது டாடிக்கு உதவணுமே... என்ன செய்யலாம்?"

" நாம் ஒண்ணும் செய்ய முடியாது. நாம் தப்பி ஓடியபோது ஜெயராஜின் ஆட்கள் நம் மைத் துரத்தியபடி துப்பாக்கியால சுட்டதில் நம் நிலை என்ன ஆச்சோன்னு டாடி கவ லையோட இருக்கார்..." என்றான் சத்யா.





ஓவியப் போட்டி

இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு பழங்கள். உங்களுக்குப் பிடித்த பழங்களை வண்ணம் தீட்டி அனுப்பி வையுங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிட வேண்டும்.
கடைசி தேதி: 20.4.2000

காரியத்திலேயே கண்ணாக உள்ளவன் டிங்கு. அவன் சொன்னான். "இது கோயில் சுவர் இல்லை - கோயிலுக்குள் வரும் பிரதான வாசல் இது. அம்மன் சிலை இதை நோக்கியபடிதான் இருக்கு... நாம் இதனுள்ளே வந்தது - பூசாரிகள் உள்ளே வரும் பின் பக்க ரகசிய வழியாக இருக்கணும். நுழைவாயிலை மூடி இருக்கும் பாறைக் கதவை உட்பக்கமிருந்துதான் திறக்க முடியும். வெளிப்பக்கமிருந்து திறக்க முடியாது. அது நுழைவாயில் போல தெரியாதபடி உருவாக்கி இருக்காங்க. உள்ளிருந்தபடி இதைத் திறக்க ஏதாவது ஏற்பாடு இருக்கணும். அதை நாம் கண்டுபிடிச்சுட்டா...." பேசிக் கொண்டே பாறைச் சுவரில் தன் கை விரல்களைப் படர விட்டுத் துழாவியபடி... ஆராய்ந்த போது, அவன் கை குமிழ் போன்ற ஒரு பொருள்மீது பட, மெலிதான ஒலியோடு ஏதோ மெள்ள நகருவது போல, மண்ணும் தூசியும் அவர்கள் மீது விழ...

"பாறை நகருது...!" கிசுகிசு குரலில் நித்யா, சத்யா... டிங்கு மூவரும் ஒரே சமயத்தில் கூற, அவர்கள் இதயத்துடிப்பு அதிகரிக்க மலைக் கோயிலின் நுழைவாயிலை மூடி இருந்த பாறை அரை அங்குல இடைவெளி விட்டு நகர்ந்திருந்தது.


"டிங்கு மேலும் அந்த விசையைத் திருகாதே!" என்று எச்சரித்தபடி அவன் கையைப் பற்றிக்கொண்டான் சத்யா. "நாம் இங்கிருப்பதை அந்த ஜெயராஜ் தடியன் தெரிந்துகொண்டால் காரியம் கெட்டு விடும்"

"இப்போ நாம என்ன செய்யறது...?" கவலையுடன் கேட்டாள் நித்யா.

"என்ன செய்யறதுன்னு நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன்" என்றான் டிங்கு. "பாறை கொஞ்சம் நகர்ந்து இடைவெளி உண்டாகி இருப்பது நம்ம அதிர்ஷ்டம். அவங்க யாரும் இதைக் கவனிக்கலே. இப்பப் பாருங்க..." என்றபடி விஷமுள்ளைக் குழாயில் போட்டுத் தன் வாயில் வைத்தபடி ஜெயராஜ் பிடரிக்குக் குறி பார்த்து வேகமாக ஊதினான். அடுத்த வினாடி "ஓவ்' என்று கழுத்தை அழுத்திக்கொண்டு, வலி தாங்காமல் தடுமாறியபோது அவன் கையிலிருந்த துப்பாக்கி கீழே விழுந்தது. அவனும் மயங்கிச் சரிந்தான். அடுத்த விநாடி மோகன் அந்தத் துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டு, சற்று தூரத்திலிருந்த ஜெயராஜின் ஆட்களிடம் "உங்கள் ஆயுதங்களைக் கீழே போடுங்கள்... ம்... சீக்கிரம்" என்று ஆணையிட்டார்.

ஆனால், அவர் அப்படி ஆணையிடும் முன்பே டிங்குவின் நாணல் குழாயிலிருந்து அடுத்தடுத்து கிளம்பிய விஷ முட்கள் அவர்கள் உடலில் பதிய, அவர்கள் தாமாகவே மயங்கிச் சரிந்தனர். நிலைமை தங்களுக்குச் சாதகமாகவே, நித்யாவும் சத்யாவும் பாறைக் கதவிலிருந்த குமிழை ஆர்வத்தோடு திருக - பலத்த ஓசையுடன் பாறை விலகி குகைக் கோயிலும் தேவி சிலையும் பளீர் வெளிச்சத்தில் புண்ணியகோடியைப் பார்த்து சிரித்தன. திகைத்துப்போயினர் மோகனும் புண்ணியகோடியும். " நித்யா சத்யா!" என்று தாவியோடிய மோகன் தம் குழந்தைகளை அள்ளி அணைத்துக்கொண்டார். இதற்குள் புண்ணியகோடி துப்பாக்கி ஏந்த அவருடைய உதவியாளர்கள் - ஜெயராஜையும் அவன் ஆட்களையும் வலுவான கயிறு கொண்டு கட்டித் தரையில் உருட்டினார்கள். வியப்பிலிருந்து விடுபட்டுப் பேசுவதற்கு மோகனுக்கு அவகாசம் தேவைப்பட்டது.

(தொடரும்)




எங்கள் ஊர் வடக்குப் பொய்கை நல்லூர். நாகை மாவட்டத்தில் உள்ளது. நாகைக்கும் வேளாங்கன்னிக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு சிற்றூர். நாகையிலிருந்து ஒன்றரை கி.மீ. தூரத்தில் உள்ளது.

பதினெட்டுச் சித்தர்களுள் ஒருவர் கோரக்கச் சித்தர். இந்தச் சித்தரின் சமாதி பீட ஆலயம் உள்ளது. வடநாட்டில் உள்ள 'கோரக்பூரில்' கோரக்கச் சித்தர் சமாதி ஆனதை மாற்றி இந்தப் பொய்கை நல்லூரில்தான் சமாதி ஆனார் என்ற பொய்யான செய்தியைப் பரப்பியதால் 'பொய்யூர்' – எனச் சுருக்கிச் சொல்வதாகச் செவி வழிச் செய்தி ஒன்று உண்டு. அது தவறு. கோரக்கச்சித்தர் எங்கள் ஊரில் தான் சமாதி ஆனார்.

பொய்கைநல்லூர் எனில் குளங்கள் நிறைந்த ஊர் எனப் பொருள்படும். 101 குளங்களுக்கு மேல் உள்ளன. ஆனால் குளங்கள் பலவற்றுள் தண்ணீர் இருக்காது. (கோடையில் மட்டும்) இடுகாட்டிற்கு அருகில் உள்ள குளம் 'ஆறடிக் குளம்'. (மனிதனுக்கு அடக்கம் செய்ய 6 அடி). 16 ஆம் நாளில் கிரியை செய்யும் குளத்தின் பெயர் 'கல் குளம்' (கல் நிறுத்துமுன் அக் கல்லைக் குளத்தில் இடுவர்). பெரிய குளம், சின்ன குளம் என்று ஒரு குறிப்பிட்ட வரிசையில்

நாள் முழுவதும் ரசிக்கலாம்!

குளங்கள் அமையப் பெற்றதால் 'பொய்கைநல்லூர்' என்று அழைக்கப்



· இராமேஸ்வரம் கோயில்





· பாம்பன் பாலம்

படுகிறது.

தமிழ்நாட்டிலேயே சித்தருக்கு ஆலயம் அமைத்த இடம் இங்குதான் உள்ளது. ஒவ்வொரு முழு நிலவன்றும் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்நாளில் கூடுவர். வழிபாடு செய்வர். இரவு தங்கி வழிபாடு செய்தால் 'எல்லாச் செல்வ' வளங்களும் பெறுவர் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

ஐப்பசி மாத பரணி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு நாள் இரவும் எச்சில் செய்யா உணவை 'அன்னக் காவடி' மூலம் பெற்று வறியோர்க்கு வழங்குவர். பக்தர்கள் இரவில் தங்க பெரும் செலவில் கட்டப்பட்ட கட்டட வசதி, சென்று வர பேருந்து வசதியுள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சமரச சன்மார்க்க சங்கம் இயங்கி வருகிறது. இதற்கு நிரந்தர கட்டட வசதியும் உள்ளது.

கவின் அழகுடைய, கடற்கரையை ஒட்டிய இயற்கை எழில் கொஞ்சும் எங்கள் ஊரில் அம்மன் ஆலயங்களும் சிவன், பெருமாள் ஆலயங்களும் அமைந்துள்ளன. சமய ஒற்றுமையைக் காக்க 'கல்லார் தர்க்காவும்' எங்கள் ஊராட்சி எல்லையில் அமைந்துள்ளது சிறப்பம்சமாகும். எங்கள் ஊருக்கு வாருங்கள்! சித்தரை வழிபடுங்கள்! எல்லாச் செல்வச் சிறப்பையும் பெறுங்கள்!

– எழில் பவித்திரமாணிக்கம்,
மெய்ப்பொருள் தொடக்கப்பள்ளி,
திருவாரூர்.

எங்கள் ஊர் இராமநாதபுரம். இது மாவட்டத்தின் தலைநகராகும். இராமநாதபுரத்திற்கு முகவை என்ற பெயரும் உண்டு. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையும் இங்கு இருக்கின்றன. இராமநாதபுரத்தில் வாரச் சந்தை ஒவ்வொரு புதன் கிழமையும் கூடும். வாரச் சந்தையில் ஆடு, மாடுகள், தானிய வகைகள், மண்பாண்டப் பொருட்கள், மிளகாய், மல்லி, கிராமங்களில் விளையும் காய் கனிகள் மற்றும் வெளியூர்களில் இருந்து வரும் பழவகைகளும் விற்பனைக்கு வரும்.

இங்கு சேதுபதி மன்னர் அரண்மனையும் இராமலிங்க விலாசம் என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாளிகையும் உள்ளன. இராமலிங்க விலாசத்தில் மன்னர் அமரும் சிம்மாசனமும் கலைச் சிற்பங்களும் சேதுபதிகள் பயன்படுத்திய ஆயுதங்களும் உள்ளன. இராமநாதபுரம் அரண்மனை பாதுகாப்புக்காக சுற்றுப்புற அரண்கள் உள்ளன. இராமலிங்க விலாசத்திற்கு அருகே சேதுபதி மன்னர்கள் வழிபட்டு வந்த இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் ஒன்று உள்ளது. இங்குள்ள இராஜேஸ்வரி அம்மன் சிங்கத்தில் அமர்ந்துள்ளது.

இராமநாதபுரம் மேற்குப் பகுதியினில்

எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க மூலைக்கொத்தளம் என்ற பாதுகாப்பு அரண் உள்ளது.

அரசினால் நடத்தப்படும் சேதுபதி கலைக் கல்லூரியும் பெண்கள் கல்லூரியும் தொழில்நுட்பம் பற்றி கற்றுக் கொடுக்கும் கல்விக்கூடங்களும் செய்யதம்மாள் பொறியியல் கல்லூரியும் பல பள்ளிகளும் உள்ளன.



இராமநாதபுரத்தைச் சுற்றி தேவிப்பட்டினம், திருப்புல்லாணி, இராமேஸ்வரம், பாம்பன் நயினார்கோவில், திருஉத்திரகோசமங்கை ஆகிய வழிபாட்டுத் தலங்களும் உள்ளன. எங்கள் ஊருக்கு வருபவர்கள் இந்த ஊர்களுக்கு வந்து இங்குள்ள தல தெய்வங்களையும் மறக்காது வழிபட்டுச் செல்கின்றனர். தேவிபட்டினத்திற்குச் செல்பவர்கள் சக்கரத் தீர்த்தத்தில் நீராடி கடலில் அமைந்துள்ள நவகிரகங்களை வணங்குகின்றனர்.

இராமநாதபுரத்திலிருந்து பத்து மைல் தொலைவில் கீழக்கரை உள்ளது. கீழக்கரையில் உலகப் புகழ்பெற்ற முத்து, நவரத்தினங்கள் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் உள்ளனர். இந்த ஊரை 'சின்ன அமெரிக்கா' என அழைப்பார்கள். கீழக்கரையில் சங்கில் இருந்து செய்யப்படும் மோதிரம், வளையல் முதலியன மிகவும் நேர்த்தியான முறையில் உருவாக்கப்பட்டு விற்பனையாகின்றன. இங்கே உள்ள பொருட்கள் காண்போர் கண்களை வியப்பில் விரிய வைக்கும் அளவுக்கு மிகவும் சிறப்புமிக்கவை.

மரைக்கலராயர் பட்டினத்தில் கடல் வாழ் உயிரினங்கள், பாசிகள், பவளங்கள், மீன் வகைகள், அவுலிமா, பனை மீன், சுறாமீன் வகைகள் மற்றும் உலகில் அரிதாகக் காணப்படும் நீலத்திமிங்கலம் முதலியவற்றின் பதப்படுத்தப்பட்ட உடல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் முயல் தீவு, கச்சத் தீவு போன்ற தீவுகளும் இயற்கையின் அரணாகவும் பார்க்கும் இடங்களாகவும் உள்ளன. மண்டபம் கேம்பில் மீன்வளம் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆராய்ச்சி நிலையம் உள்ளது. இராமேஸ்வரத்தில் கடலுக்கு நடுவே அமைந்துள்ள பாம்பன் பாலத்தில் நின்று கடலை நாள் முழுவதும் ரசித்துக் கொண்டேயிருக்கலாம்! அவ்வளவு இனிமையாக இருக்கும். ராமேஸ்வரம் கோயிலில் உள்ள ஆயிரம் கால் மண்டபம் உலகப் பிரசித்தி பெற்றது.

பிரபல அணுசக்தி விஞ்ஞானி அப்துல் கலாம், நடிகர் கமலஹாசன், டைரக்டர் ராஜ்கிரண், நடிகர் செந்தில் போன்றவர்கள் எங்கள் மாவட்டத்துக்காரர்கள் என்பதில் பெருமையடைகிறோம்.

அமைதியான சேதுக்கரை கடற்கரை, ராமேஸ்வரம் கோயில், பாம்பன் பாலம் ஆகியவற்றைக் கண்டுகளிக்க வாருங்கள் இராமநாதபுரத்திற்கு!

– எஸ். பொன்மொழி, ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீ சரஸ்வதி நடுநிலைப்பள்ளி, இராமநாதபுரம்.




ஆஹா, மாம்பழம்!

கோடைக்காலம் என்றாலே ஒரு புறம் வெயிலை நினைத்து கஷ்டமாக இருக்கும். மறுபுறம் மாம் பழங்களின் வரவை நினைத்து ஆனந்தமாக இருக்கும். சுட்டெரிக்கும் வெயிலில் சிறிதும் வாடாமல் பளபளவென்று நறுமணம் வீசிய படி மஞ்சள், பச்சை, சிவப்பு என பல கலவைகளாக வீற்றிருக்கும் மாம் பழங்களை விரும்பாதவர்களே கிடையாது.

மா மரத்தை சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பே பயிர் செய்து வந்திருக்கிறார்கள் என்றால் வியப்பாகத்தான் இருக்கிறது. கி.மு. 327ல் அலெக்ஸாண்டர் இந்தியாவிற்குப் படை எடுத்து வந்தபோது மாமரத்தைப் பற்றி அறிந்தார். அதன் பிறகே மாவின் மகிமை வெளிநாடுகளுக்குப் பரவியது. இருந்தாலும் கி.பி. பதினேழாம் நூற்றாண்டு வரை இந்தியா மற்றும் கிழக்கு ஆசியப் பகுதிகளில் மட்டுமே பயிரிடப்பட்டு வந்தது. அதன் பிறகே மற்ற நாடுகளுக்குப் பரவியது. எனவே மாமரத்தின் தாயகம் இந்தியாதான் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

மா ஆங்கிலத்தில் மாங்கோ என்றும் சீனாவில் மாங்குவோ என்றும் மலாய் மொழியில் மங்கா என்றும் அழைக்கப்படுகிறது. இந்த வார்த்தைகள் எல்லாம் தமிழிலிருந்து தோன்றியதாகக் கூறுகின்றனர்.



பசுமைமாறா பண்புடைய தாவரம் மா. தாவரவியலாளர்கள் இதனை அனகார்டியசி குடும்பத்தைச் சேர்ந்தது என்று கூறுவர். இதன் தாவரவியல் பெயர் மாங்கி பெரோ இண்டிகா. இது ஓர் இரு வித்திலைத் தாவரம்.

ஒவ்வொரு ஆண்டும் கோடைக் காலங்களிலும் சில சமயங்களில் நவம்பர் டிசம்பர் மாதங்களிலும் காய்க்கின்றது. பொதுவாக மார்ச் மாத இறுதியிலும் ஏப்ரல் மாதத்திலும் பழுக்க ஆரம்



பிக்கிறது.

மா வெப்ப மண்டலப் பகுதிகளில் மட்டுமே விளையக் கூடியது. கடல் மட்டத்திற்கு மேல் அதிக உயரம் உள்ள மலைப் பிரதேசங்களில் பொதுவாக வளருவதில்லை.

1000 வகை மா மரங்கள் உண்டு. சில தாழ்வாகவும் சில படர்வனவாகவும் சில உயரம் அதிகமாகவும் சில குடை போன்றும் வளரக் கூடியவை. ஒட்டு மாமரங்கள் பெரிதாக வளருவதில்லை.

மரவளர்ச்சி, ஆண்டில் ஒரு பருவத்தில் விரைவாக நடக்கும். பிறகு நின்று விடும். அப்போது நுனிக்குருத்தைக் காப்பதற்கு இலைகள் செதில்களாக மாறி இருக்கும்.

இலைகள் ஈட்டி வடிவில் இருக்கும். தளிர் மென்மையாகவும் பசுமை கலந்த செந்நிறமாகவும் இருக்கும். முற்றிய இலை கரும்பச்சையாகவும் உறுதியாகவும் இருக்கும்.


பூக்கள் மிகவும் சிறியவை. பெருங் கொத்துகளாக நுனியில் உண்டாகும். அது கீழ் நோக்கித் தொங்கிக் கொண்டிருக்கும். ஒரு கொத்தில் 2000 பூக்கள் கூட இருக்கும்!

கனி உள்ளோட்டுத் தசைக் கனி. சூலறைச் சுவரின் நடு அடுக்கே தின்னக் கூடிய தசையாக வளரும்.

மா பூக்கும் நேரத்தில் மழையும் பனியும் இருக்கக் கூடாது. ஆண்டிற்கு 30-75 அங்குலம் மழை பெய்தாலே போதும். மாமரத்திற்குத் தண்ணீர் பாய்ச்சும் வேலை இல்லை!

மாம்பழத்தில் வைட்டமின் ஏ.சி. நிறைய உள்ளன. கொட்டையில் 8% புரோட்டீன் உள்ளது. மாவிலை புகை தொண்டை நோய்க்குச் சிறந்தது. மாம்பருப்பு வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்தும். மரப்பட்டையும் கோந்தும் கூட மருத்துவத்திற்குப் பயன்படுகின்றன. உறுதியான மரம் நாற்காலி, மேஜை செய்ய உதவுகிறது.

சிட்டகாங் பகுதிகளிலும் நம் நாட்டில் அஸ்ஸாமிலும் மாங்காடுகள் உள்ளன. இவை உலகில் வேறெங்கிலும் உள்ளவைகளைக் காட்டிலும் மிகப்



பெரியவை.

மாவின் வளர்ச்சியும் சிறப்பும் இந்தியாவில் உள்ளது போல் மற்ற இடங்களில் இல்லை.

இந்தியாவில் உத்திரப் பிரதேச மாநிலத்தில் மட்டும் 40% முதல் 70% வரை மாம்பழங்கள் கிடைக்கின்றன. பீகார், ஆந்திரா, மேற்கு வங்காளம், தமிழ்நாடு, ஒரிசா ஆகிய மாநிலங்களிலும் மா அதிகமாக விளைகிறது.

நீலம், பங்கனப்பள்ளி, சுவர்ணரேகா, மல்கோவா, ருமானி, செந்தூரம், கிளி மூக்கு, சப்பட்டை, பாதுரி போன்ற வகைகள் தென்னிந்தியாவில் பிரபலம். சௌஸா, தேஷ்ரி, வாங்கிரா, குலாப்காஸ், பம்பை, அல்போன்சா வட இந்தியாவில் முக்கியமானவை.

பழங்களின் அரசன் என மா வர்ணிக்கப்படுகிறது. முக்கனிகளுள் முதன்மையான கனியும் இதுதான்.

அக்காலத்தில் இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்கள் மாம்பழத்தைப் பற்றி அதிகமாக குறிப்பிட்டிருக்கிறார்கள்.

காளிதாசர், வால்மீகி மற்றும் அகநானூற்றுப் புலவர்களும் இக்காலத் திரைப்பட பாடலாசிரியர்களும் மாவைப் பற்றிப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

கி.மு. 150 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட புத்த மடாலயங்களிலும் காஞ்சி புத்த ஸ்தூபியிலும் மாமர சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. திருவிளையாடல் புராணத்தில் இடம் பெற்றுள்ள ஞானப்பழமும் மாம்பழம் தான்!

முகலாய சக்கரவர்த்தி அக்பருக்கு மிகவும் பிடித்த பழம் இதுவே. லட்ச மாமரங்களை நட்டு லாக்பாக் அதாவது லட்சத் தோப்பு என்ற தோட்டத்தை அமைத்தார் அவர்.



மாவை வைத்து என்னென்ன செய்யலாம்?

- வடுமாங்காயை வைத்து ஊறுகாய் போடலாம். 'மாதா ஊட்டாத சோற்றை மாங்காய் ஊட்டும்' என்று சும்மாவா சொன்னார்கள்!
- பெரிய மாங்காய்கள் ஊறுகாய் போடப்பட்டு ஆண்டுக் கணக்கில் பயன்படுத்தப்படுகிறது.
- மாங்காய் பழுத்தவுடன் அப்படியே சாப்பிடலாம்.
- தோல் சீவிய பழங்களை மிக்ஸியில் போட்டு அரைத்து ஜூஸ்சாகவும் பயன்படுத்தலாம்.
- ஜூஸில் ஐஸ்கிரீம் போட்டால் மில்ஷேக் ரெடி.
- ரொட்டி, சப்பாத்திகளுக்குத் தொட்டுக் கொள்ள பழங்களை ஜாம் செய்து சாப்பிடலாம்.

மாவின் வடிவம் மிகவும் அழகானது. இந்தியாவில் தயாராகும் பட்டு, கம்பளம், இதர கை நெசவு ஆடைகளில் எல்லாம் மாவின் வடிவம் பண்பாட்டின் சின்னமாக விளங்கி வெளிநாடுகளிலும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

மாவிலை மங்கள விழாக்களில் வாயில் தோரணமாகப் பயன்படுகிறது.

ஐம்பது பைசாவிலிருந்து நூறு ரூபாய் வரை அதனதன்


100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

இந்த மாதம் விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசாக வழங்கவிருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவாக அனுப்பி வைப்பதிலும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த மாதப் போட்டி: 'பணம்' பற்றிய பழமொழிகள்.

பழமொழிகளை எழுதி அனுப்புங்கள். இந்த மாதமும் இன்னும் இரண்டு மாதங்களும் மேற்கண்ட மாவட்டங்களுக்குப் போட்டி தொடரும். மற்ற மாவட்ட வாசகர்களுக்கான போட்டி விரைவில் வரும். காத்திருங்கள்! பரிசை வெல்லுங்கள்!





சிறப்பிற்கேற்ப விற்கப்படுகின்றன.

நம் நாட்டில் விளையும் மாம்பழங்களில் பெரும்பான்மையானவை வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு அரசுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகிறது.

17 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: விஜி படம்: லலிதா




வாருங்கள்! தங்கள் வருகை என் பாக்கியம்!
வணக்கம் சிந்துபாத்!
என்ன விஷயமாக வந்திருக்கிறீர்கள்?
உங்களின் சாகசப் பயணங்கள் பற்றி கேள்வி பட்டிருக்கிறோம்!
மகிழ்ச்சி. அதற்கு?
நாங்கள் வியாபார நிமித்தம் பல இடங்களுக்குச் செல்கிறோம். தாங்கள் எங்களுடன் வந்தால் மகிழ்வோம்.
தற்போது பயணம் செல்ல எண்ணமில்லையே!
அப்படி சொல்லாதீர்கள். எங்கள் அழைப்பைத் தாங்கள் ஏற்க வேண்டும்.


சரி! உங்கள் அன்புக்குக் கட்டுப்படுகிறேன்.
நன்றி சிந்துபாத்!
கப்பல் கிளம்பி பத்து நாட்களாகி விட்டன.
உங்களால்தான் அற்புதமான இடங்களைப் பார்த்தோம்.
உங்களால்தான் எனக்கு இந்த வாய்ப்புக் கிட்டியது.
இந்தப் பயணத்தை எங்களால் மறக்கவே முடியாது.
இன்னொரு முறை நீண்ட பயணம் மேற்கொள்ள வேண்டும்.
ஐயோ! என் குழந்தைகள் அனாதைகளாகி விட்டார்களே!
என்னாச்சு கப்பல் தலைவனுக்கு?


எல்லோரும் கப்பல் தலைவனிடம் வந்தனர்!
ஏன் இப்படி கதறுகிறீர்கள்?
வர்த்தகர்களே நாம் வழி தவறி விட்டோம்.
பதட்டப்படாதீர்கள். ஏதாவது செய்ய முடியுமான்னு யோசிப்போம்.
திடீரென காற்று இருமுறை வேகமாக வீசியது.
கப்பல் மூன்று முறை சுழன்று பின்னோக்கிச் சென்றது. சுக்கான் அறுந்தது.
— தொடரும்.

ஓவியப் போட்டி முடிவுகள்

பிப்ரவரி இதழில் 'மழை' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.




முதல் பரிசு :

வி. ராஜா ராமன்,
பனிரெண்டாம் வகுப்பு, லால்புரம்,
கடலூர் மாவட்டம்.




இரண்டாம் பரிசு :

எஸ். ராமு,
களியக்காவிளை,
குமரி மாவட்டம்.



மூன்றாம் பரிசு :
ஜி. ஆனந்த் குமார்,
கேந்திர வித்யாலயா,
கல்பாக்கம்.



ஆறுதல் பரிசு :
என்.ஆர்.எஸ். நிவாஸ், எட்டாம்
வகுப்பு, வ.உ.சி. உயர்நிலைப்
பள்ளி, கோட்டுச்சேரி,
காரைக்கால்.



ஆறுதல் பரிசு :
எம். டேனியல் பாவாணன்,
ஐந்தாம் வகுப்பு,
கைலாசபுரம், திருச்சி.

கோகுலம் க்விஸ் முடிவு

பிப்ரவரி கோகுலம் க்விஸ் போட்டியில் சரியான விடைகளை எழுதிய பதின்மூன்று பேர் பரிசு பெறுகிறார்கள்.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. வி. அஜய்ராஜா, இராமநாதபுரம்.
2. டெ. ஆல்வின், ஐரேனிபுரம்.
3. கவிதா, சென்னை – 17.
4. டி. ஸ்ரீகந்தராஜா, திருநாகேஸ்வரம்.
5. ரா. ராஜ்குமார், திண்டுக்கல்.
6. கே. ஜெ. ராஷ்மி, பெங்களூர்.
7. எஸ். சந்திரசேகர், திருநாகேஸ்வரம்.
8. பி. முத்தையா, கல்லூரணி.
9. ஆர். ஷண்முகப்ரியா, சொக்கம்பாளையம்.
10. வி. அரவிந்த், நெய்வேலி.
11. சு. இந்துமதி, நெய்வேலி.
12. மம்தா, வடக்கன்குளம்.
13. பா. அருணாசலம், உடுமலைப்பேட்டை.

சரியான விடை :



1. உலகிலுள்ள தீவுகளுள் மிகப் பெரியது கிரீன்லாந்து.
2. டெல்லியில் உள்ள வானியல் ஆராய்ச்சி மண்டபம் ஜந்தர் மந்தர்.
3. தொலைவில் உள்ள பொருட்களைப் பெரிதாகக் காட்டும் கருவி தொலை நோக்கி.
4. சுரங்கங்களில் வேலை செய்வோருக்கு உதவும் வகையில் காப்பு விளக்கைக் கண்டறிந்தவர் ஹம்ரிடேவி.
5. பூச்சிகளுக்குக் கூட்டு கண்கள்.
6. கல்கத்தா நகரம் ஹூக்ளி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
7. பறக்கும் பாலூட்டி வௌவால்.
8. திருக்குறளில் 1330 குறட்பாக்கள் உள்ளன.
9. தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் முத்து கிடைக்கிறது.
10. அந்தமானின் தலைநகர் போர்ட் பிளேயர்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

அதிசய நாய்

அன்று விடுமுறை. எப்பொழுதும் விடுமுறை நாளன்று கிரிக்கெட் மட்டையை எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவதுதான் விஜய்யின் வழக்கம். ஆனால் அன்று வழக்கத்திற்கு மாறாக கையில் புத்தகத்தை வைத்துக் கொண்டு முகத்தில் மகிழ்ச்சி பொங்க படித்துக் கொண்டிருந்தான் விஜய்.

விஜய்யைத் தேடிக் கொண்டு அவன் நண்பன் மகேஷ் வந்தான்.

“விஜய்! என்னடா படிக்கறே? உனக்காக எல்லாரும் காத்துக்கிட்டிருக்காங்க” என்றான் மகேஷ் வியப்புடன்.

“நான் இப்ப வரலை. நீ போய் விளையாடு” என்றான் விஜய் புத்தகத்திலிருந்து கண்களை எடுக்காமல்.

“எனக்குக் காரணத்தைச் சொல். ஏன் வர மாட்டேங்கிறே?”

“வாண்டுமாமா எழுதிய அதிசய நாய் ராஜாவின் சாகசங்கள் என்ற புத்தகம்தான் காரணம். படிக்க ஆரம்பிச்சா சும்மா விறு விறுன்னு போகுது. அதான் விட்டுட்டு வர முடியலை” என்றான் விஜய்.

“நாய் என்னென்ன சாகசங்கள் பண்ணுதுன்னு சொல்லேன்” ஆர்வமுடன் கேட்டான் மகேஷ்.

“தன்னை வளர்ப்பவர்களையும் வெறுப்பவர்களையும் அன்புடன் நேசிக்குது. ஆபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றுது. கொள்ளைக்காரர்களைத் தனது திறமையால் வென்று நமது ஏகோபித்த பாராட்டைப் பெற்று விடுகிறது இந்த நாய். உனக்கும் தரேன். சொல்வதை விட படிச்சுப் பார்த்தால்தான் நன்றாக உணர முடியும்’ என்றான் விஜய்.

“என்ன ரெண்டு பேரும் விளையாடப் போகாமல் இங்கே உட்கார்ந்திருக்கீங்க?” என்று கேட்டபடியே வந்தாள் மீனா.

“புத்தகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்” என்றான் மகேஷ்.

“மகேஷ்! நீ உங்க பள்ளிக்கூட கலை நிகழ்ச்சியில் நாடகம் போடணும்னு



சொன்னியே. அதுக்கு ஒரு புத்தகம் கிடைச்சிருக்கு."

"என்ன புத்தகம் மீனா?"

"நமக்கெல்லாம் தெரிந்த எழுத்தாளர்தான்! கோகுலத்தில் நிறைய நாடகம் எழுதிய எஸ்.ஆர்.ஜி. சுந்தரம் தான் இதை எழுதியிருக்கார். புத்தகத்தோட தலைப்பு 'சிரிக்கச் சிரிக்க நடிக்கலாம்'. இதுல ஒன்பது நாடகங்கள் இருக்குது. கோகுலத்தில் வெளி வந்த நாடகங்களும் இருக்கு. வீட்டுக்குப் போகும் போது வாங்கிட்டுப் போ" என்றாள் மீனா.

"நான் கூட ஒரு புத்தகம் வாங்கியிருக்கேன். அரும்புகளின் ஆனந்தம் என்ற

உங்கள் நூலகம்

மீனா.

"நம்ம குணாகிட்டே ஹெர்குலிசின் வீரசாகசங்கள் புத்தகம் இருக்கு. வாங்கி படிடா" என்றான் விஜய்.

ராஜாவின் சாகசங்கள்!

தலைப்பில் குழந்தைகளுக்கான நாற்பது பாடல்கள் இதில் உள்ளன" என்று மகேஷ் நிறுத்தினான்.

"ஒரு பாட்டைப் பாடிக் காட்டு" என்றான் விஜய்.

"பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலே
வானின் நிலா வருகின்ற பொழுதிலே
நிலவும் தெரிவதில்லை விண்ணிலே
அந்த நாள்தான் அமாவாசை உலகிலே

இதே போல் பௌர்ணமிக்கும் பாடல் உண்டு. குழந்தைக் கவிஞரின் தாக்கம் தெரிகிறது. ராமுவின் படங்கள் நூலுக்கு அழகு சேர்க்கிறது."

"நவீன அறுவை மருத்துவத்தின் தந்தை என்று போற்றப்படும் டாக்டர் ஜோசப் லிஸ்டரின் போராட்டமான வாழ்க்கை வரலாற்றை கதைபோல் சுவைபட சொல்லியிருக்கிறார் தி.சு. கலிய பெருமாள். இந்தப் புத்தகம் இப்ப மாலதிகிட்டே இருக்கு. அவ தந்ததும் உனக்குத் தரேன்" என்றான்

"ஹெர்குலிஸ் யாருடா?" என்று கேட்டான் மகேஷ்.

"நம்ம மகாபாரதத்துல பீமனுக்கு இணையான கிரேக்க புராணத்தில் இடம் பெற்றுள்ள மாவீரன் ஹெர்குலிஸ். ஹெர்குலிசின் வரலாற்றை மனதைத் தொடும் விதத்தில் இருபது அத்தியாயங்களில் தந்துள்ளார் ஆசிரியர். ஒவ்வொரு அத்தியாயத்துக்கும் ஒரு முழு பக்க படம். பார்க்கவும் படிக்கவும் நல்லாயிருக்குடா" என்று விஜய் சொல்லிக் கொண்டிருக்கும்போதே யாரோ வருவது தெரிந்தது.

"நம்ம ரெண்டு பேரையும் தேடிட்டு கிரிக்கெட் டீமே வந்துகிட்டு இருக்கு. கிளம்புடா" என்றான் மகேஷ்.

விஜய்யும் மகேஷும் மீனாவிடம் விடைபெற்று மைதானத்தை நோக்கி நடந்தனர்.

— ரே

❖ அதிசய நாய் ராஜாவின் சாகசங்கள், வாண்டுமாமா, பக். 152, ரூ. 30/-, கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை – 17.

❖ சிரிக்கச் சிரிக்க நடிக்கலாம், எஸ்.ஆர்.ஜி. சுந்தரம், பக். 162, ரூ. 30/- பாற்கடல் பதிப்பகம், 12, ஆறுமுகம் லேன், திருவல்லிக்கேணி, சென்னை – 5.

❖ அரும்புகளின் ஆனந்தம், சுமா, பக். 100, ரூ. 18/-, மணிமேகலை பிரசுரம், சென்னை – 17.


❖ டாக்டர் ஜோஸப் லிஸ்டர், தி. சு. கலியபெருமாள், பக். 76, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 14.

❖ ஹெர்குலிசின் வீரசாகசங்கள், பேராசிரியர் எ. சோதி, பக். 88, ரூ. 20/- நன்மொழிப் பதிப்பகம், 41, கங்கை வீதி, வசந்த நகர், புதுச்சேரி – 605 003.

தீபாவளிப் பண்டிகை முடிந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டிருந்தன. 'தீபம்' அனாதைகள் இல்லத்தில் அன்று தான் தீபாவளி என்பதைப் போல், அங்கிருந்த சிறுவர் மற்றும் சிறுமியர் முகங்களில் அத்தனை மகிழ்ச்சி!

கம்பன் அரசு மேல்நிலைப் பள்ளியின் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்கள், தீபாவளியையொட்டி மாணவ மாணவிகளிடமும் பொது மக்களிடமும் சேகரித்த இனிப்பு வகைகள் மற்றும் ஆடைகளை தீபம் அனாதைகள் இல்லத்தின் சிறுவர் மற்றும் சிறுமியருக்கு விநியோகித்துக் கொண்டிருந்தனர். அதன் காரணமாகவே 'தீபம்' இல்லத்தில், அன்று ஒரு பண்டிகை நாளுக்குரிய குதூகலம் தென்பட்டது.

வண்ண வண்ண ஆடைகளை அணிந்து, வகை வகையான இனிப்புப் பண்டங்களைச் சுவைத்தபோது அந்தச்



மு. நடராசன்

சிறுவர்கள் முகத்தில் தென்பட்ட திருப்தி மற்றும் மகிழ்ச்சியைக் கண்ட நாட்டு நலப் பணித் திட்ட மாணவர் களுக்கும் பெருமிதமாய் இருந்தது.

தீபம் இல்லத்தின் நிர் வாகி மாணவர்

அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில் முதல் பரிசு பெறும் சிறுகதை

இனி ஒரு தொண்டு செய்வோம்!



களின் சேவையை வெகுவாகப் பாராட் டிக் கொண்டிருந்தபோதுதான், இல்லத் தைச் சேர்ந்த சிறுமி ஆயிஷா, தனக்கு அளிக்கப்பட்ட இனிப்புப் பொட்டலத் தைக் கையில் வைத்துக் கொண்டு நிர் வாகி முன் வந்து நின்றாள்.

ஆயிஷா ஏதோ சொல்ல விழை கிறாள் என்பதை உணர்ந்து கொண்ட நிர்வாகி மெதுவாய் அவளைத் தன் அருகே அழைத்து, ஆதரவாய் அவள் முதுகைத் தட்டி,

''ஆயிஷாக்குட்டி... என்னடா... என்ன வேணும் உனக்கு?'' என்றார்.

வாயைத் திறந்து பதில் ஏதும் கூறாமல், தன் கையில் இருந்த இனிப்புப் பொட்டலத்தை அப்படியே நிர்வாகி யிடம் கொடுத்தாள் ஆயிஷா.

அதை வாங்கிப் பிரித்துப் பார்த்த நிர்வாகிக்கு ஒரே ஆச்சரியம். ஆம், அதில் ஒரு துண்டுச்சீட்டு இருந்தது. அந் தச் சீட்டு தெளிவான எழுத்துகளால் மிகச் சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது.

'இந்த இனிப்புப் பொட்டலம் யார் கையில் கிடைக்கிறதோ அவரை, எங்களின் சகோதரனாக/சகோதரியாகப் பாவித்து எங்களால் ஆன உதவிகளைச் செய்ய முடிவு செய்திருக்கிறோம். இது யார் கையில் கிடைத்தது என்ற விவ ரத்தை எங்கள் நலப்பணித் திட்ட


மாணவர்கள் மூலம் அறிந்து, ஆவன செய்கிறோம்

பாசமுடன்
முருகன், சேவியர்,
பத்தாம் வகுப்பு மாணவர்கள்,
கம்பன் மேல்நிலைப்பள்ளி.

முருகனையும் சேவியரையும் எளிதில் இனம் கண்டு கொண்டார்கள் நலப்பணித் திட்ட மாணவர்கள். இணை பிரியா நண்பர்களான அவர்கள் படிப்பில் மட்டுமல்லாமல், செய்ய விரும்பும் எதையும் புதுமையாய்ச் செய்வதிலும் சாதனை படைப்பவர்கள்.

''எங்கள் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் செய்தியைத் தெரிவித்து முறையான அனுமதியுடன் முருகனையும் சேவியரையும் தங்களைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறோம் ஐயா'' என்று கூறிய நலப் பணித் திட்ட மாணவர்களை ஒரு மெலிதான புன்னகையுடன் வழியனுப்பி வைத்தார் தீபம் இல்ல நிர்வாகி.

அன்று ஞாயிற்றுக்கிழமை. முருகனும் சேவியரும் தங்களது பெற்



''மன்னரிடம் பாடி கனமான பரிசைப் பெறலாம் என எண்ணியது தவறாகி விட்டது!''

''ஏன் என்ன நடந்தது?''

''மன்னர் பரிசாக இரண்டு எடைக் கல்லைத் தந்துள்ளாரே!''

— காழி ஆர். சீதாராமன்

றோர்களுடன் தீபம் அனாதை இல்லத்திற்குச் சென்றனர். அனுமதி பெற்று உள்ளே சென்ற அவர்கள், இல்ல நிர்வாகியைச் சந்தித்து தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டதோடு, தலைமை ஆசிரியர் கொடுத்த அடையாளக் கடிதத்தையும் நிர்வாகியிடம் கொடுத்தனர்.

எளிதில் அவர்களை நினைவு படுத்திக் கொண்ட நிர்வாகி, தனது அறையில் இருந்த இருக்கைகளில் அமரச் செய்தார்.

"ஒரு மிகப் பெரிய காரியத்தை மிகச் சாதாரணமாகச் செய்ய விழைந்திருக்கிறார்கள், உங்களின் பிள்ளைகள். அவர்கள் நினைத்ததைச் செய்ய விழைந்த முறை எனக்குப் பிடித்திருக்கிறது. அவர்களின் எண்ணம் உயர்வானது. ஆனாலும் அனாதைப் பெண் ஆயிஷாவை இவர்கள் எவ்வாறு சகோதரியாகப் பாவித்து, எப்படி உதவப் போகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை'' என்றார்.

''அதற்கான திட்டத்துடன்தான் தங்களைச் சந்திக்க வந்துள்ளோம். தயவு செய்து எங்களுக்கு ஒத்துழைப்பு தர வேண்டுகிறோம்'' என்று ஒரே குரலில் ஒலித்தனர் முருகனும் சேவியரும்.

"திட்டமா... என்ன அது?'' ஆச்சரியத்துடன் கேட்டார் நிர்வாகி.

"திட்டம் அது இதுன்னு பெரிசா ஒண்ணும் இல்லீங்க. ஒரு வகைல பார்த்தா அது எங்களால முடிஞ்ச ஒரு சின்ன உதவி. ஆயிஷாவோட படிப்புக்கும் பராமரிப்புக்கும் ஆண்டுக்கு எவ்வளவு செலவாகுதோ அதை, இனிமேல், தீபம் இல்லத்திற்கு நாங்கள் செலுத்தி விடுகிறோம். இனி ஆயிஷா எங்கள் குடும்பத்தில் ஒருத்தி என்ற முறையில் எங்கள் குடும்பத்தில் நடக்கும் எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் ஆயிஷாவையும் அழைத்துச் செல்ல விரும்புகிறோம். பள்ளி விடுமுறை நாட்களில் ஆயிஷாவை எங்கள் வீட்டில் வைத்துக் கொள்ளவும் தாங்கள் அனுமதிக்க வேண்டும். இதுவே எங்களின் நெஞ்சார்ந்த விருப்பம்'' என்றார் முருகனின்

தந்தை.

"இதற்கு தங்களின் மேலான அனுமதியும் மனமுவந்த ஒத்துழைப்பும் கிடைக்குமானால் நாங்கள் பெரிதும் மகிழ்வோம்" நெகிழ்ச்சியுடன் கூறினார் சேவியரின் தாய்.

"பிள்ளைகளின் குணங்கள் பெற்றோரைச் சார்ந்தவை என்பார்கள். இந்தப் பிள்ளைகளின் மனதில் உயர்ந்த எண்ணங்களும் தயாள குணமும் வளர்ந்ததற்கான காரணம் இப்போது எனக்கு நன்றாகவே புரிகிறது. உங்கள் விருப்பம் குறித்து, தீபம் இல்லத்தின் பிற பொறுப்பாளர்களிடம் கலந்துபேசி விரைவில் உங்களுக்குத் தகவல் அனுப்புகிறேன்" என்று பொறுப்புடன் பதில் கூறி அனுப்பி வைத்தார் நிர்வாகி.

தான் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி உரிய நேரத்தில் தீபம் இல்லத்திற்குப் பெற்றோருடன் வந்த முருகனையும் சேவியரையும் இன்முகத்தோடு வரவேற்றார் நிர்வாகி.

முருகனையும் சேவியரையும் பாராட்டும் நோக்கில் அன்று ஒரு சிறு விழாவிற்கே ஏற்பாடு செய்திருந்தார்கள். விழா மேடையில் இல்லத்தின் முக்கிய பொறுப்பாளர்களும் முருகன் மற்றும் சேவியரின் பெற்றோர்களும் அமர்ந்திருந்தனர்.

முருகனையும் சேவியரையும் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்திய பின் நிர்வாகி பேசத் தொடங்கினார்:

"நமது இல்லத்தின் சிறுமி ஆயிஷாவை சகோதரியாய் ஏற்று உதவ முன் வந்துள்ள இவர்களை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. தங்களால் இயன்ற அளவு ஒருவருக்காவது உதவலாமே என்ற அடிப்படையில் அந்த ஒருவரை பாரபட்சமின்றி விருப்பு வெறுப்பின்றி தேர்வு செய்ய அவர்கள் மேற்கொண்ட நடைமுறை என்னை வியக்க வைத்தது.

"இந்தச் சிறுவர்களைப் போல சமூக அக்கறையோடு செயல்பட பலரும் முன் வந்தால், தெருக்களில் குப்பை பொறுக்கிக் கொண்டும் பிச்சை எடுத்துக் கொண்டும் திரியும் ஆயிரமாயிரம் அனாதைகளுக்கு ஒரு நல்ல விடிவு காலம் பிறக்கும். அவர்களின் வாழ்விலும் வசந்தம் வீசும். அதற்கு எங்களைப் போன்ற அனாதை இல்லங்கள் துணை நிற்கும். இதுவும் ஒரு வகையில் தேசம் காக்கும் தொண்டு தான்.

"சிந்தையால் உயர்ந்த இச் சிறுவர்களை நெஞ்சார வாழ்த்துகிறேன். இவர்களின் பெற்றோர்களைப் பார்க்கும்போது என் நெஞ்சம் பூரிக்கிறது. அவர்கள் இனி இந்த இல்லத்தின் கௌரவத்தக்குரிய நபர்களாக மதித்துப் போற்றப் படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்" என நிர்வாகி கூறியபோது கூட்டத்தில் எழுந்த கரவொலியையும் ஆரவாரத்தையும் கண்டு பெருமிதமடைந்தனர் முருகனும் சேவியரும்.

முருகனின் தாய், ஆயிஷாவை அன்போடு தூக்கி மடி மீது வைத்துக் கொள்ள, சேவியரின் தாய், ஆயிஷாவின் கன்னத்தில் வாஞ்சையோடு ஒரு முத்தமிட்டார். தீபாவளி, கிருஸ்துமஸ் மட்டுமல்லாது இனி அவர்கள் ஆயிஷாவுக்காக ரம்ஜானையும் கொண்டாடுவார்கள்!



"அந்தப் பேச்சாளர் ஏன் இவ்வளவு சத்தம் போடுறார்?"
"உலக அமைதி வேணுமாம்!"
— கங்கா கணேசன்



DOES NOISE POLLUTION BOTHER YOU?

GHOST FLAME
-will-o'-the wisp

WHAT ARE RAINDROPS?

A STRANGE ENCOUNTER-EXPERIENCE

APRIL 2000
Rs. 6/-

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097



ஆலமரம்



ஆற்றங்கரையின் ஓரத்திலே;
அழகாய் நிற்கும் ஆலமரம்!
ஆலமரத்தின் கிளைதனிலே;
அன்பாய் பேசும் இளங்கிளிகள்!

ஜோடிப் புறாக்கள் கூட்டினிலே;
கூடி மகிழ்ந்து குலவிடுமே!
குட்டியைச் சுமந்த குரங்குகளும்;
கும்மாளந்தான் போட்டிடுமே!

குக்கூ... என்றே குயிலினங்கள்;
குரலை உயர்த்திப் பாடிடுமே!
வட்டம் போடும் வண்டுகளும்;
வா வா... என்றே அழைத்திடுமே!




கீச் கீச்... என்றே அணில்கூட்டம்;
கிளையில் கனிகள் பறித்திடுமே!
காகா.... என்றே காக்கைகளும்;
கரைந்து உறவை அழைத்திடுமே!

உழைத்துக் களைத்தோர் உடலெங்கும்;
உரசும் தென்றல் தாலாட்டும்!
துண்டை விரித்துத் தூங்கிவிட்டால்;
துன்பம் எல்லாம் பறந்தோடும்!



— ஞா. மாடசாமி



1. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முட்டை – முட்டைக்குள் மூணு படி தண்ணீர் – அது என்ன?

2. இரண்டு பக்கம் காடு நடுவிலே ரோடு – அது என்ன?

3. சகோதரர்கள் பனிரெண்டு பேரையும் சகோதரிகள் மூன்று பேரும் சுற்றி வருகிறார்கள் – அவர்கள் யார்?

4. மழைக் காலத்தில் மண்ணுக்குக் குடை – அது என்ன?

5. வெள்ளைக்காரன் வெந்தால் தான். வெத்தலை பாக்கு – அது என்ன?

6. பச்சையப்பனுக்கு உடம்பெல்லாம் முள்– அது என்ன?

— **அன்னை பாக்கியராஜ், செம்பனார்கோயில்.**

விடை: 1. இளநீர், 2. தலைமுடி வகிடு, 3. கடிகாரம், 4. காளான், 5. சுண்ணாம்பு, 6. பலா பழம்.

1. அடி மேல் அடி அடித்தும் அசராத சின்னப் பையன் குறி வைத்த இடம் பார்த்து தப்பாமல் சேர்ந்திடுவான்! – யார் அவன்?

2. வெள்ளைச் சிமாட்டிக்கு விளக்கு ஒன்று எரிகிறது தலைக்கு மேலே! – அது என்ன?

3. தொட்டாற் சுருங்கிக்குத் தொண்ணூறு கால்களாம்! – அது என்ன?

4. வெள்ளை வயலில் கறுப்பு விதைகள்! கண்ணால் பார்க்கலாம். கையில் எடுக்க முடியாதே! – அது என்ன?

– எல். கோபால கிருஷ்ணன், வேலூர் – 6.

விடை: 1.கடிதம், 2. மெழுகுவர்த்தி, 3. மரவட்டை, 4. புத்தகத்தில் உள்ள அச்சு எழுத்துகள்.

1. பச்சை, பச்சை என்றிருக்கும் பாகற்காயும் அல்ல;
பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயும் அல்ல, உருக்கினால் நெய் வடியும் வெண்ணெயும் அல்ல – அது என்ன?

2. பெட்டியைத் திறந்தான், லெட்சுமணன் பிறந்தான் – அவன் யார்?

3. முள்ளூ முள்ளுக்குள்ளே, முந்திரித் தோப்புக்குள்ளே, வைக்கோல் போருக்குள்ளே மாணிக்கம் கண்டு எடுத்தேன் – அது என்ன?

— **ம. மனோஷ், திருச்சி** – 21.

விடை: 1. ஆமணக்கு, 2. நிலக்கடலை, 3. பலாச்சுளை.

ஒரு சாண் குட்டையில் ஒரு முழ வால் – அது என்ன?

விடுகதைப் பக்கம்

1. முக்காடு போட்டால் மூலையில் உட்காருவான். காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடுவான் – அவன் யார்?

2. சளசளக்குமாம்; சண்டை போடுமாம்; அடக்கிக் கொண்டால் அகிலம் உனக்கு– அது என்ன?

3. இரு குதிரைகள் மேலே ஒரு ராஜா பயணம் போறார் – அது என்ன?

4. அங்கும் இங்கும் ஆட்டம் போடுவாள். ஆட்டம் முடிந்ததும் மூலையில் கிடப்பாள் – அவள் யார்?

5. சிங்கார மண்டபத்தில் சங்கீதக் கச்சேரி. அங்கே சென்றால் அடி, உதை தப்பாது – அது என்ன?

– டி. அழகுவள்ளி,
ஆண்டிபட்டி

விடை: 1. பேனா, 2. நாக்கு,
3. செருப்பு, 4. துடைப்பம்,
5. தேன்கூடு.

1. கல்லாலும் மணலாலும் கட்டாத வீடு; கதவு இல்லாத வீடு; வீட்டுக்காரரோடு நகரும் வீடு – அது என்ன வீடு?

2. வட்ட வட்ட சுக்கிரன். வால் இல்லாத சுக்கிரன். எலும்பு இல்லாத சுக்கிரன். என்னை வந்து கொஞ்சுகிறான் – அவன் யார்?

3. இலை சுருளும்; கனி இனிக்கும்; பூ துவர்க்கும் – அது என்ன?

– கவிமணி செந்தில்,
பாண்ட மங்கலம்.

விடை: 1. நத்தை, ஆமை ஓடு,
2. மூட்டைப் பூச்சி,
3. வாழை மரம்.

1. நிலத்திலே முளைக்காத மரம். தலையிலே முளைக்கும் மரம். கிளை உண்டு. ஆனால் இலை இல்லை – அது என்ன?

2. ஆயிரம் பேர் சென்றாலும் வந்த சுவடு தெரியாது – அது என்ன?

– எஸ். சிவசங்கர்
ஆடையூர்.

விடை 1. மான் கொம்பு, 2. எறும்பு.

1. பட்டணத்து வேம்பு; வெட்ட, வெட்டத் துளிர்க்கும் – அது என்ன?

2. கையில் பந்தாடும்; கனலுக்கு இரையாகும்; கரி சாம்பல் பொடியாகும் – அது என்ன?

3. ஏற முடியாத மரம்; இலை விடும் மரம் – அது என்ன?

4. ஒரு சாண் குட்டையில் ஒரு முழ வால் – அது என்ன?


5. வட்ட முகம் உண்டு; வாய் திறந்து பேசாது; காட்டக் கை உண்டு; கால் ஊன்றி நடக்காது – அது என்ன?

6. வெட்டிக் காட்டில் விதை ஊன்றி, வீரமலைக் காட்டில் கொடி ஓடி, கண்டனூரில் பால் எடுத்து, கடையெல்லாம் புகையுது – அது என்ன?

– பெ. இராமசாமி,
செந்துறை.

விடை. 1. தலைமுடி,
2. வரட்டி, 3. வாழை மரம்,
4. நாக்கு, 5. கடிகாரம்,
6. சாம்பிராணி.





விடோபா – ருக்மாபாய் தம்பதியருக்கு நான்கு குழந்தைகள். முதல் பிள்ளை நிவிர்த்திநாத். இரண்டாவது புதல்வன் ஞானேசுவரன். மூன்றாவது சோபான் தேவன். நான்காவது பெண் முக்தாபாய்.

விடோபாவுக்கு இல்லறத்தில் நாட்டமில்லாததால் சன்னியாசியாகப் போய் விட்டார். திருமணத்திற்கே அவர் லேசில் சம்மதிக்கவில்லை. திருமணம் முடிந்ததும் அவர் காசிக்குப் போய் விட்டார். குருநாதர் ஸ்ரீபாத ஸ்வாமிகளின் கட்டாயத்தின் பேரிலேயே ருக்மாபாயுடன் வாழ்ந்தார். இப்போது மறுபடி துறவு தரித்தார்.

அலங்காவதியில் ருக்மாபாயின் தந்தை சிதோபந்து உஞ்சவிருத்தி எடுத்து காலம் கழித்தார். அவரிடம் குழந்தைகளோடு வந்து சேர்ந்தாள் ருக்மாபாய்.


நிவிர்த்திநாத் தனியாக பஜனை செய்து அரிசி, பருப்பு வாங்கி விடுவான். ஞானேசுவரனை சிதோபந்து அழைத்துச் செல்வார். குழந்தைகள் நால்வருமே இனிமையாக பஜனைப் பாடல்களைப் பாடுவார்கள்.

ஒரு பெரிய பணக்காரர் வீட்டில் சமாராதனை. குழந்தைகள் இன்றாவது நல்ல் சாப்பாடு வயிறு நிரம்பச் சாப்பிடட்டும் என்று சிதோபந்து அழைத்துச் சென்றார். சிதோபந்துவுக்கு ஒரு பக்கம் நிவிர்த்தியும் மறுபக்கம் ஞானேசுவரனும் உட்கார்ந்து கொண்டார்கள்.

"ஞானா! லட்டு, வடையெல்லாம் எடுத்து வைத்துக் கொள். சோபானுக்கும் முக்தாவுக்கும் கொடுக்கலாம். அவர்கள் பாவமில்லையா?" என்றான் நிவிர்த்தி.

"சரி. நீயும் தின்னாதே! அம்மாவும் பாவம்தானே"

எருமை பேசிய நீதி!



என்றான் ஞானேசுவரன்.

"அதோ இலை போடறாங்க பார்" என்றார் சிதோபந்து.

"யாரு இவங்களைப் பந்தியில் உட்கார வைத்தது? ஓய், சிதோபந்து! எழுந்திரும். சன்யாசி சம்சாரியாகி பெற்ற பிள்ளை களை ஊரை விட்டு ஒதுக்கி வைச்சிருக்கோம்... பசங்களா! என்ன முழிக்கறீங்க? எழுந்து நடையைக் கட்டுங்க" என்றார் இலை போடுபவர்.

அவமானத்தால் குன்றிப் போன சிதோபந்து, "இந்தக் குழந்தைகள் என்ன தப்பு செய்தார்கள், அவர்களை ஏன் விரட்டுகிறீர்கள்?" என்றார்.

"மணியாறது....! என்ன பேசிண்டிருக்கே? முதுகிலே அறைஞ்சு வெளியே தள்ளி கதவைச் சாத்துடா" என்றார் காரியஸ்தர்.

கூட்டம் கூடியது. கைகலப்பானது. சிதோபந்துவை அடித்து நொறுக்கினார்கள். மயங்கி விழுந்த தாத்தாவைக் கண்டு கோபம் கொண்டான் ஞானேசுவரன். துணி உலர்த்தும் மூங்கில் கம்பு மூலையில் சார்த்தப்பட்டிருந்தது. அதை எடுத்துச் சுழற்றினான் ஞானேசுவரன்.

"எங்க தாத்தா மேலே யாராவது கை வைச்சீங்க... தெரியும் சேதி! வாங்க என்கிட்டே" என்றான் எட்டு வயதுச் சிறுவன்.

பத்து வயது நிவிர்த்திநாத் மூங்கிலைப் பிடுங்கிப் போட்டு ஞானேசுவரனை சமாதானம் செய்து சிதோபந்துவுடன் வீடு வந்து சேர்ந்தான்.

அந்த நாளில் நீதிமன்றம் ராஜசபைதான். தங்களை சிதோபந்துவும் ஞானேசுவரனும் அடித்ததாக ராஜாவிடம் புகார் கொடுத்தனர் அலங்காவதி நகரவாசிகள்.

சிதோபந்து நிற்க முடியாமல் படுத்த படுக்கையாக இருந்தார். ஞானேசுவரன் காவலர்களோடு அரச சபைக்குச் சென்றான்.

அரசர் ஞானேசுவரனை விசாரித்தார். நடந்ததை இரு சாராரையும் கேட்டுத் தெரிந்து கொண்டார் மன்னர்.

'குழந்தாய்! பெரியவர்களை அடிக்கலாமா?" அன்புடன் கேட்டார் அரசர்.

"தாத்தா எத்தனை பெரியவர். அவரை இவர்கள் அடித்தது தவறில்

ஆர். பொன்னம்மாள்

லையா? சம ஆராதனை நடத்துகிறார்களாம்! எல்லோருக்கும் சமமாய் போஜனம் அளித்தால்தான் பக



வான் திருப்தியுறுவார். எங்கள் தந்தை கொலை, கொள்ளை செய்தாரா? துறவியாகி உலக க்ஷேமத்துக்காக பூஜை, யாகம் செய்கிறார். அது குற்றமா? அப்படியே குற்றம் என்றாலும் அதற்கு தாத்தா எப்படி பொறுப்பாவார்?" என்று தைரியமாக பல நியாயங்களையும் எடுத்துரைத்த ஞானேசுவரனை 'வா' என்றழைத்து இரு கைகளாலும் வாரித் தழுவிக் கொண்டார் அரசர்.

"உன்னோடு சாப்பிடும் தகுதி இவர்களுக்கு இல்லை. நிஜமாகவே நீ ஞானத்துக்கு ஈஸ்வரன்தான்! மந்திரங்களை மனப்பாடம் செய்து ஒப்பிப்பவர் உயர்ந்தவராகி விட முடியாது. ஞானேசுவரா! நீ இனி உஞ்ச விருத்தி எடுக்க வேண்டாம். கல்வி கற்க வேண்டும். உங்கள் நால்வருக்கும் கல்வி போதிக்க, காட்டிற்குச் சென்று உங்கள் தந்தையை உனது வாக்கு வன்மையால் அழைத்து வா" என்று கூறி ஏராளமான பொன்னும், பொருளும் கொடுத்து பல்லக்கில் அனுப்பி வைத்தார்.

ருக்மாபாயும், சிதோபந்துவும் அரசவையில் நடந்ததைக் கேட்டு ஆனந்தப்பட்டனர். எல்லோருமாக விடோபா இருக்குமிடம் சென்று நடந்தவைகளைக் கூறி அவரை அழைத்தனர்.

விடோபா, "துறவு வாழ்க்கையை மேலும் ஏளனப்படுத்தி பேசுவார்கள். நான் வர மாட்டேன்" என்று உறுதியாகக் கூறினார்.

நிவிர்த்தியும் ஞானேசுவரனும் தாங்கள் எப்படியும் அழைத்து வருவதாகக் கூறி தாத்தாவை அலங்காவதிக்கு அனுப்பினர்.

யோகநிஷ்டை கலைந்து எழுந்த விடோபா, "ஞானா... இங்கே ராத்திரி அட்டை, அரணை, பாம்பு ஊறும். நரி ஊளையிடும், ஆந்தை அலறும். நீ குழந்தை. பயமாய் இருக்கும். நிவிர்த்தி, தம்பியை அழைத்துக் கொண்டு ஊருக்குப் புறப்படு" என்றார்.

"அப்பா! அட்டையும் அரணையும உங்களைக் கடிக்காதா? இந்த வயதில் தந்தைப் பாசத்தை இழந்த நாங்கள் மடிந்து போனாலும் தப்பில்லை!" என்று உறுதியாகச் சொன்னான் ஞானேசுவரன்.

"ஞானா! நகரத்தில் சதா பிரச்னைகள். நிம்மதியாய்ப் பூஜை கூட பண்ண முடியாது" என்றார் தந்தை.

"பதினெட்டு அத்யாயங்கள் கொண்ட கீதையை யுத்த களத்தில்தான் கிருஷ்ணர் அர்ஜுனனுக்குப் போதித்ததாகச் சொல்லி இருக்கிறார் தாத்தா. ராஜ துறவியாய் இருந்த ஜனகரைப் பற்றி நான் சொல்லித்தான் தாங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? அரண்மனை எரிகிறது என்ற போதும் கடமையில் கண்ணாக இருந்த ஜனகர் சீதாதேவியையும் ஊர்மிளையையும் விட்டு விட்டு அமைதியை நாடி காட்டுக்கா போனார்? நாட்டைப் பாதுகாக்கவில்லையா? தம்பி பெண்களுக்கும் சேர்த்து தானே திருமணம் செய்வித்தார்!"

இப்படி எல்லாக் கேள்விகளுக்கும் தக்க பதில் சொன்ன பிள்ளைகளின் அறிவு விடோபாவை மெய்மறக்கச் செய்தது. பிள்ளைகளோடு அலங்காவதிக்கு வந்தார்.

அரசர் தினமும் ஆன்மீக போதனைகள் செய்ய விடோபாவை நியமித்தார். பிள்ளைகளும் தந்தையிடம் கல்வி கற்றனர். இந்த மேன்மையும் பெருமையும் பொறாமைக்காரர்களுக்கு வயிற்றெரிச்சலாய் இருந்தது. அவர்கள்தான் சிதோபந்துவின் மேல் அரசனிடம் வழக்குத் தொடுத்தவர்கள்.

ராஜகுரு பைடணபுரிக்குச் சென்றிருந்தார். அலங்காவதியிலிருந்து இருபது பேர் அவரிடம் சென்று நடந்ததைத் திரித்துக் கூறி, "இனிமேல் ராஜகுரு பதவி உங்களுக்கில்லை. விடோபாதான் ராஜகுரு. அவனை ஒதுக்கி வைத்தால் தான் விடிவுகாலம்" என்றனர்.

அதே சமயம் அரசன் ஒரு ஓலையில், "சன்யாசம் ஏற்றபின் குரு ஸ்ரீபாதர் ஆணையால் இல்லறத்தை ஏற்றுக் கொண்ட விடோபாவையும் அவரது குடும்பத்தாரையும் ஊரை விட்டுத் தள்ளி வைப்பது தவறு என்பதைத் தாங்கள் உணர்த்த வேண்டும்" என்று எழுதி விடோபாவை மந்திரியுடனும் நிவிர்த்தி, ஞானேசுவரனோடும் ராஜகுருவிடம் அனுப்பியிருந்தார்.



"ஏன் இப்போதெல்லாம் அவரைப் பார்க்க விசிறிகள் வருவதில்லை?"

"இது குளிர்க்காலமாச்சே! வெயில் காலத்தில் வந்து பாரு, நிறைய விசிறிகள் வருவாங்க!"

– புதுப்பேட்டை இராமலிங்கம்



"ஓ! நீர்தான் அந்த விடோபாவா? உங்களை ஜாதியில் சேர்த்துக் கொண்டால் சன்யாசிகளெல்லாம் பிள்ளை பெற்று ஊரில் விட்டு விடுவார்கள். ஊருக்கே தலைவலியாகிவிடும்" என்று எரிச்சலோடு கூறினார் ராஜகுரு.

"ஞானா! நிவிர்த்தி! எழுந்திருங்கள். நாம் போகலாம்" என்று எழுந்தார் விடோபா.

"இருங்களப்பா! அரசரது ஓலையை நிராகரித்து விட்டதாகச் சொல்லலாமா?" என்று கேட்டான் நிவிர்த்தி.

"என்னோடு பேசும் யோக்யதை உங்களுக்கில்லை. இங்கிருந்து போகலாம். அரச ஓலைக்கு பதில் நான் சொல்லிக் கொள்கிறேன்" என்றார் ராஜகுரு கர்வத்துடன்.

"ஆமாம்! அதோ போகிறதே ஒரு எருமைக்கடா. அதோடுதான் நீங்கள் பேசவீர்களாக்கும்" என்று தெருவில் சென்ற எருமையைக் காட்டினான் ஞானா.

"என்ன... எங்கள் குருதேவரை எருமைக்கு ஒப்பிட்டா பேசுகிறாய்!" என சண்டைக்கு வந்தார்கள் அவரது சீடர்கள்.

"தவறுதான்!" எருமை அவரை விட உயர்ந்தது" என்றான் ஞானேசுவரன்.

"இதை நிரூபிக்காமல் எழுந்தால் உன்னை வெட்டி எறிவோம்" என்றார் ராஜகுரு சீற்றத்துடன்.

ஞானேசுவரன் எருமையின் தலையில் கை வைத்தான். "பரந்தாமா! துருவனுக்குக் காட்சி கொடுத்தது சத்தியம் என்றால், பிரகலாதனை அத்தனை சோதனைகளிலும் காப்பாற்றியது உண்மை என்றால் இந்த எருமையிடம் புகுந்து இவர்களுக்கு புத்தி புகட்டு. என் களங்கத்தைத் துடைப்பது உன் பாரம்" என்று மனத்துக்குள் பிரார்த்தித்தான்.

என்ன ஆச்சரியம்! எருமை 'கணீ'ரென்ற குரலில் பேச ஆம்பித்தது.

"ஊர்வசியின் வயிற்றில் பிறந்த வசிஷ்டர், தவத்தால் ஸ்ரீராமபிரானுக்கே குருவானார்.

"வேடனான வால்மீகி, வைராக்கியத்தால் இராமாயண காவியத்தை இயற்றினார். சீதாதேவியையும் அவளது புதல்வர்களையும் ஆதரிக்கும் பாக்கியத்தைப் பெற்றார்.

"நாயின் வயிற்றிலிருந்து தோன்றிய சௌநகர் தவத்தால் பிரம்மபுத்திரர் ஆனார்.

"தாசியின் வயிற்றில் பிறந்த நாரதர் தவத்தால் பிரம்மகுமாரரானார். நன்னடத்தையும் குணமும் தானதர்மமும் ஒழுக்கமும் ஒருவனை உயர்த்தும். தவமும் வேத அறிவும் தெய்வபக்தியும் அசூயை இன்மையும் கொண்ட விடோபாவும் அவரது மக்களும் உயர்ந்தவர்களாவார்கள்" என்றது எருமை.

ராஜகுரு வெலவெலத்துப் போனார். எருமை இயல்புக்கு வந்ததும் கூட்டத்தைக் கண்டு மிரண்டு ஓடி விட்டது. விடோபாவின் காலில் தடாலென்று விழுந்த ராஜகுரு அவருடன் அலங்காவதி சென்றார். பொறாமையாளர்கள் நடுங்கி ஒடுங்கினர்.

ஞானேசுவரனை ஊரே கொண்டாடியது.

கேட்கட்டுமா டாக்டர்?

வயிற்றுப் பகுதியை

● **கி.ர. கிருஷ்ணசாமி, நாராயணத் தேவன்பட்டி.**

? கையில் ஊசி மருந்து போட்ட இடம் வீங்கி கட்டியாகி விட்டது. இதற்கு நல்ல மருத்துவ ஆலோசனை கூறுங்கள், டாக்டர்?



! தினமும் காலை, மாலை இரு வேளைகளுக்குக் கையில் வீக்கம் உள்ள இடத்தின் மீது ஐஸ் கட்டியை சுமார் பத்து நிமிடங்களுக்கு வைக்கவும். மருத்துவரின் நேரடி ஆலோசனைப்படி தகுந்த நுண்ணுயிர்க்கொல்லி மருந்து, அழற்சி எதிர்ப்பிகள் ஆகியவற்றையும் எடுத்துக் கொள்ளவும். மூன்று வாரங்களுக்கு இந்த சிகிச்சையைத் தொடரவும். பெரும்பாலும் குணம் கிடைத்து விடும். இல்லையென்றால் சிறு அறுவை சிகிச்சை மூலம் கட்டியை அகற்றி விடலாம். மருத்துவரை அணுகவும்.

● **ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1.**

? மருதாணி இட்டுக் கொள்வது நல்லதா டாக்டர்? இதனால் ஜலதோஷம் பிடிக்குமா?

! மருதாணி இட்டுக் கொள்வதால் உடல் அழகு கூடும். இந்த வகையில் மருதாணி நல்லதுதான். அதே நேரத்தில் சிலருக்கு மருதாணி ஒத்துக்கொள்ளாது. ஒவ்வாமை குணங்களை வெளிப்படுத்தும். மருதாணி போட்ட இடத்தில் அரிப்பு, தடிப்பு, புண் உண்டாகும். மூக்கில் நீர் ஒழுகும். இவை மருதாணியால் ஏற்படுகின்ற கெடுதல்கள். இவைகூட வெகு அரிதாகவே நிகழும். மற்றபடி மருதாணி இட்டுக் கொள்வதால் ஜலதோஷம் பிடிக்க வாய்ப்பில்லை.



● **டெ. ஆல்வின், ஐரேனிபுரம்.**

? எலும்புகள் இல்லாத வயிற்றுப் பகுதியை எவ்வாறு எக்ஸ்-ரே எடுப்பது டாக்டர்?

! வயிற்றின் உள்ளுறுப்புகளை எக்ஸ்-ரேயில் காண இயலாது. வயிற்றில் காற்றும் நீரும் எந்த அளவில் உள்ளது என்பதை மட்டுமே எக்ஸ்-ரேயில் காணலாம். இதைக் கண்டுபிடிப்பதன் மூலம் குடலில் அடைப்பு ஏதேனும் உள்ளதா, குடலில் துளை விழுந்துள்ளதா போன்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம். அத்தோடு கல்லீரல் இயல்பான அளவில் உள்ளதா, வீக்கமடைந்துள்ளதா என்பதையும் வயிற்று எக்ஸ்-ரேயில் காண் முடியும். சிறுநீரகப் பாதையில் கற்கள் இருந்தால் இதில் தெரியும். ஆனால் வயிற்றின் உள் உறுப்புகளைத் தெளிவாகப் பார்ப்பதற்கு அல்ட்ரா சோனோகிராம் (ultra sonagram) என்னும் கேளா ஒலியலைக் கருவிதான் உதவும். தவிர இரைப்பை, முன் சிறுகுடல், குடல், குதம் போன்றவற்றின் உள் அமைப்பைக் காண எண்டோஸ்கோப்பி (endoscopy) மற்றும் கோலோன்டோஸ்கோப்பி (colondoscopy) கருவிகள் உதவும்.



● **யமுனா ரெங்கநாதன், மடிப்பாக்கம்.**

? தலை முடிக்குக் கறுப்புச் சாயம் பூசுவதால், கண் பார்வைக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமா டாக்டர்?


டாக்டர் கு. கணேசன்

எவ்வாறு எக்ஸ்-ரே எடுப்பது?

! ஏற்படாது. தலை முடிக்குக் கறுப்புச் சாயம் பூசும்போது அது கண்ணில் படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வெகு அரிதாக கறுப்புச் சாயத்திற்கு ஒவ்வாமை உண்டாக வாய்ப்புள்ளது. அச்சமயத்தில் அது கண்ணில் பட்டுவிட்டதென்றால் கண்ணின் வெண்படலம் மற்றும் கார்னியாவில் புண் ஏற்பட்டுவிடும். இது பார்வையைப் பாதிக்கும். இது மிக மிக அரிதாக நடக்கக் கூடியது. ஆகவே பயம் வேண்டாம். எச்சரிக்கை போதும்.

● **கனக. முத்துச் சிதம்பரம், இழுாய்.**

? அக்கி நோய் ஏற்பட என்ன காரணம்? இந்த நோய்க்கு ஆங்கில மருத்துவத்தில் என்ன பெயர்? இதற்கு மருந்து, மாத்திரை உண்டா?



! அக்கி நோய்க்கு ஆங்கில மருத்துவத்தில் 'ஹெர்பிஸ் ஜாஸ்டர்' (herpes zoster) என்று பெயர். இது சிற்றம்மையைத் (chicken pox) தோற்றுவிக்கின்ற 'வேரிசெல்லா ஜாஸ்டர்' (varicella zoster) என்னும் வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது. இந்த நோய் பெரும்பாலும் பெரியவர்களைத்தான் தாக்கும். சிறுவர்களுக்கு வெகு அரிதாகவே வரும். இந்த நோய்க் கிருமிகள் தோலின் உணர்வு நரம்புகளைப் பாதிப்பதால், அந்த இடங்களில் திட்டுத் திட்டாகச் சிவந்த நிறத்தில் கொப்புளங்கள் ஒரு குவியல் போல் தோன்றும். கொப்புளங்களில் அரிப்பு, எரிச்சல், கடுமையான வலி ஏற்படும். கொப்புளங்களில் நீர் கோத்து, பின்பு சீழ்க் கொப்புளங்களாக மாறி, பத்து நாட்களில் உலரத் தொடங்கும்.



அக்கி நோய்க்கு இப்போது ஆங்கில மருத்துவத்தில் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏசைக்ளோவிர் (acyclovir) என்பது அதன் பெயர். அக்கி அம்மை மீது ஏசைக்ளோவிர் குழைமத்தைப் (cream) பூசலாம். ஒரு வாரத்திற்கு ஏசைக்ளோவிர் மாத்திரைகளையும் சாப்பிட வேண்டும். வலி நிவாரணிகளும் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளும் உதவும்.

● **ம. பிரபு, பெரியதச்சூர்.**

? மூளைக்காய்ச்சல் வராமல் தடுக்க என்ன முயற்சி எடுக்க வேண்டும், டாக்டர்?

! மூளைக் காய்ச்சலைத் தடுக்க தடுப்பூசி உள்ளது. மூன்று வயதிற்குள் இரண்டு முறை இவ்வூசியைப் போட்டுக் கொண்டால் மூளைக்காய்ச்சல் வராது. மற்ற சமயங்களிலும் இதனைப் போட்டுக் கொள்ளலாம்; தவறில்லை. அதே நேரத்தில் இந்தக் கொடிய நோயைத் தடுப்பதற்கு தடுப்பூசியை மட்டும் நம்பாமல், சுயசுத்தம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். காரணம், இந்த நோய்க் கிருமிகள் பன்றி, கொசு, அசுத்த உணவு, தூய்மையற்ற குடிநீர் போன்றவற்றின் வழியாக மனித உடலுக்கு வந்து சேருகின்றன. பன்றி வளர்ப்பில் சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பது அல்லது பன்றிகளை ஒழிப்பது கொசுக்களை ஒழிப்பது அல்லது கொசுக்கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்வது, சுத்தமான உணவை உண்பது, தூய நீரைக் குடிப்பது போன்ற நடவடிக்கைகள் மூளைக் காய்ச்சல் நோய்க்கு விலங்கு போடும்.



அதிபுத்திசாலிகள்!

கதை: எம். வடிவேல்,
பன்னிரெண்டாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, பெரியதச்சூர்.

படம்: லட்சுமி பிள்ளை




தபால் எடுப்பவர் வந்தார்.
அண்ணே! கடிதம் எல்லாத்தையும் எடுத்துட்டீங்களா?
ஆமாம்! ஏன் கேட்கறே?
நாங்க எழுதின கடிதங்களை எங்களிடமே கொடுத்துடுங்க.
எதுக்குப்பா? அதெல்லாம் தரக் கூடாது!
நான் கடிதம் எழுத மறந்துட்டேன். இவன் முகவரி எழுத மறந்துட்டான்.
ம்... நீங்க சொல்ற மாதிரி கடிதம் எதுவும் இல்லையே! எங்கே போட்டீங்க?
இதோ பிள்ளையாருக்கு எதிரில் இருக்கே இந்தப் பெட்டியிலேதான்!
கோயில் உண்டியலில் கடிதத்தைப் போட்டுட்டு எங்கிட்டே கேட்கறீங்க? போங்கடா அதிபுத்திசாலிகளா!



எங்கள் ஊரில் நடந்தது!

இல்லாமல் பத்திரமா வச்சுக்குவேன்'' என்று சொன்னான். சட்டென்று ஒருவருக்கும் புரியவில்லை. சிறிது நேரத்திற்குப் பின்பே புரிந்து கொண்டு சிரிக்க ஆரம்பித்தோம்.

– பெ. ராமசாமி, செந்துறை.

பால் சாப்பிட்டேன்!

என் தம்பிக்குப் பாலே பிடிக்காது. அன்று காட்பரீஸ் சாக்லேட் முழுவதையும் தின்று தீர்த்தான். அம்மா சிறிது நேரம் கழித்து பால் கொண்டு வந்து கொடுத்தார். உடனே அவன், "கொஞ்ச நேரத்திற்கு முன்புதானே ஒன்றரை டம்ளர் பால் குடிச்சேன்'' என்றான். உடனே அம்மா, "நான் இப்பதான் கலந்துக்கிட்டு வர்றேன். கதை விடறியா?'' என்றார். "ஐயோ அம்மா! காட்பரீஸ் சாக்லேட் விளம்பரத்தில் ஒன்றரை டம்ளர் பால் இருக்குன்னு சொல்றாங்களே. அதைத்தான் சொன்னேன். நீங்கள் தினமும் இதை வாங்கிக் கொடுத்தால் சந்தோஷப்படுவேன்'' என்றான். "அப்புறம் பல் எல்லாம் பூச்சியாகி விடும். சாக்லேட் சாப்பிட முடியாது'' என்றார் அம்மா கோபத்துடன்.

– எஸ். லக்ஷ்மி, ஒன்பதாம் வகுப்பு, நங்கநல்லூர், சென்னை.

முட்டாள் கையில்

பிறந்த நாள் பரிசு!

என் நண்பன் பிறந்த நாளன்று அவன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவனுடைய மாமா கிளம்பும் போது ஐம்பது ரூபாயை அவனிடம் கொடுத்து, "பணம் எப்போதும் முட்டாள் கையில் தங்கவே தங்காது. புத்திசாலி கையில்தான் தங்கும்'' என்றார். என் குறும்புக்கார நண்பன் சிரித்துக் கொண்டே, "புரியுது மாமா! உங்கள் கையிலிருந்து என் கைக்கு வந்த இந்த ரூபாயை நான் உங்களை மாதிரி



மிஸ்டர் ஒயிட்!

நானும் தங்கையும் கடைக்குச் சென்றோம். சாமான்களை வாங்கிக் கொண்டு கிளம்பும் நேரத்தில் தங்கை, "மிஸ்டர். ஒயிட்'' என்றாள். கடைக்காரர் சிரித்துக் கொண்டே தங்கையிடம், "என்னை மிஸ்

டர். ஒயிட் என்று சொன்னதற்கு நன்றி'' என்றார். "ஐயோ! நான் உங்களைச் சொல்லலைங்க. துணி துவைக்கிற சோப்புத் தூளைக் கேட்டேன்'' என்றாள் தங்கை. "கொஞ்சம் சந்தோஷப்பட விட மாட்டியே! இந்தா பிடி'' என்று பாக்கெட்டைக் கொடுத்தார் கடைக்காரர்.

– மா. உமாபதி, சோழபுரம்.



ஏன் விழலே?

நானும் என் தோழிகளும் பள்ளி விட்டு வந்து கொண்டிருந்தோம். நாங்கள் வரும் வழியில் ஒரு வீடு இடிந்திருந்தது. அதைப் பார்த்த என் தோழி, "அந்த வீட்டில் மூன்று சுவர்களும் இடிந்து விட்டன. ஒரே ஒரு சுவர் மட்டும் விழாமல் இருக்கு ஏன்?'' என்று கேட்டாள். நாங்கள் தெரியலை என்றோம். உடனே, ''அதுலதான் ராம்கோ சிமெண்ட்ன்னு எழுதியிருக்கே?'' என்று சொன்னாள். நாங்கள் சிரிக்க ஆரம்பித்தோம்.

– க. சரண்யா, பத்தாம் வகுப்பு,
பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
ஆண்டிபட்டி.

...ணம் தங்காது!

செல் எதற்கு?


என் மாமா வீட்டிற்குச் சென்றிருந்தேன் மாமா கடைக்குக் கிளம்பினார். அத்தை சமையலறையிலிருந்து, "கோல்கேட் ஜெல் வாங்கிட்டு வாங்க'' என்று குரல் கொடுத்தார். சற்று நேரத்தில் கடைக்குச் சென்று திரும்பிய மாமா கோல்கேட் பேஸ்டையும் பாட்டரி செல்களையும் வாங்கி வந்திருந்தார். இதைப் பார்த்த அத்தை, "பேட்டரி செல் எதற்கு?'' என்றார். மாமா "நீதானே கோல்கேட், செல் கேட்டே'' என்றார். ''நான் சொன்னது கோல்கேட் ஜெல் என்றார்'' அத்தை. "நின்று போன கடிகாரத்திற்குச் செல் வாங்கிட்டு வரச் சொன்னியாக்கும்னு நினைத்தேன்'' என்றார் மாமா.

– டி.என்.பி. கிருஷ்ணன்,
மடிப்பாக்கம், சென்னை.



எங்கள் ஊரில் நடந்தது!

விசித்திர ராஜாவின் விபரீதப் போட்டி




'என்ன வந்தது இளவரசருக்கு? ஏன் இப்படியொரு விபரீதப் போட்டியை வைத்திருக்கிறார்?' வசந்தபுரியெங்கும் இதே பேச்சுதான். வசந்தபுரி ஒரு வளமான நாடு. அந் நாட்டு இளவரசன் விசித்திர வீரன் நல்ல அறிவாளி. மக்களும் அவன் ஆட்சியில் சந்தோஷமாக வாழ்ந்தனர். இளவரசனுக்குத் திருமணம் செய்ய எண்ணி மகாராணியார் பெண் தேடிய போதுதான் விசித்திரன் இப்படியொரு விபரீதமான போட்டியைச் சொன்னான்.

"என்னைத் திருமணம் செய்து கொள்பவள் அழகியாக மட்டும் இல்லாமல், நல்ல புத்திசாலியாகவும் நல்ல பொறுப்புள்ளவளாகவும் இருக்க வேண்டும். அதனால் நான் வைக்கப் போகும் போட்டியில் வெற்றி பெறுபவளையே மணந்து கொள்ளப் போகிறேன்" என்று அறிவித்தான்.

இளவரசன் என்ன போட்டி வைக்கப் போகிறான் என்று ஆவலோடு அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் அந்தப் போட்டியோ எல்லோரையும் திகிலடைய வைத்தது. "என்னை மணக்கப் போகும் பெண் எனக்கு பாவாடைக்காரியை குழம்பு வைத்து, பாண்டியன் தேவியை ரசம் வைத்து, ஒரு பிள்ளைக்காரியை கறி செய்து, மூன்று கண்ணியைத் துவையல் செய்து சாப்பாடு போட வேண்டும்" என்றான்.

இந்தப் போட்டியைக் கேள்விப்பட்ட மற்ற நாட்டு ராஜகுமாரிகள், இளவரசருக்குப் பைத்தியம் என்று கேலி செய்தனர். மக்கள் எல்லோரும் 'நம் இளவரசருக்கு என்ன ஆயிற்று?' இல்லை இளவரசருக்குப் பதில் ஏதேனும் அரக்கன் உருமாறி வந்து விட்டானோ என்று கவலை கொண்டனர்.

ஒரு வருடம் ஆகியும் யாரும் வரவில்லை. ஆராய்ச்சி மணியை அடிக்கவும் இல்லை. இந்நிலையில் அந்நாட்டு அரச குருவின்



பேத்தி, தாத்தாவைப் பார்ப்பதற்காக வசந்தபுரி வந்தாள். அவள் நல்ல அழகி. அறிவாளியும் கூட. வந்தவள் இளவரசனின் போட்டியைக் கேள்விப்பட்டவுடன், "தாத்தா, நான் உங்கள் இளவரசரை மணக்க விரும்புகிறேன், அவர் சொன்ன போட்டியில் எனக்குச் சம்மதம். இளவரசரைச் சந்திக்க என்னை அழைத்துச் செல்லுங்கள்" என்றாள். குரு எவ்வளவோ மறுத்தும் பிடிவாதமாக இளவரசரைச் சந்தித்தாள்.

விசித்திரனுக்கு மட்டுமல்ல, மற்ற அரசவைப் பிரதானிகளுக்கும் நாட்டு மக்களுக்கும் ஒரே வியப்பு. இருப்பினும், தன் முன் வந்த பெண்ணை நோக்கி, "உன் பெயர் என்ன?" என்று கேட்டான். "என் பெயர் மதுரா. நான், நீங்கள் சொன்னது போல உங்களுக்குச் சமைத்துப் போடுகிறேன். நீங்கள் என்னை மணக்கச் சம்மதமா?" என்று கேட்டாள் மதுரா. இளவரசனும் சரி என்று சொல்லி விட்டு, "உனக்குத் தேவையானவற்றை அரண்மனை சமையலறையில் கேட்டு வாங்கிக் கொள். நீ போட்டியில் தோற்று விட்டால் உனக்குத் தண்டனை உண்டு. யோசித்து பதில் சொல்" என்றான். மதுரா ஒன்றும் பேசாமல் சமையலறையை நோக்கி நடந்தாள்.

அரசகுரு தவியாய்த் தவித்தார். 'பாவாடைக்காரி, ஒருபிள்ளைக்காரி கிடைத்தாலும் கிடைப்பார்கள். பாண்டியன்தேவியை யாராவது தொட முடியுமா? விடுவானா பாண்டியன்?'

விடிந்தது. எல்லோரும் அவளின் சமையலைப் பார்க்கக் கூடினார்கள். பெண்களின் உடல்கள் வெட்டப்பட்டு சமைக்கப்பட்டிருக்கும் என எண்ணி அதைப் பார்க்க விரும்பாமல் பாதி பேர் கண்களை மூடிக் கொண்டனர். என்ன விந்தை! பாத்திரங்கள் வந்ததும் சமையல் மணம் ஊரைத் தூக்கியது. பார்த்தால் கத்தரிக்காய் சாம்பார், வேப்பம்பூ ரசம், வாழைக்காய் கறி, தேங்காய்த் துவையல்.

இளவரசனும் மகாராணியும் மதுராவைப் பாராட்டினர். "நான் சொன்ன போட்டியைப் புரிந்து கொண்டு செய்தவள் இவள்தான். கத்தரிக்காயின் மேல்காம்பிற்குக் கீழ் உள்ள பச்சைப் பகுதியைப் பாவாடை என்பர். அதனால் கத்தரிக்காயை பாவாடைக்காரி என்றேன். பாண்டிய மன்னர்கள் வேப்பம்பூ மாலையை கழுத்தில் அணிவார்கள். அதைத் தங்கள் துணைவியாக மதிப்பர். அதனால் பாண்டியன்தேவி என்றும், வாழை ஒரு குலைதான் ஈனும் அல்லவா? அதனால் ஒரு பிள்ளைக்காரி என்றும் தேங்காய்க்கு மூன்று கண் இருக்குமல்லவா அதனால்தான் மூன்று கண்ணி என்றும் கூறினேன்" என்று இளவரசன் விளக்கமளித்தான்.

விசித்திரன், மதுராவின் திருமணம் இனிதே நடந்தது.

பி. லெட்சுமி

என் பெயர் மறந்து போனதே!



• எடிசன்

நம்மில் பலருக்கும் இருக்கும் ஒரு மென்மையான அல்லது செல்லமான வியாதி ஞாபகமறதியாகும். சிலருக்கு அபார ஞாபகசக்தி இருக்கும். அவர்கள் உடற்கூறு அப்படி.

• சரித்திரத்தில் என்றும் நினைவிலிருக்கும் பெயர் லியோனார்டோ டாவின்சி. இந்த மேதையால் எதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவே முடியாது. எதையும் ஒரு தாளில் சிறு குறிப்பாக எழுதிக் கொள்வார். பல சமயங்களில் அந்தக் குறிப்புகளை தொலைத்து விட்டுத் தேடுவார்.



• சாப்ளின்

• சர் வால்டர் ஸ்காட் - ஒருமுறை தன்னுடைய சொந்தக் கவிதை ஒன்றையே கவிஞர் பைரன் எழுதியதாகக் கூறி - புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்தாராம்! அவ்வளவு ஞாபக மறதி!

• சார்லி சாப்ளின் ஏழு வருடங்கள் பல சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார். அந்த ஏழு வருடங்களிலும் பல சந்தர்ப்பங்களில் சாப்ளின் தன்னுடைய பெயரின் கடைசிப் பகுதியை மறந்து தவிப்பாராம்! அந்தச் சமயங்களில் அவருடைய காரியதரிசிதான் பெயரை நினைவூட்டுவாராம்!


• தாமஸ் ஆல்வா எடிசன் மூன்றே மாதங்கள்தாம் பள்ளியில் உட்கார்ந்தார். ஞாபகசக்தி சுத்தமாக இல்லை என்பதால் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.


வீட்டில் தாய் மூலம் கல்வி கற்றார். ஆனால் பின்னாளில் தனது விஞ்ஞான ஆராய்ச்சி விஷயங்களில் மட்டும் மகத்தான ஞாபக சக்தியை வளர்த்துக் கொண்டார். ஆனாலும் சொந்தக் காரியங்களில் அதைக் கடைப்பிடிக்க முடியவில்லை.

ஒருமுறை வரி கட்டும் அலுவலகத்தின் முன்பு 'க்யூ'வில் நின்றிருந்தவர் தன் முறை வந்த போது, தனது பெயரை மறந்து விட்டுத் தவித்தாராம்.

உடனே பரபரப்போடு தன் சட்டைப் பையில் கையை விட்டுத் தேடினார். அவர் சட்டைப் பையில் தமது பெயரைத் தேடவில்லை. தமக்கு வந்த கடிதங்கள் ஏதாவது இருந்தால், அதிலிருந்து தம் பெயரைத் தெரிந்து கொள்ளலாம் எனத் தேடினார். பாவம் அந்த நேரத்திற்கு ஒரு கடிதமும் கிடைக்கவில்லை. நல்லவேளையாக அருகிலிருந்த ஒருவர் 'இவர்தான் எடிசன்' எனக்கூற பிரச்னை முடிந்தது.


தகவல் : **டி. எம். சண்முக வடிவேல், தருமபுரி.**






அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப்
போட்டியில் முதல் பரிசு
பெற்ற பாடல்

அறிவியல் அற்புதம்!



எண்ணிச் சற்றே பாருங்கள்
எதிர் காலத்தை இருட்டாக்கும்;
சின்னத் திரையில் சினிமாவில்
சிந்தை இழப்பது நலமாமோ?




பரந்து விரிந்த உலகத்தைப்
பாக்குப் பெட்டியில் அடைத்தாற்போல்;
இன்டர் நெட்டில் இவ்வுலகம்
இனிதாய் அறிவைத் தேடுங்கள்!



சென்னை சென்று வருவதைப்போல்
செவ்வாய்க் கிரஹம் சென்றுவரும்;
அதிசயம் நிகழ்த்தக் காத்திருக்கும்
அறிவியல் அற்புதம் நாடுங்கள்!


காற்றும் நீரும் மாசடைந்து
கருக இருந்த உலகத்தை;
சுற்றுச் சூழல் விஞ்ஞானம்
சுகமாய் அமைத்தது பாருங்கள்!

எண்ணம் முழுதும் படிப்பினிலே
ஏற்ற வகையில் செலுத்தியதால்;
அகிலம் போற்றும் சாதனைகள்
ஆன்றோர் நிகழ்த்திக் காட்டுகிறார்!



சிந்தை முழுக்க கல்வியென
சிறப்பாய்ப் படித்து உயருங்கள்;
வண்ணம் மிக்க பூவைப்போல்
வாழ்வு மலரும் பாருங்கள்!

— மு. நடராசன்
வில்லியனூர், புதுவை.







அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை.

யூரோ

ஐரோப்பிய நாடுகளுக்கு என்று தனியாக ஒரு பொது கரன்சி உருவாக்கப்பட்டுள்ளது. யூரோ என்று அழைக்கப்படும் இது 1999, ஜனவரி முதல் தேதி அமலுக்கு வந்தது. இந்தப் பொது கரன்சி ஆஸ்திரியா, பெல்ஜியம், பின்லாந்து, ஜெர்மனி, பிரான்சு, அயர்லாந்து, இத்தாலி, லக்சம்பர்க், நெதர்லாந்து, போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய 11 நாடுகளில் அமலுக்கு வந்தது. இதன்படி இனி இந்நாடுகளுக்கென தனித்தனி கரன்சி இருக்காது. இவையனைத்திற்கும் பொதுவான கரன்சியே யூரோ. அரசியல் மற்றும் முழுமையான பொருளாதார ஒத்திணைவு இல்லாமல் இத்தகைய ஒரு கரன்சி ஒன்றிணைவை உருவாக்கியது, உண்மையிலேயே ஒரு வரலாற்று மிக்க சம்பவம்!

ரோம சாம்ராஜ்யத்துக்குப் பிறகு முதல் முறையாக ஐரோப்பிய நாடுகள் ஒரு பொது கரன்சியை ஏற்றுக் கொண்டுள்ளன. ஜனவரி முதல் தேதி முதல் யூரோ அமலுக்கு வந்த போதிலும் யூரோ நோட்டுகளும் நாணயங்களும் இன்னும் இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் பொது மக்களிடம் புழக்கத்துக்கு விடப்படும். கி.பி.2002 ஜனவரி வரை நிதி மற்றும் வர்த்தகப் பரிமாற்றங்களில் மட்டுமே யூரோ பயன்படுத்தப்படும்.


இப்பதினோரு நாடுகளின் கரன்சிகளில் யூரோவின் மதிப்பு எவ்வளவு என்பதும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் மறுபரிசீலனைக்கு உள்ளாகி நிர்ணயிக்கப்படும். இங்கிலாந்து, டென்மார்க், ஸ்வீடன் ஆகிய நாடுகள் யூரோவை இப்போது ஏற்றுக் கொள்ளவில்லை. கி.பி. 2002-ஆம் ஆண்டு அதை ஏற்றுக் கொள்வதாக அவை அறிவித்துள்ளன.

யூரோ 1999ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி, புழக்கத்துக்கு வந்ததையொட்டி பிரான்சில் அன்று பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும், அதன் பெயரில் 100 யூரோ வழங்கப்படும் என்று பிரான்சின் நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். யூரோ கரன்சி உருவானதைத் தொடர்ந்து பிரான்சு நாட்டு தபால் இலாகா வெளியிட்டுள்ள தபால் தலையில் அதன் மதிப்பு பிராங்கிலும் யூரோவிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த 1999 ஜனவரி நாணய ஒருங்கிணைப்பிற்கான விதை 1988 இல் நடைபெற்ற EU மாநாட்டில் ஊன்றப்பட்டது. ஒரு பொது பொருளாதாரம்/கரன்சி ஒருங்கிணைவு குறித்து EU தலைவர் ஜாக்குவஸ் டெலோர்சின் வேண்டுகோளைத் தொடர்ந்து இதற்கான அடிப்படைத் திட்டங்களும் பணிகளும் தொடங்கின.

இப்புதிய முயற்சியின் வெற்றி தோல்வி குறித்து இப்போது கணிப்பு எதையும் கூற இயலாதெனினும், இதன் தாக்கம் மிக் அழுத்தமானதாக இருக்கும். சுருக்கமாகச் சொல்வதானால் இது உறுப்பு நாடுகளின் பொருளாதாரத்தை மாற்றி அமைக்கும் செயல்முறையில் இரண்டு வித விலையமைப்பு இருக்கும். ஒன்று உள்ளூர் கரன்சியின் அடிப்படையில்; மற்றொன்று யூரோ கரன்சியின் அடிப்படையில். பரிவர்த்தனையின் போது யூரோவே அளவு கோலாகக் கொள்ளப்படும்.

1994 ஜனவரியில் ஐரோப்பிய நிதி



கரன்சி!

நிறுவனமும் 1998, மே மாதத்தில் ஐரோப்பிய மத்திய வங்கியும் துவங்கப் பட்டன.

யூரோ கரன்சி மூலம் ஐரோப்பிய நாடுகளிடையே சுற்றுலா போக்குவரத்தும் வர்த்தகப் பெருக்கமும் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய சுற்றுலா மேற்கொள்வோர் ஒவ்வொரு நாட்டிலும் நாணயம் மாற்றும்போது தாமதிக்கவோ தடுமாறவோ வேண்டாம். இந்தப் பொருளாதார மேம்பாடு அமெரிக்க டாலருக்கு ஈடுகொடுக்க ஐரோப்பிய நாணயங்களுக்கு உதவும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

— சு. ஜானகி
பத்தாம் வகுப்பு,
தூய வளனார் பெண்கள் மேல் நிலைப் பள்ளி,
கும்பகோணம்.

பெரிய மூளை உள்ள உயிரினம்

உலகிலுள்ள உயிரினங்களுள் யானையும் திமிங்கிலமும் மட்டுமே எடை மிகுந்த மூளைகள் கொண்டனவாகும். மனிதனுடைய மூளையை விடவும் எடை மிகுந்தவை. ஆனால் உடம்பின் எடையை ஒப்பு நோக்க மூளையின் எடையைப் பார்க்கும்போது மனிதனுடைய மூளைதான் மிகப் பெரியதாகும்.

மனிதனுடைய மூளையின் எடை உடம்பின் எடையில் 40ல் ஒரு பாகம். யானையின் மூளையின் எடை அதன் உடல் எடையில் 500ல் ஒரு பாகமாகும். திமிங்கிலத்தின் மூளையின் எடை அதன் எடையில் 12 ஆயிரத்தில் ஒரு பாகமாகும்.

ஆதாரம்: **அறிவியல் ஆயிரம்**
தகவல்: **டி.ஆர். பரிமளம்**



எங்கள் பள்ளியில் நடந்தது!



சிப்ஸ் என்றால்...

எங்கள் கணிப்பொறி ஆசிரியர் கணிப்பொறியிலுள்ள சிப்ஸ் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "சிப்ஸ் நிறைய செய்திகளைப் பதிவு செய்து கொள்ளும். அதன் விலையும் சற்று அதிகம்தான்" என்று கூறினார். அப்போது பாடத்தை கவனிக்காமல் ஒரு மாணவன் பென்சிலால் கிறுக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தார் ஆசிரியர். உடனே அவனை எழுப்பி "சிப்ஸ் எதற்குப் பயன்படுகிறது?" என்று கேட்டார். அவனோ "சாப்பிடப் பயன்படுகிறது" என்றான் சிறிதும் தயக்கமின்றி. ஆசிரியருக்குக் கோபம் வந்ததே பார்க்கலாம்!

– எஸ். நீரஜாக்ஷி,
பெரியார் நகர், சென்னை – 82


பொது சொத்து

முதல் நாள் நடத்திய பாடத்திலிருந்து ஆசிரியர் கேள்வி கேட்க ஆரம்பித்தார். ஒரு மாணவியை எழுப்பி "காமன் வெல்த் என்றால் என்ன?" என்று கேட்டார். உடனே "பொது செல்வம்" என்றாளே பார்க்கலாம்! வகுப்பே சிரித்தது. ஆசிரியர் அதே கேள்வியை என்னிடம் கேட்டார். நான் "பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற நாடுகள் அனைத்தும் தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்பட வைத்துக் கொண்டிருக்கும் அமைப்பே காமன் வெல்த்" என்றேன். உடனே ஆசிரியர் தவறாக பதிலளித்த மாணவியிடம் பத்து முறை இந்தப் பதிலை எழுதி வருமாறு கூறினார். "சார்! அவள் நேற்று லீவு" என்றேன். "இதைக் கூட அவள் சரியாகச் சொல்ல மாட்டாளா? நீதான் சொல்லணுமா" என்று கேட்டு உட்கார வைத்தார்.

– தி. சுபா,
திருவண்ணாதபுரம்,
நெல்லைமாவட்டம்.

பற்பொடி

மறுநாள் கல்விச் சுற்றுலா செல்ல இருந்தோம். ஆசிரியர் "மறக்காமல் பற்பொடி கொண்டு வாருங்கள்" என்றார்.



உடனே ஒரு மாணவன் எழுந்து "சார்! நாம போகிற இடங்களில் வேப்ப மரம் இருக்கும். அதில் குச்சி ஒடித்து பல் தேய்த்துக் கொள்ளலாம்" என்றான். "சரி! ரமேஷ் சொல்லிட்டான். யாரும் சாப்பாடு கொண்டு வராதீங்க.

சனி நீராடு என்றால் என்ன?

போகிற இடங்களில் விளைகிற நெல்லையே பறித்து, அரிசியாக்கி, சமைத்துச் சாப்பிடலாம்" என்று ஆசிரியர் கூற ரமேஷ் உட்பட அனைவரும் சிரித்தோம்.

– த. அறிவானந்தன்,
பதினோராம் வகுப்பு,
கந்தசாமி கண்டர் ஆண்கள்
மேல்நிலைப் பள்ளி,
வேலூர்.

என்ன பிரதேஷ்?

நாங்கள் ஆங்கிலப் பள்ளியில் படிக்கிறோம். ஆசிரியை பாடம் நடத்தி விட்டு



வரிசையாக ஒவ்வொரு மாணவனையும் ஒரு பகுதியை வாசிக்கச் சொன்னார். என் நண்பன் வாசிக்கும் போது 'மடையா பிரதேஷ், மடையா பிரதேஷ்' என்றான் இரு இடங்களில். ஆசிரியை குழம்பினார். மீண்டும் வாசிக்கச் சொன்னார். அப்போதும் அவன் 'மடையா பிரதேஷ்' என்றான். எல்லோரும் சிரித்தோம். "'அது மடையா பிரதேஷ் இல்லை. மத்திய பிரதேஷ்" என்று ஆசிரியர் திருத்தினார். அவன் ஆமோதித்துவிட்டு சரியாக வாசிக்கத் துவங்கினான்.

– கே. ஐஸ்வர்யா,
சக்தி விநாயகர் இந்து வித்யாலயா,
தூத்துக்குடி.

ஆட வேண்டும்

தமிழ் ஆசிரியர் பழமொழிகளைக் கூறி



அவற்றிற்கு விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார். திடீரென ஒரு மாணவனை எழுப்பி "சனி நீராடு என்பதற்கு விளக்கம் சொல்" என்றார். அந்தக் குறும்புக்கார மாணவன் எழுந்து ''சனிக்கிழமை நீங்கள் ஆட வேண்டும்" என்று வார்த்தைகளைப் பிரித்துப் பொருள் கூறினான். வகுப்பே சிரித்தது. ஆசிரியரும் சிரித்து விட்டு "சனி நீராடு என்றால் சனிக் கிழமை எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்" என்று விளக்கம் அளித்தார்.

– தே. இளங்குமரன்,
கருப்பனூர்,
வேலூர் மாவட்டம்.



எங்கள் பள்ளியில் நடந்தது!

விளையாட்டு அரங்கம்



• சச்சின்

• கங்குலி

• அசாருதீன்

புதிய கேப்டன்!

இந்தியாவும் பாகிஸ்தானும் உலக சாம்பியன் ஆஸ்திரேலியாவுடன் விளையாடச் சென்றன. இந்தியா – ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் – ஆஸ்திரேலியா எனத் தனித்தனியாக டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இந்தியாவும் பாகிஸ்தானும் ஆஸ்திரேலியாவிடம் தோல்வி அடைந்தன. அதற்குப் பின் மூன்று நாடுகளும் சேர்ந்து ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடினர். இதிலும் இந்தியா இறுதிப் போட்டியைக் கூட சந்திக்க முடியாமல் தோல்வி கண்டது. இறுதிப் போட்டி வரை சென்ற பாகிஸ்தானும் கோப்பையைக் கோட்டை விட்டது.

இந்திய அணியும் பாகிஸ்தான் அணியும் தாயகம் திரும்பின.

ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட தோல்விகளுக்குப் பொறுப்பேற்று பாகிஸ்தான் கேப்டன் வாசிம் அக்ரம் தனது பதவியிலிருந்து விலகினார். தற்போது இலங்கையுடன் விளையாடி வரும் பாகிஸ்தான் அணிக்கு சையத் அன்வர் கேப்டனாக இருக்கிறார். இவர் கேப்டன் பொறுப்பை ஏற்றுள்ளது இது இரண்டாவது தடவை.

அதேபோல் தற்போது தென்னாப்பிரிக்காவுடன் இந்திய அணி இரண்டு டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு தினப் போட்டிகளில் விளையாட உள்ளது.

இந்திய அணியின் கேப்டன் சச்சின் டெண்டுல்கரும் ஆஸ்திரேலிய சுற்றுப் பயண தோல்விகளுக்குப் பொறுப்பேற்று பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். அவர் தென்னாப்பிரிக்காவுடன் நடக்கும் இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டுமே கேப்டனாக இருக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில் இந்திய அணிக்கு அடுத்த கேப்டனாக செளரவ் கங்குலி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். கல்கத்தாவைச் சேர்ந்த இவருக்கு வயது 27.

முன்னாள் கேப்டன் அசாருதின் நீண்ட இடைவேளைக்குப் பின் இந்திய அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டிருக்கிறார். தென் ஆப்பிரிக்காவுடன் மோதும் முதல் டெஸ்ட்டில் பங்கேற்கும் வாய்ப்பு கையில் ஏற்பட்ட காயம் காரணமாக அஜய் ஜடேஜாவிற்குப் போய்விட்டது. அடுத்த டெஸ்ட்டில் அசாருதீன் விளையாடுவார்.

இந்த டெஸ்ட் போட்டிகளில் விளையாட தமிழகத்தைச் சேர்ந்த முரளி கார்த்திக் சேர்க்கப்பட்டு ஓரளவு சிறப்பாக ஆடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



கோகுலம் க்விஸ்

1. பர்மாவில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற பெண்மணி ________
2. டென்னிஸ் உலகில் முன்னணியில் இருக்கும் அமெரிக்க சகோதரிகள் ________, ________
3. மலேரியா நோய் ________ மூலம் பரப்பப்படுகின்றன.
4. அச்சு எழுத்துக்கள் உருவாக்கும் முறையைக் கண்டறிந்தவர் ________
5. காளான்கள் ________ மூலம் இனவிருத்தி செய்து கொள்கின்றன.
6. காகிதத்தைக் கண்டறிந்தவர்கள் ________
7. பீஹாரின் தலைநகரம் ________
8. மூங்கில் ________ இனத் தாவரம்.
9. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கோடை வாசஸ்தலம் ________
10. இந்தியாவில் உள்ள பெரிய பாலைவனம் ________

கோகுலம் சுழல் கோப்பை




கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப் பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல் கோப்பையைப் பெற வேண்டிய முயற்சியில் நீங்கள் இறங்கி உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். ஒரு பள்ளியில் ஒருவர் மட்டும் படைப்புகளை அனுப்பி வைத்து கோப்பையைக் கைப்பற்ற இயலாது. உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள். இன்னும் எட்டு மாதங்களே உள்ளன. விரைந்து செயல்படுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!


மேலே குறிப்பிட்டுள்ள கேள்விகளுக்கு விடைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள். முகவரி கூப்பனை ஒட்டி மறக்காமல் உங்கள் முழு முகவரியையும் எழுதுங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

முடிவு தேதி **30.4.2000.**

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 97





சார் தபால்

எங்களைப் போன்றே குறும்புக்காரர்!

✉ "மார்ச் இதழ் கண்டேன். கதை, கட்டுரை, வண்ணப் படங்கள், ஓவியப் போட்டி... இப்படி பாராட்டும் அம்சங்கள் நிறைய. கோகுலம் கழற்கோப்பை பள்ளி மாணவர்களுக்கும் பள்ளிக்கும் பெருமை சேர்க்கும் திட்டம் என்பதில் சந்தேகமில்லை" என்கிறார் சேலத்திலிருந்து கே. ஜகந்நாதன்.

✉ காஞ்சிபுரத்திலிருந்து ராஜகுமாரி "சாலை சர்க்கஸ்! என்று தலைப்பு தாங்கிய அட்டைப் படமும் சாலைப் பாதுகாப்பு பற்றிய வண்ணப் படங்கள் நிறைந்த கட்டுரையும் வெகுவாக ஈர்த்தன. அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இவை" என்கிறார்.

✉ "கோகுலத்தில் வரும் படக் கதைகள் அனைத்தும் நகைச்சுவையாக உள்ளன. 'சூரியனை மீட்ட மந்திரி' கதை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது" என்கிறார் கீழச் செக்காரக்குடியிலிருந்து எஸ்.எஸ்.கே.எஸ். தங்கராஜ்.

✉ இராமநாதபுரத்திலிருந்து வி.அஜய் ராஜா "புதிர்கள், விடுகதைகள், துணுக்குகளை 25 பைசா தபால் கார்டில் எழுதி அனுப்பலாமா? தயவு செய்து பதில் கூறுங்கள்" என்கிறார்.

25 பைசா தபால் கார்டிலேயே உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்கலாம் அஜய் ராஜா.

– ஆர்.

✉ "நமக்கு ஏன் பசிக்கிறது? என்ற கட்டுரை பல தெரியாத செய்திகளைத் தெளிவாக எடுத்துக் கூறியது. வயிறு காலியாக இருப்பதற்கும் பசிப்பதற்கும் தொடர்பில்லை என்று படித்தபோது மிகவும் ஆச்சர்யமாக இருந்தது" என்கிறார் கழுதியிலிருந்து ஜெ. ராமலக்ஷ்மி.

✉ அறந்தாங்கியிலிருந்து கே. பிரசன்னா "எங்கள் ஊருக்கு வாருங்கள் என்ற பகுதியில் வெளியாகும் ஒவ்வொரு ஊரின் அருமை, பெருமைகளைப் படிக்கும்போது அந்த ஊர்களைப் பார்க்க மனத்தில் ஆர்வம் ஏற்படுகிறது. மார்ச் இதழில் எங்கள் மாவட்டத்தைப் பற்றி வெளிவந்ததில் எனக்கு ரொம்பவே சந்தோஷம்" என்கிறார்.


✉ "வாசிம் அக்ரமைப் பற்றிய செய்திகள் குறைவாக இருந்தாலும் நிறைவாக இருந்தது. அடுத்த கோகுலம் இதழில் நம் இந்திய அணியினரைப் பற்றி எழுதும் அளவிற்கு தென் ஆப்பிரிக்காவுடன் நடக்கும் போட்டிகள் இருக்கும் என்று நம்புகிறேன்" என்கிறார் உடுமலைப்பேட்டையிலிருந்து எஸ். ராம்குமார்.

✉ நன்னிலத்திலிருந்து ஆறாம் வகுப்பு படிக்கும் ப்ரியா "ஹா, ஹா, ஹா! பகுதி உண்மையிலேயே சிரிப்பை வரவழைத்தது" என்கிறார்.

✉ "சடகோபன் ரமேஷின் குழந்தைப் பருவம் பற்றிப் படிக்கும்போது எங்களைப் போன்று அவரும் பல குறும்புகள் செய்திருக்கிறார் என்பது புரிந்தது. ரமேஷைப் பற்றி எழுதி எங்களைப் போன்ற கிரிக்கெட் விசிறிகளுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தி விட்டீர்கள். அடுத்த குழந்தைப் பருவம் யாருடையது?" என்கிறார்கள் திண்டுக்கல்லிலிருந்து எம். சுதாகர், சென்னையிலிருந்து ஆர். யாதவ்.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

பிருந்தாவனம்



கன்று தாயை அடைய வழிகாட்டுங்கள்!



''தியேட்டரில் 'ஏ'ரோவில் இருக்கிறவங்களுக்கு மட்டும் படம் தெரியாது. ஏன் தெரியுமா?''

''ஏண்டா?''

''அவங்களுக்கு முன்னால தான் 'பீரோ' இருக்குமே!''

– ப. கணேஷ்


வரைந்து பழகுங்கள்!



தோல்வி என்பது தள்ளி போடப்பட்டிருக்கும் வெற்றி. அவ்வளவு தான்! அதில் உற்சாகம் இழக்க ஒன்றுமில்லை.

- சுவாமி சுகபோதானந்தா

தகவல்: ஏ.கோவிந்தன்



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

CSC
COMPUTER EDUCATION



SUMMER HOLIDAY COURSES

Specially designed for 10 to 15 Years Old School Children

வாண்டுகளா ...,

COMPUTER FEST "2000" IS WAITING FOR YOU

Junior Diploma in Computer Science (JDCS)

Duration : 1 Month (3 hrs per Day)

Course Highlights

Level-I (Age 10-12 Years)

- Introduction To Computers
- Typing Skills
- Computer Languages
- Windows 95
- Paint Brush
- Internet
- Edutainment

Level-II (Age 13-15 Years)

- Introduction To Computers
- Computer Languages
- Windows 95
- Powerpoint & Logo
- Internet
- WordPad
- Edutainment

Contact Your Nearest CSC, 150 Centres All over South India